உ

# தமிழறிஞர் சரித்திரம்

(வட்டுக்கோட்டைத் தொகுதி)

தாபிதம்:-1964

கற்றுணர்ந் தொழுகுக

வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச் சங்க வெளியீடு - 9

# தமிழறிஞர் சரித்திரம்

## (வட்டுக்கோட்டைத் தொகுதி)

இ. ப. ...சன் (பெரு...)
ஞாபகார்த்த அன்பளிப்பு
இல. 84/3, வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்



★ ★
★

சங்க வெளியீடு: 9

# தமிழறிஞர் சரித்திரம்

( வட்டுக்கோட்டைத் தொகுதி )

*பக்கங்கள் :*

I — XI + 171

*வெளியிடுவோர் :*

வட்டுக்கோட்டைத் தொகுதிச் தமிழ்ச் சங்கத்தார்



*உரிமை :*

மேற்படி சங்கம்

*படிகள் :*

500

*விலை :*

ரூபா 100/-

*அச்சுப்பதிவு :*

திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.

*அட்டை முகப்பு வேலை :*

சைத்திரீகர் ஆ. ஞானசேகரம், சங்கானை.

*வெளியிட்ட காலம் :*

1994 டிசம்பர்

# பொருளடக்கம்

| | பக்கம் |
|---|---|
| வெளியீட்டுரை | IV |
| வாழ்த்துரை | VII |
| காணிக்கை | VIII |
| பாராட்டுப் பாக்கள் | IX |
| நன்றி கூறுகின்றோம் | X |
| தமிழறிஞர் — அராலி | 1 — 12 |
| தமிழறிஞர் — காரைநகர் | 13 — 60 |
| தமிழறிஞர் — சங்கானை | 61 — 68 |
| தமிழறிஞர் — சித்தன்கேணி | 69 — 77 |
| தமிழறிஞர் — சுழிபுரம் | 78 — 92 |
| தமிழறிஞர் — செட்டிகுறிச்சி | 93 — 103 |
| தமிழறிஞர் — தொல்புரம் | 104 — 112 |
| தமிழறிஞர் — பண்ணாகம் | 113 — 121 |
| தமிழறிஞர் — பொன்னாலை | 122 — 131 |
| தமிழறிஞர் — மூளாய் | 132 — 133 |
| தமிழறிஞர் — வட்டுக்கோட்டை | 134 — 160 |
| தமிழறிஞர் — வடலியடைப்பு | 161 — 167 |
| இச்சங்க நிர்வாகிகள் 1994 | 168 — |
| இந்நூல் வெளியீட்டுக்கு நிதியுதவினோர் | 169 — 170 |

கடவுள் துணை

# வெளியீட்டுரை

வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச்சங்கம் 1964 ஆம் ஆண்டில் நிறுவப்பெற்றது. அதன்நோக்கங்களுள் ஒன்று தமிழறிஞரின் சரித்திரத்தையும் அவர்களின் ஆக்கங்களையும் தேடியெடுத்து ஆராய்ந்து அச்சேற்றி வெளியீடு செய்ய வேண்டும் என்பது. அதற்கேற்ப இப்பொழுது இத்தொகுதித் தமிழறிஞர் சரித்திரத்தை விரிவாக எழுதியும், அவர்களுடைய ஆக்கங்களைச் சுருக்கமாகக் குறிப்பிட்டும் வெளியீடு செய்கின்றோம்.

முதலில் ''பாவலர் சரித்திர தீபகம்'' என்னும் பெயரில் ஆணல்ட் சதாசிவம்பிள்ளை அவர்களாலும், பின்பு ''தமிழ்ப் புலவர் சரித்திரம்'' என்னும் பெயரில் சுன்னுகம் குமாரசுவாமிப் புலவர் அவர்களாலும், அதன்பின் 1939 ஆம் ஆண்டில் ''ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரித்திரம்'' என்னும் பெயரில் மகாவித்துவான் சி. கணேசையர் அவர்களாலும், மேலும் ''தமிழ் தந்த தாதாக்கள்'' என்றபெயரில் பல்கலைப்புலவர் குலரத்தினம் அவர்களாலும் தமிழறிஞர் சரித்திரம் வெளியிடப்பட்டது. 1966 இல் பேராசிரியர் ஆ. சதாசிவம் அவர்கள் ''ஈழநாட்டுத் தமிழ்க்கவிதைக் களஞ்சியம்'' என்னும் பெயரில் அறிஞர் சரித்திரத்தை மிகச்சுருக்கியும், அவர்களின் ஆக்கமான கவிதைகள் ஓரளவு இடம்பெறவும் வெளியீடு செய்தார்கள்.

இவர்கள் அனைவரும் வெளியிட்ட நூல்களில், இந்த வட்டுக்கோட்டைத் தொகுதியைச் சேர்ந்த பத்துக்கும் உட்பட்ட சிலரின் சரித்திரமே இடம் பெற்றுள்ளது. இந்தத் தொகுதியில் முன்பு வாழ்ந்தோரும் இன்று

வாழ்வோருமான தமிழறிஞர்கள் 93 பேரின் சரித்திரத்தைச் சங்கத்தார் பலவாறு முயன்று தேடிப் பெற்று ஆதாரங்களுடன் வெளியிடுகின்றனர்.

எங்கள் தமிழ்ச்சங்க யாப்பின்படி பண்டிதர் புலவர் வித்துவான் B. O. L. பட்டதாரிகளும், தமிழிலோ சமயத்திலோ (Honours) சிறப்புச் சித்திபெற்ற B. A. M. A. பட்டதாரிகளும் தமிழறிஞர் எனக் கொள்ளப் படுவர் இற்றைக்கு எண்பது ஆண்டுகளில் இருந்து இங்கு வாழ்ந்தோரும் வாழ்வோருமே இப்பட்டங்களைப் பல்கலைக்கழகங்களாலும், அரசின் அங்கீகாரம் பெற்ற சங்கங்களாலும் பெறும் வாய்ப்பு மிகுதியும் இருந்தது. எண்பதுக்கு முந்தி வாழ்ந்தவர்கள் அக்காலத்துக் கல்விமான்களாலும் ஊர்ப் பொதுவான சபைகளாலுமே புலவர், பாவலர், வரகவி, பண்டிதர் என்று பட்டம் வழங்கிச் சிறப்பிக்கப் பெற்றவர்கள். அவர்களையும் தமிழறிஞராக நாங்கள் அநுவதித்துள்ளோம். நாடளாவிய புகழ்பெற்ற சொல்லின் செல்வர்களையும், சமயத்துறையில் பெருநிலைகண்டவர்களையும், புகழ் பெற்ற மரபுவழி எழுத்தாளரையும் தமிழறிஞர்களாக ஏற்று இத்தொகுப்பில் இடம்பெறச் செய்துள்ளோம. இந்த வட்டுக்கோட்டைத் தொகுதியிற் பிறந்தவர்களே யன்றி, வேறுதொகுதிகளிற் பிறந்து இங்குவந்து திருமணஞ்செய்து வாழ்ந்த—வாழுகின்ற அறிஞரும் இத் தொகுதியினராகவே கொள்ளப்படுகின்றனர்.

அறிவும் அனுபவமும் மிக்க சான்றோரிடமிருந்து செய்திகள், வாழ்க்கைக் குறிப்புக்கள் பெறும் நோக்கத்துடன் முதலில் செய்தித்தாளில் விளம்பரஞ் செய்திருந்தோம். மிகச்சில செய்திகளே கிடைத்தன. எனினும் தேவையான ஆதரவு கிடைக்கவில்லை. எமக்குக் கிடைத்த செய்திகளின்படியும், விசாரித்துப் பெற்ற குறிப்புக்களின் படியுமே சரித்திரம் எழுதப்பட்டது. சிலருடைய சரித்திரம் நாம் பலவகையில் முயன்றும்

பெற்றுக் கொள்ள முடியவில்லை. எனினும் அவர்கள் தமது சரித்திரத்தை எழுதியனுப்புவதோடு, வெளியீடு செய்ய உதவியும் வழங்கினால் அடுத்த பதிப்பில் அவற்றையும் சேர்த்து வெளியிடுவோம்.

இங்கு வாழ்ந்து மறைந்த தமிழறிஞரின் சரித்திரம் முன்னைய சரித்திர ஆசிரியரின் அடியொற்றியும், விசாரித்தறிந்தும் ஒப்புநோக்கி விரிவாக எழுதப் படுகின்றது. இன்று வாழ்ந்து வரும் அறிஞரின் சரித்திரம் அவர்களிடம் கேட்டறிந்து எழுதப்படுகின்றது.

வருங்காலத்தில் இத்தொகுதித் தமிழறிஞர் சரித்திரம் பற்றியும், அவர்களின் ஆக்கங்கள் பற்றியும் ஆராயவும் விமர்சனம் செய்யவும் முயல்வோருக்கு இஃது பெரிதும் உதவும். ஏனைய தொகுதிகள் தோறும் வாழ்ந்தோரும் வாழ்ந்துவருபவருமான தமிழறிஞரின் சரித்திரத்தை ஆங்காங்குள்ள சங்கங்கள் ஆராய்ந்து வெளியிட இந்த வெளியீடு வழிகாட்டியாய் அமையும் எனவும் கருதுகின்றோம்.

இந்தத் தொகுதியில் உள்ள ஊர்களை அகரவரிசைப் படியும், அவ்வவ்வூரைச் சேர்ந்த தமிழறிஞர்களைக் காலவரிசைப்படியும் இருக்கும் வண்ணம் இதனை அமைத்துள்ளோம்.

சரித்திரத்திற்கு உரியவர்களிடம் அவர்களின் பாஸ்போட் அளவு புகைப்படப் புளொக்குகளை தந்து உதவுமாறு கேட்டிருந்தோம். தந்தவர்கள் சிலரின் படங்களே இடம்பெறுகின்றன.

— தமிழ்ச் சங்கத்தார்

# வாழ்த்துரை

வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச்சங்கத்தார் தொகுத்து வெளியிடும் ''தமிழறிஞர் சரித்திரம்'' என்னும்இந்நூலுக்கு வாழ்த்துரை வழங்குவதில்மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன். நமது மண்ணிலே வாழ்ந்த-வாழுகின்ற அறிஞர்களுடைய முழுமையான வரலாற்றை எழுதுவதற்குத் தொகுதி அடிப்படையில் முதலில் ஆவணப்படுத்தவேண்டும். இந்த வகையில் சங்கம் வட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள தமிழறிஞர்களுடைய வரலாற்றை முடிந்த வரையில் விரிவாக எழுதி இம்முயற்சிக்கு நல்ல தொடக்கத்தினைச் செய்துள்ளது.

தொகுதி தொகுதியாக அறிஞா குழாங்களை இனம் காணுவது ஒருவகையிலே பயனுடையது. தேசிய மட்டத்திலே சிறப்புடையவர்களின் வரலாறு பல இடங்களிலே ஆவணப்படுத்தப்படும். ஆனல் தொகுதிகளில் மட்டும் சிறப்புடையவர்களாயுள்ளோரையும் நாம் நினைவுகூரவேண்டியது இன்றியமையாததாகும். பல்வேறு வகைகளிலே சிறப்புப் பெற்றவர்களுடைய வரலாறு மாணவர்களுக்கு நல்ல எடுத்துக்காட்டாக விளங்க வல்லது.

இந்நூல் மாணவர்களுக்கும் ஆய்வாளருக்கும் நல்ல பயனளிக்கும். மாணவருடைய ஆளுமை வளர்ச்சிக்கு இதுபோன்ற நூல்கள் பயனளிக்கக் கூடியன.


பிற தொகுதிகளைச் சேர்ந்த அறிஞர்களுடைய வரலாறும் இந்த வகை காட்டியை அடிப்படையாகக் கொண்டு எழுதப்படுதல்வேண்டும். இந்தமுயற்சிக்கு வழிகாட்டும் வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச் சங்கத்தாருக்குத் தமிழுலகம் கடமைப்பட்டுள்ளது. இவர்களின் முயற்சியை மனதாரப் பாராட்டி எனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

யாழ். பல்கலைக்கழகம்.
*1994 - 12 - 10*

**பேராசிரியர், கலாநிதி**
**அ. சண்முகதாஸ்**
தலைவர், தமிழ்த்துறை,

பொருள் நூல் விற்பன்னர், தமிழ்மணி

# புலவர் நா. சிவபாதசுந்தரனுர்



இந்தச் சரித்திர நூலைச் சங்கம் விரைவில் அச்சிட்டு வெளியீடு செய்யவேண்டும் என்று பெரிதும் ஊக்கப்படுத்தியவரும் இச்சங்க அமைப்பாளரில் ஒருவரும் ஆகிய தொல்புரக்கிழார் புலவர் நா. சிவபாதசுந்தரனுர் 1993 - 12 - 16 இல் அமர வாழ்வு எய்தினுர்கள். அவர்களின் முதலாமாண்டு நிறைவையொட்டி இதனை அவருக்குக் காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றோம்.

1994 - 12 - 16 தமிழ்ச்சங்கத்தார்

## பாராட்டுப் பாக்கள்

தமிழமுதக் கவிசெய்தோர் சாகார்; தெய்வ
கமழுமணம் நுகர்ந்தோரும் காலம் வெல்வார்;
அமிழவதிற் றோய்ந்தோரும் அமர ராவார்;
உமிழவிழுந் திவலைநுகர்ந் தோரும் உம்பர்,

சொட்டிடும்தேன் தமிழ்க்கடலின் கரையிற் சும்மா
நெட்டிருந்தோர் நிலமிருக்கும் வரையும் வாழ்வார்;
தொட்டவரும் அமரர்களாம்; தொன்னூ லிற்கை
பட்டவரும் இறப்பறியார் பான்மை ஈதே.

சாகார்கள் வாழ்ந்தகதை தமிழிற் சொல்லிப்
பாகாக்கிப் படைத்தவரும் பரம ராஞர்;
பாகோத்துப் பழகுதமிழ் வட்டூர்ச் சங்கம்
பூகாத்துப் புனிதகதை தொகுத்தார் தாமே,

**பண்டிதர் க. சச்சிதானந்தன்**, B. A. (Hons) Lond,
M. Phil (Lond) Dip-in-Edu. (Lond)

மாவிட்டபுரம்,
தெல்லிப்பளை.
*1994 - 12 - 10*

# நன்றி கூறுகின்றோம்

* இந்நூலில் இடம்பெறும் அறிஞரின் சரித்திரத்தைச் சென்ற 3 ஆண்டுகளாக, அவர்கள் வாழும் இடங்கள்தோறும் தேடிச்சென்று விசாரித்து ஆராய்ந்தே எழுதித் தொகுத்தோம். இந்த வகையில் எங்களுக்கு உறுதுணையாயிருந்து உதவியவர்கள் பண்டிதர் ம. ந. கடம்பேசுவரன், பண்டிதர் க. வைத்தீசுவரக்குருக்கள் என்போர்.

* இதனை அச்சிடுவதற்கு வேண்டிய நிதியைத் திரட்டுவதில் பேருதவி புரிந்தவர்கள் ஆசிரியர் வ. சுப்பிரமணியம், ஆசிரியர் ஆ. கனகரத்தினம், பண்டிதர் ப. இராசகுரு, திரு. ச. திருச்சிற்றம்பலம் கதிர். சரவணபவன், திரு. இ. தம்பையா என்போர்.

* இதன் அச்சுவேலை நடைபெறும்போது உடனுக்குடன் எம்முடன் சரவைத் தாள்களை ஒப்புநோக்கித் திருத்திச் செப்பஞ் செய்து உதவியவர்கள் பண்டிதர் க. உமாமகேசுவரன் அவர்களும் பண்டிதர் கடம்பேசுவரன் அவர்களும் ஆவர்.

* சரித்திரத்தில் இடம்பெறுபவர்களும், அவர்களின் தொடர்புடையவர்களும், நன்மைவிரும்பிகள் சிலரும் இந்நூலை அச்சிடுவதற்கு வேண்டிய நிதியை உபகரித்தார்கள்.

* அச்சுவேலையை அழகாகவும் செப்பமாகவும் செய்தவர்கள் சுன்னாகம் திருமகள் அழுத்தகத்தினர், நூலின் முகப்பு அட்டையை அழகுபட ஆக்கியவர் சங்கானை ஞானம் ஆட்ஸ் நிறுவன முதல்வர் திரு. ஆ. ஞானசேகரம் அவர்கள்.

* இந்நூலுக்கு வாழ்த்துரை வழங்கியவர் யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத்தலைவர், பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ் அவர்கள்,

* இதற்கு பாராட்டுப் பாக்கள்நல்கியவர் யா. ஆ. தி. பா. சங்கத்துணைத்தலைவருள் ஒருவரான பண்டிதர் க. சச்சிதானந்தன் அவர்கள்.

* இந்நூலை வெளியீடு செய்தவற்குப் பல்வகையாக உதவிபுரிந்தவர் எங்கள் சங்கக் காப்பாளரும், தென்னிந்திய திருச்சபை அத்தியட்சகரும், பேராயருமாகிய கலாநிதி எஸ். ஜெபநேசன் அவர்கள்,

* இந்நூலின் அன்பளிப்புப் பிரதி, முதற் பிரதிகள், சிறப்புப் பிரதிகள் வாங்கி உதவியவர்கள் அன்புள்ளங் கொண்ட வள்ளல்கள்.

* இவர்கள் அனைவருக்கும் எங்கள் சார்பிலும், சங்க நிர்வாகிகள் சார்பிலும் மனமுவந்து நன்றிகூறுகின்றோம். வணக்கம்.

அ. ஆறுமுகம்
தலைவர்

மு. சு. வேலாயுதபிள்ளை
பொதுச்செயலர்

*1994 - 12 - 10*

## 1 அராலி

| | |
|---|---|
| இராமலிங்கமுனிவா | *1649 — 1717* |
| அருணாசலம்பிள்ளை | *— 1780* |
| நாராயணசாத்திரிகள் | *— 1820* |
| முத்துக்குமாருப்பாவலர் | *— 1827* |
| விசுவநாதசாத்திரிகள் | *— 1836* |
| கலாநிதிசதாசிவம் | *1926 — 1988* |
| பண்டிதை அமிர்தவல்லி | *1938 —* |
| பண்டிதை தையல்நாயகி | *1941 —* |
| பேராசிரியர் சிற்றம்பலம் | *1941 —* |

# இராமலிங்க முனிவர்

## 1649 — 1717

யாழ்ப்பாணத்தை அரசாண்ட கூழங்கைச் சக்கர வர்த்தியால் இந்தியாவில் நின்றும் அழைத்துவரப்பட்ட அந்தணர் மரபில் வந்தவரான இவர், அராலியில் வாழ்ந்த சந்திரசேகர சாத்திரிகளின் மைந்தர். தமிழ் வடமொழி இரண்டிலும் வல்லவர். சோதிடக் கலையிலும் பாண்டித் தியம் பெற்றவர்.

தமது 18ஆம் வயசில் 16 - 05 - 1667இல் வாக்கிய பஞ்சாங்கத்தை முதல்முதற் கணித்துக் கையெழுத்துப் பிரதியாக வெளிப்படுத்தியவர். அந்தப் பஞ்சாங்கம் இவருக்குப்பின் இவரின் பரம்பரையினரால் தொடர்ந்து கையெழுத்துப் பிரதியாகக் கணிக்கப்பட்டு வழங்கி வரலாயிற்று.

இராமலிங்க முனிவர் பழமொழிப் பிரபந்தம், சந்தானதீபிகை ஆகிய நூல்களையும் ஆக்கியவர். சந்தான தீபிகை 01-01-1713இல் வடமொழியிலிருந்து பெயர்த்துத் தமிழில் எழுதப்பட்ட நூலாகும். இஃது 122 விருத்தப் பாக்களைக் கொண்டது.

கடலான கலைஞான தேசிகனைக்
கயமுகனைக் குகனைக் கான்சூழ்
மடலார்தண் பூவினிலும் நாவினிலும்
வதிந்தருளும் வாணி மானை
அடலாரும் ஒன்பதுகோ ளாகியவா
னவர்கடமை அடிய னேன்றன்
இடரான தறத்துரப்பீர் அருள் சுரப்பீர்
புரப்பீரென் றிறைஞ்சு வேனே.

நன்னூலாம் வடமொழிச்சந் தானதீ பிகையதனை நலங்கு லாவு
தொன்னூலாய் பவர்தாமும் ஆராய்ந்து கொண்டாடத் தெரித்தல் வேண்டி
மின்னூலாம் இடைவாணி மெய்யருளால் நெஞ்சகத்தும் புறத்தும் மேவும்
முந்நூலான் சந்திரசே கரன்புதல்வன் இராமலிங்க முனிவன் தானே

இவை சந்தான தீபிகைச் சிறப்புப் பாயிரப் பாடல்கள்

ஆதாரம் : 1. ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரித்திரம் — சி. கணேசையர்
2. ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம் — ஆ. சதாசிவம்

# அருணாசலம்பிள்ளை

## — 1780

அராலியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் மாதகல் சிற்றம்பலப் புலவரிடம் தமிழிலக்கிய இலக்கணங்களைக் கற்றவர். காரிகை என்னும் நூலில் சிறந்த அறிவுடையவர். சோதிடக் கலையிலும் வல்லவர். பாக்கள் இயற்றுவதிலும் வல்லவரெனப் பலரும் கூறுவர். அவரியற்றிய பாடல்களில் எதுவும் கிடைத்திலது.

மாதகல் சிற்றம்பலப் புலவர் காலம் இற்றைக்கு 260 வருடங்களுக்கு முன் எனப்படுவதால், அருணாசலம் பிள்ளை காலத்தையும் அதுவாகக் கொள்ளலாம். "ஒல்லாந்தர் இந்த நாட்டை யாண்ட கடைசிக் காலத்தில் இவர் இருந்தவராதல் வேண்டும்" என்று பேராசிரியர் பொ. பூலோகசிங்கம் கூறுவதும் நோக்குக.

ஆதாரம் : 1. ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரித்திரம் — சி. கணேசையர்
2. ஈழத்தில் தமிழ்வளர்ச்சி — பொ. பூலோகசிங்கம்

---

உலகிலெங்கும் இணையிலாத உண்மைபாடும் புலவர்கள்
உணர்ச்சிதன்னை வானைத்தாண்டி உயரச்செய்த நாவலர்
கலகமற்றுக் களிசிறக்கக் கவிதைசொன்ன நாட்டிலே
கைகுவித்துப் பொய்கள்பாடிக் காலந்தள்ளல் ஆகுமோ.

வீரத்தின் நிறைவான தமிழ்நாடு வாழ்க
வித்தைக்கு உறைவான தமிழ்நாடு வாழ்க
சூரத்தின் துணையான தமிழ்நாடு வாழ்க
துட்டர்க்குப் பணியாத தமிழ்நாடு வாழ்க.

— நாமக்கல் கவிஞர்.

# நாராயண சாத்திரிகள்

## — 1820

இவர் இராமலிங்க முனிவரின் மரபிலே வந்தவர். தமிழ், வடமொழி இரண்டிலும் வல்லவர். இவரது தந்தையார் தில்லைவாழந்தணரில் ஒருவரான நடராச சாத்திரிகள். கணித சிந்தாமணியின் ஒரு பகுதியாகிய பரகிதகணிதம் என்ற சோதிடநூலை நாராயணசாத்திரிகள் இயற்ற, அதனை அவரது இரண்டாவது குமாரராகிய விசுவநாத சாத்திரிகள் புதுக்கியும் விளக்கியும் வெளியிட்டார். பரகிதகணிதவரலாறு பற்றியும், நூலாசிரியர் பற்றியும் பின்வரும் பாடல்கள் சான்று பகரும்.

பூவுல குய்ய முன்னுட் புகரிலா வரரு சிப்பேர்ப்
பாவலன் வடநூல் தன்னிற் பண்ணிய கணிதந்தன்னை
வீவறு தமிழிற் சொல்வன் விருத்தப்பா வதனி னிந்நூல்
மாவுறு கணித சிந்தா மணியென நாமம் வைத்தே

வாமனை யனைய தொல்லோன் வகுத்திடுங் கணிதந் தன்னைத்
தேமிகுந் தமிழினலே செய்தனன் தில்லை மூதூர்
நாமமூ வாயி ரர்க்குள் நடராச சாமி நல்கும்
மாமலர் மரும நாரா யணனெனும் மறைவல் லோனே.

ஆதாரம் : 1. பரகித கணிதம்
2. ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரித்திரம் — சி. கணேசையர்

---

வாள்கொண்டு நேர்நின்று போர்தந்த போதும்
வஞ்சங்கள் புரியாத தமிழ்நாடு வாழ்க
கோள்கொண்டு பொய்சொல்லிக் குற்றேவல் செய்யாக்
குணம்மிக்க சனம்மிக்க தமிழ்நாடு வாழ்க.

— நாமக்கல் கவிஞர்.

# முத்துக்குமாருப் பாவலர்

## —1827

இவர் பிறந்த இடம் அராலி. நிரம்பிய தமிழ்ப் புலமையுடையவர். அனலைதீவில் திருமணம்செய்து, ஊர் காவற்றுறையில் ஆசிரியராகக் கடமையாற்றியவர். இவர் இயற்றிய நூல்கள் : சீமந்தனி நாடகம், பதுமாபதி நாடகம், குறவஞ்சி, தேவசகாயம்பிள்ளை நாடகம் என்பன.

தேவசகாயம் பிள்ளை நாடகம் 1827இல் இயற்றப் பட்டது. இந்தநூலில் சேவகர் கூற்றாக வரும் பாட லொன்றைக் காட்டுகின்றோம்.

ஆன்றநஞ் சுகுக்கும் வளையெயிற் றரவின்
அரும்பொறி தன்பதம் நெரிய
ஊன்றியே அவனி முழுவதும் புகழ
ஒருகுடை நிழற்றியெந் நாளும்
தோன்றுசீர் வஞ்சி வனமேந்த்ர ராயன்
சொற்படி அதிகாரம் செலுத்தும்
மூன்றென உரைக்கும் அதிகாரத் துரையே
முதல்வநின் அடிபணிந் தோமே.

ஆதாரம் : ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம் — ஆ. சதாசிவம்

---

படையாமல் உண்ணாத தமிழ்நாடு வாழ்க
பகையாரும் எண்ணாத தமிழ்நாடு வாழ்க
அடையாத துன்பங்கள் அவைவந்த போதும்
அநியாயம் எண்ணாத தமிழ்நாடு வாழ்க.

— நாமக்கல் கவிஞர்.

# விசுவநாத சாத்திரிகள்

## — 1836

முதன்முதல் வாக்கிய பஞ்சாங்கத்தைக் கணித்து வெளியிட்ட இராமலிங்க முனிவரின் வழியில் வந்தவர் இவர். தமது தந்தையாராகிய நாராயண சாத்திரிகள் எழுதிய பரகித கணிதத்தை இவர் பரிசோதித்து வெளியிட்டார்.

தமிழ், வடமொழி யிரண்டிலும் வல்லவரான இவர், சோதிடக் கலையிலும் பெரும் புலமை பெற்றிருந்தார். அந்தக் காலத்தில் இலங்கையிற் கணிக்கப்பட்ட பஞ்சாங்கங்களுக்குள் இவருடைய பஞ்சாங்கம் பெருமதிப்புப் பெற்றிருந்தது. இலங்கைத் தேசாதிபதியால் இவர் “இராசாவின் கணிதர்” என்னும் விருது சூட்டப் பெற்றவர்.

இவரியற்றிய நூல்கள் :- வண்ணைக் குறவஞ்சி, நகுலமலைக் குறவஞ்சி, வாக்கிய கரண கிரகணம் என்பன. வண்ணைக் குறவஞ்சி பாடலொன்றைப் பார்ப்போம்

சித்திர முரளிக் கண்ணர் சிறந்தவா மனத்த ராசை
வத்திர முடையர் அஞ்சக் கரத்தர்பொன் வனத்தா மத்தர்
இத்திற அயன்மால் ஈசன் இவர்களி லிறைவ ரான
அத்தர்தாள் வணங்கி வண்ணைக் குறவஞ்சி யறைகு வேனே.

இப்பாடலின் முதலிரண்டடியும் பிரமா, திருமால், உருத்திரன் மூவருக்கும் சிலேடையாக அமைந்துள்ளது. விளக்கம் வருமாறு:

முளரிக்கண்ணர் :

1. தாமரைப்பூவை ஆசனமாக உடையவர் (பிரமா)
2. தாமரை மலர்போலும் கண்ணையுடையவர் (திருமால்)
3. அக்கினிக் கண் உடையவர். (உருத்திரன்)

சிறந்தவாமனத்தர் :

1. சிறந்து விரும்பப்படும் அன்னவா கனத்தினர்.
2. சிறந்த குறள்வடிவம் கொண்டவர்.
3. அன்பிற் சிறந்தனவாகிய மனங்களில் இருப்பவர்.

ஆசை வத்திரமுடையர் :

1. திக்குக் கொன்றுக முகமுடையவர்.
2. பொன்னுடை யணிந்தவர்.
3. திக்காகிய உடையை உடையவர்.

அஞ்சக்கரத்தர் :

1. அன்னக் கொடி பிடித்த கையினையுடையவர்.
2. அழகிய சக்கரத்தை உடையவர்.
3. ஐந்தெழுத்து மந்திரம் உடையவர்.

பொன்வனத்தாமத்தர் :

1. பொன்னிறமாகிய ஒளியுடையவர்.
2. அழகிய துளசிமாலையையுடையவர்.
3. பொன்போன்ற கொன்றை மாலையை உடையவர்.

ஆதாரம் : 1. ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரித்திரம்—சி. கணேசையர்.
2. ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம்—ஆ. சாதசிவம்.

---

முந்தேறு கிருதயுக பூபதிமாந் தாதாவும் முடிந்து போனன்
நந்தேறு கடலடைத்த செயராமச் சந்திரனும் நடந்து விட்டான்
வந்தேறு குருகுலத்துத் தருமன்முதல் மகிபர்எலாம் மாய்ந்து போனர்
அந்தோஇங் கிவரொடும்போ காதபுவி நின்னேடுதான்
அடையும் ஐயா.

— சுன்னுகம் குமாரசுவாமிப்புலவர்.

# கலாநிதி சதாசிவம்

## 1926 — 1988

அராலியூரிற் பிறந்த இவரது தந்தையார் ஆறுமுகம். தாயார் பார்வதி. அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம், அராலி இந்துக்கல்லூரி என்பவற்றிற் படித்துத் தமிழ் மொழி மூலமான சி. பா. த. பரீட்சையில் முதற் பிரிவிற் சித்தியடைத்தார் பின்பு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிற் கற்று ஆங்கில மொழிமூலமான சி. பா. த. பரீட்சையில் முதற் பிரிவிற் சித்தியடைந்தார்.

1947 ஆம் ஆண்டில் கொழும்பு ஆனந்தா கல்லூரியிற் படித்து க. பொ. த. உயர்பரீட்சையில் தேறினர். அதே ஆண்டில் மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டித பரீட்சையிலும் முதற் பிரிவிற் சித்தியெய்திப் பரிசிலும் பெற்றார்.

1948 — 1952 ஆண்டுக் காலத்தில் பேராதனைப் பல்கலைக் கழகத்திற் படித்துத் தமிழ் சிறப்புக் கலைமாணி (B. A. Hons) பரீட்சையில் முதற்பிரிவிற் சித்தியடைந்தார். 1952 — 1956 இல் முதுகலைமாணி (M.A.) பரீட்சையில் சித்தியெய்தினர். 1954 — 1956 ஒக்ஸ்போட் பல்கலைக் கழகம் கலாநிதி (Ph.D.) விருது வழங்கியது.

1952 தொடக்கத்தில் பேராதனைப் பல்கலைக்கழக உதவி விரிவுரையாளராகவும் பின்சிரேட்ட விரிவுரையாளராகவும், 1967இல் கொழும்புப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவராயும் பேராசிரியராகவும் பதவி வகித்தார். 1980இல் பேராதனையில் பேராசிரியராய் அமர்ந்தார்.

இவர் பெற்ற புலமைப் பரிசில்களும் பல, 1955இல் ஒக்ஸ்போட் பேலியோல் கல்லூரிப்பரிசில் பெற்றார். 1964இல் மொழியியல்துறையில் ஃபுல்பிறைற் (Full Bright)

புலமைப்பரிசில் பெற்று அமெரிக்க பல்கலைக் கழகங்களில் ஆராய்ச்சிப்படிப்பு மேற்கொண்டார் 1973 - 74 பொது நலவாயநாடுகள் வழங்கும் புலமைப் பரிசிலும், 1986இல் யப்பான்நாட்டு ஆய்வாளர் புலமைப்பரிசிலும் பெற்றார்.

இலங்கைப் பல்கலைக்கழகங்களில் இந்துநாகரிகம், மொழியியல் ஆகிய இரண்டு பாடநெறிகளை ஆக்கி வைத்தார்.

இவரின் ஆக்கங்கள் : தமிழ் வினைச்சொற்களின் அமைப்பு தொகுதி I II (1956), கருத்துரைக்கோவை (1959), ஆராய்ச்சி கட்டுரை எழுதும் முறை (1963), ஞானப்பள்ளு (1965), தமிழ்மொழி வரலாறு (1967), இலங்கைத் தமிழ் வழக்குச்சொற்கள் அகராதி தொகுதி I — IV, தமிழ்ச்சொற்களின் பிறப்பு நெறி (1986), சுமேரியமொழி ஒரு திராவிடமொழி - ஆங்கிலத்தில் (1965), சுமேரியதிராவிட மொழிகளின் சொல்லிலக்கணத் தொடர்பு (1988)

தமிழ், ஆங்கிலம், சிங்களம், இலத்தீன், சம்ஸ்கிருதம் பாளி, மலையாளம், தெலுங்கு, கன்னடம், ஜேர்மன் ஆகிய மொழிகளில் இவர் பயிற்சியுடையவர்.

இவர் இனியவராய், நல்லவராய், மதுமாமிசம் புகைத்தல் அறியாத சைவசீலராய் வாழ்ந்தவர்.

ஆதாரம் : பேராசிரியர் சதாசிவம் நினைவுமலர் 1988.

எல்லாம் மலர்வ தெவன்கொப்பூ ழிவ்வுலகம்
எல்லாம் தரிப்ப தெவன்வயிற்றிவ் — வெல்லாம்
புரப்ப தெவனருளப் பொய்யாத தெய்வம்
இருப்ப இயங்கும் எலாம்.

— நாலாயிரத்திவ்வியப்பிரபந்தம்.

# பண்டிதை அமிர்தவல்லி
## 1938 —

அராலியூர்ப் பொன்னையாவின் மகளான இவரின் கணவர் பரமராசா. இவர் தமது கல்வியை அராலி வள்ளியம்மை ஞாபக வித்தியாசாலையிலும், வட்டு யாழ்ப்பாணக் கல்லூரியிலும் பெற்றார். பின்பு வட்டு இந்துக்கல்லூரி, யாழ். வைத்தீசுவராக் கல்லூரிகளில் நடைபெற்ற பாலபண்டித பண்டித வகுப்புகளிற்கற்று 1965இல் பண்டிதரானார்.

1968இல் ஆங்கில ஆசிரியராக நியமனம் பெற்றார். 1975 — 76 ஆண்டுகாலப் பகுதியில் பலாலி ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெற்றார். முதலில் காரை நகர் சுந்தரமூர்த்திநாயனார் வித்தியாசாலையிற் படிப்பித்த இவர் இப்பொழுது அராலி சரசுவதி மகாவித்தியாலயத்திற் படிப்பித்து வருகின்றார்.

ஆதாரம் : இவர்களைக் கண்டு கேட்டு யாம் எழுதியது.

# பண்டிதை தையல்நாயகி
## 1941 —

அராலியூர் முத்தையாவின் மகளான இவரின் கணவர் சிவஞானரத்தினம். ஆரம்பக் கல்வியை அராலி சரசுவதி வித்தியாலயத்திற் பெற்றபின்பு, வட்டு இந்துக் கல்லூரி, யாழ். வைத்தீசுவரக் கல்லூரிகளில் படித்துப் பண்டிதர் ஆனார் (1963)

1977இல் ஆசிரிய நியமனம் பெற்று, 1979 — 81 கோப்பாய் ஆசிரிய பயிற்சிக்கல்லூரிப் பயிற்சியும் பெற்று இப்போது அராலி சரசுவதி மகாவித்தியாலயத்திற் படிப்பிக்கின்றார்.

ஆதாரம் : இவர்களைக் கண்டு கேட்டு யாம் எழுதியது

# கலாநிதி சிற்றம்பலம்

## 1941 —

**தந்தையார் பெயர் :**

சிற்றம்பலம் கந்தையா

**தாயார் பெயர் :**

தங்கப்பிள்ளை

**படித்த பாடசாலைகள் :**

ஆரம்பக் கல்வி – அராலி சரஸ்வதி வித்தியாசாலை 1950 வரை. யாழ்ப்பாணக் கல்லூரி 1950 – 1960 வரை

**பெற்ற பட்டங்கள் :**

வரலாற்றுக் கல்வியில் பி. ஏ. பட்டம், பேராதனைப் பல்கலைக்கழகம் (1961 – 1965)

தொல்லியலில் எம். ஏ பட்டம் (பூனைப் பல்கலைக்கழகம், 1973 – 1975)

தொல்லியலில் கலாநிதிப்பட்டம் (பூனைப்பல்கலைக்கழகம் 1977 – 1980) இந்திய தொல்லியலாளர்களில் முதற்றரமானவராகக் கணிக்கப்படும் பேராசிரியர் சங்கலியாவிடம் கற்ற பெருமை இவருக்குண்டு.

**தொழில் :**

1975இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத்துறையில் நிரந்தர விரிவுரையாளராக நியமனம் பெற்று வரமுன்னர் கொழும்பு, பேராதனை, வித்தியாலங்காரப் பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளராகக் கடமை புரிந்துள்ளார். 1983 தொடக்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத்துறைத் தலைவராகவும் விளங்குகிறார்.

பல்கலைக்கழகத்தில் வகித்த பதவிகள் :

(1) பல்கலைக்கழக ஆராய்ச்சிச் சஞ்சிகையாகிய சிந்தனையின் ஆசிரியர் (1982 – 1989)

(2) இந்து மன்றப் பெரும் பொருளாளர் (1982 தொடக்கம் தற்போது வரை)

(3) மாணவர் மன்றப் பெரும் பொருளாளர் (1991)

(4) தமிழ் மன்றப் பெரும் பொருளாளர் (1982 – 1984)

(5) தலைவர், யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் (1990 – 1990)

(6) காரியதரிசி சமூக விஞ்ஞானப் பிரிவு) யாழ்ப்பாண விஞ்ஞானிகள் சங்கம் (1990 - 1991)

(7) தலைவர் (சமூக விஞ்ஞானப் பிரிவு) யாழ்ப்பாண விஞ்ஞானிகள் சங்கம் (1991 - 1992)

(8) யாழ். பல்கலைக்கழக மாணவ விடுதி மேற்பார்வையாளர் (1983 - 1983)

(9) தலைவர், சிரேஷ்ட பொது அறை, யாழ். பல்கலைக்கழகம் (1985 - 1986)

(10) துணைத்தலைவர், யாழ். பல்கலைக்கழக பரமேஸ்வரன் ஆலய நிருவாக சபை (1991இலிருந்து) மேற்படி ஆலயப் புனருத்தாரணத்திலும், 1991ஆம் ஆண்டில் நடைபெற்ற ஆலய மஹா கும்பாபிஷேகத்திலும் முக்கிய பணி ஆற்றும் பேற்றினைப் பெற்றவர்.

இவற்றைவிட யாழ். மாவட்டத்திலுள்ள பல்வேறு அமைப்புகளிலும் சேவை புரிந்து வருகிறார். நாவலர் பணிமன்றத் தலைவர், யாழ்ப்பாண இந்துப் பேரவை ஆகியனவற்றோடு, நேர காலந்தவறாது நித்திய நைமித்திய கிரிகைகள் ஒழுங்காக 1973 ஆண்டிலிருந்து நடைபெற்று வரும் அராலி கரைப்பிட்டி

விநாயகர் ஆலய அறங்காவலர் பதவியை 1992ஆம் ஆண்டிலிருந்து ஒரு நிருவாக சபையிடம் ஒப்புவித்து தற்போது அச்சபையின் போஷகராகவும் உள்ளார்.

ஆக்கங்கள் :

(1) பண்டைய தமிழகம் 1991ஆம் ஆண்டின் சிறந்த நூலாக இலங்கை அரசின் சாகித்திய மண்டலப் பரிசு பெற்றது. இந்திய அறிஞ ரால் தமிழில் வந்த முதல் தொல்லியல் நூல் எனப் போற்றப்பட்டது (சென்னைப் பல்கலைக்கழகப்பேராசிரியர் சுப்பிரமணியம்)

(2) யாழ்ப்பாண இராச்சியம் — (பதிப்பு நூல்) 1992 இல் வெளிவந்துள்ளது.

(3) யாழ்ப்பாணம்—தொன்மை வரலாறு (அச்சில்)

தற்போது ஈழத்து இந்துமத வரலாறு பற்றி நூல் எழுதுகின்றார். இவற்றைவிட சமயம், வரலாறு தொல்லியல் சம்பந்தமாகக் கட்டுரைகளை ஆங்கிலத் தில் எழுதிப் பல சர்வதேச மகாநாடுகளில் சமர்ப் பித்துள்ளார். இவரது கட்டுரைகள் உள்ளூரில் ஆராய்ச்சி ஏடுகளில் மட்டுமன்றிக் கும்பாபிஷேக மலர்களிலும் வெளிவந்துள்ளன.

ஆதாரம் : இவரிடம் கேட்டு எழுதியது.

---

பகைவர்தம்மை நடுநடுங்கப் பண்ணிமைத்த பாண்டியர்
பாதுகாப்பின் கீழுயிர்த்த பாரதர்கள் நாங்களா
வகைகள்கொண்ட சேனைவந்து வளையமிட்ட போதெலாம்
வாளைவீசி வாகைபூண்ட வம்மிசத்தார் நாங்களா
தகைமைகொண்ட சேரசோழர் தங்குலத் துதித்தநாம்
தாள்மடித்துக் கைகுவித்துத் தலைவணங்கி நிற்பதா
சிகைகள்போவ தாயினும்நம் சென்மபூமி வேறுஓர்
சீமையாளர் கைக்கொடுத்துச் சீரிழந்து வாழ்வதா.

— நாவற்குழி நடராசன்

# காரைநகர்

| | |
|---|---|
| அருளப்ப நாவலர் | 1680 — 1720 |
| சங்கீதச்சுப்பையர் | 1744 — 1795 |
| முருகேசையர் | 1785 — 1870 |
| கார்த்திகேயப் புலவர் | 1819 — 1898 |
| நாகநாத ஐயர் | 1848 — 1916 |
| வித்துவான் சிவசிதம்பர ஐயர் | 1851 — 1912 |
| நாகமுத்துப் புலவர் | 1857 — 1939 |
| அருணாசலஉபாத்தியாயர் | 1864 — 1920 |
| அலன் ஆபிரகாம் | 1865 — 1922 |
| வித்துவான் சபாரத்தின ஐயர் | 1880 — 1935 |
| பண்டிதர் சுப்பிரமணிய தேசிகர் | 1885 — 1970 |
| கணபதீசுவரக் குருக்கள் | 1888 — 1967 |
| பண்டிதர் பஞ்சாட்சரக் குருக்கள் | 1889 — 1953 |
| வித்துவான் சபாபதி | 1908 — 1989 |
| சங்கநூற்செல்வர் அருளம்பலம் | 1910 — 1960 |
| மகாவித்துவான் F. X. C. நடராசா | 1911 — |
| வித்துவான் முருகேசனார் | 1916 — 1988 |
| பண்டிதர்வைத்தீஸ்வரக் குருக்கள் | 1916 — |
| வித்துவான் சபாரத்தினம் | 1924 — 1989 |
| பண்டிதை சரசுவதி | 1937 — |
| கலாநிதி சுந்தரம்பிள்ளை | 1938 — |
| புலவர் தேவகி | 1939 — |
| புலவர் பூரணம் | 1940 — |
| பண்டிதை யோகலட்சுமி | 1944 — |
| பண்டிதர் வேலாயுதபிள்ளை | 1945 — |
| பண்டிதை சிவசோதி | 1947 — |

# அருளப்ப நாவலர்

## 1680 — 1720

காரைநகரிற் பிறந்த பூலோகசிங்க முதலியார் உள்ளூர்ப் புலவர்களிடம் ஆரம்பக் கல்வி பெற்றபின் தெல்லிப்பழைக்குப் போய் மேலும் கற்று மிக்க பாண்டித்தியம் பெற்றார். கத்தோலிக்க மதத்தவரின் பாராட்டுப் பெற்று அருளப்ப நாவலர் என்று தமது பெயரையும் மாற்றிக் கொண்டார். இவர் 1700ஆம் ஆண்டளவில் பெரும் பதவியில் இருந்தார் என்று கூறுவர்.

கி. பி. எட்டாம் நூற்றாண்டில் வட இந்தியாவில் சிந்துதேச அரச குமாரரான திருச்செல்வர் என்பார் அரசபோகத்தை வெறுத்துத் துறவு பூண்டு, ஆன்மீக வாழ்வு வாழ்ந்து நற்கதியடைந்த வரலாற்றை முன்னரே ஓர் அருளப்பர் கி. பி. 773ஆம் ஆண்டில் எழுதி வைத்தார். அந்தக் கதையை அருளப்பநாவலர் பெருங்காப்பிய இலக்கணங்கள் நன்கு அமைந்த காவியமாகத் தமிழிற் பாடினார். இது கத்தோலிக்க மதத்தவரின் பாராட்டுக்குரிய நூல். 1896ஆம் ஆண்டில் அச்சுவேலித் தம்பிமுத்து என்னும் பத்திராதிபரால் இஃது அச்சிற் பதிப்பிக்கப்பட்டது. இந்தக் காவியத்தில் 24 படலமும் 1900 பாடல்களும் உள்ளன.

இக்காவியத்தின் சிறப்புப்பாயிரத்தில் இவரின் பிறந்த இடம், புகுந்த இடம் என்பன எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

செல்லினருள் பெருகுதவச் செல்வரா யன்கதையைத் தேர்ந்து நுண்ணூற்
றுல்லியமோர்ந்திடும் புலவர்மகிழ்தூங்கவிருத்தத்தாற்சொற்றிட்டானால்
நல்லிசைநா டகவியலின் தமிழ்தெரிநா வினன்சதுர நாக ரீகன்
தெல்லிநகர் அருளப்பன் தென்காரைப் பூலோக சிங்கன் தானே.

இவர் இந்தத் திருச்செல்வர் காவியக் கதையையே அம்மானை இலக்கியமாகவும் நயம்பட இயற்றியுள்ளார். சந்தியோகுமையூர் அம்மானை என்ற நூலையும் இவர் இயற்றினாரெனக் கூறுவாருமுளர்.

ஆதாரம் :

1. தமிழ் தந்த தாதாக்கள் — க. சி. குலரத்தினம்
2. ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம் — ஆ. சதாசிவம்
3. கரைநகர் மான்மியம் — F. X. C. நடராசா
4. யாழ்ப்பாணக் கல்லூரிச் சஞ்சிகை.

---

இராமமழை பெய்த இராவீ ரத்துச்
செங்கோல் வேந்தன் உழவ னாகிப்
பனைநுகம் கொண்டு யானைஏர் பூட்டி
வெள்ளி விதைக்கப் பொன்னே விளையினும்
வேண்டேன் பிறந்தகத்து ஈண்டிய வாழ்வே ;
செங்கேழ் வரகுப் பசுங்குரல் கொய்து
கன்று காத்துக் குன்றில் உணக்கி
ஊடுபதர் போக்கிமுன் உதவினோர்க் குதவிக்
காடுகழி இந்தனம் பாடுபார்த் தெடுத்துக்
குப்பைக் கீரை உப்பின்று வெந்ததை
இரவல் தாலம் பரிவுடன் எடுத்து
சோறது கொண்டு பீறல் அடைத்தே
ஒன்றுவிட் டொருநாள் உண்டு கிடப்பினும்
நன்றே தோழிநம் கணவன் வாழ்வே.

— குறுந்தொகை

# சங்கீதச் சுப்பையர்
## 1744 — 1795

கோதாவரி நதிக்கரையிற் குடியிருந்த வேங்கடேச ஐயரின் இரண்டாவது புத்திரராய மேருகிரி ஐயர் தமது தமையனுர் கோபித்து ஏசிய காரணத்தால் 1762ஆம் ஆண்டளவில் பிறந்த இடத்தை விட்டு நீங்கித் தஞ்சாவூருக்கு வந்து தங்கினுர், அங்கிருக்கும் காலத்திலே தமிழை நன்கு கற்றுச் சமர்த்தரானுர்.

அந்நாளில் தென்னிந்தியாவிலிருந்து யாழ்ப்பாணத் துக்குப் பலர் வருதலையறிந்து, 1770ஆம் ஆண்டளவில் மேருகிரி ஐயர் நாகபட்டினத்திலிருந்து தோணி யேறிக் காரைநகர் கோவளத்துறையில் வந்திறங்கினுர், அவருக்கு முன்னதாகவே கனகசபாபதிக் குருக்கள் என்பவர் திருவுத்தர கோசமங்கையிலிருந்து வந்து காரைநகரிற் குடியேறியிருந்தார். மேருகிரி ஐயர் கனகசபாபதிக்குருக்களின் மரபிலே திருமணம் புரிந்தார். மேருகிரி ஐயரை மேருகிரி முனிவர் என்றும் கூறுவர்.

மேருகிரி முனிவரின் மூத்த மகனுகிய சுப்பையர் தமது தந்தையைப் போலவே தெலுங்கு, ஆரியம், தமிழ் மூன்றிலும் வல்லவர். சங்கீத சாகித்தியத்திலே மிக்க பாண்டித்தியம் உடையவராய், வடதேசத்துக்குப் போக்குவரவு செய்து இசைக் கலையிற் பிரசித்தி பெற்றுச் சங்கீதச் சுப்பையர் என்று அழைக்கப்பட்டார்.

இவராற் பாடப்பட்டவை: நல்லை நாயகர் நான்மணி மாலை, காரைக் குறவஞ்சி என்பன.

ஆதாரம்:

1. காரைநகர் மான்மியம் **F. X. C.** நடராசா
2. கார்த்திகேயப் புலவர் சரித்திரம் வித்துவான் கா. சிவசிதம்பர ஐயர்

# முருகேசையர்

## 1785 — 1870

மேருகிரி முனிவரின் குமாரர் சங்கீதச் சுப்பையர். அவருடைய குமாரர் கார்த்திகேய ஐயர். அவரின் குமாரரே முருகேசையர். அவர் வடமொழியிலும் தமிழிலும் சிறந்த புலமை பெற்றிருந்தார்.

அவர் இயற்றியனவாக தன்னைமகை அந்தாதி 1 — 70 பாடல், தன்னை நாயகி ஊஞ்சல், குருக் கேத்திர நாடகம் என்ற நூல்கள் உள்ளன.

குருக்கேத்திரன் போர் எனவும் இந் நாடகம் வழங்கப்படும். குருக்கேத்திரன் என்ற அரசன் தன் மனைவியுடன் ஆகாய மார்க்கமாகச் சென்றபோது, அவன் தாம்பூலம் உண்டு உமிழ்ந்த எச்சில் கண்ணபிரானது கையில் விழுந்தது. கண்ணன் வெகுண்டு, எச்சிலுமிழ்ந்தவனைக் கொல்லுமாறு தமது சக்கராயுதத்தை ஏவினர். அதனையறிந்த குருக்கேத்திரன் அச்சங்கொண்டு இந்திரன் யமன் முதலானோரிடம் தனக்கு அபயம் அளிக்குமாறு வேண்டினன். அவர்கள் மறுக்கவே அருச்சுனனிடம் சென்று வணங்கி அபயம் பெற்றான். அதனால் கண்ணன், துரியோதனன் முதலானோரின் படையுடன் சென்று பாண்டவரை எதிர்த்து அவர்களை ஒருவர்பின் ஒருவராகக் கொன்றொழித்தார். பின்னர் அவர்கள் உயிர்பெற்றெழுமாறு அநுக்கிரகம் செய்து குருக்கேத்திரனையும் மன்னித்தருளினர். துரியோதனாதியரின் படைப்பலத்தை அழிக்கவே கண்ணபிரான் அவ்வாறு செய்தாரென்று கூறுவர்.

குருக்கேத்திர நாடகத்தில் வரும் ஒரு பாடல் இது.

வாழை கரும்புகள் நாட்டுங்கோ — நல்ல
வளமான பந்தலைப் போடுங்கோ
நொச்சி வழுதலே நாட்டுங்கோ — இரண்டு
கூடாரப் பந்தலையும் போடுங்கோ
மாவிலைக் கும்பங்கள் வையுங்கோ — நல்ல
மகர தோரணங்களைப் போடுங்கோ

இது கட்டியங்காரன் கூற்றாக வருவதி.

ஆதாரம்: 1. காரைநகர் மான்மியம் F. X. C. நடராசா
2. ஈழ நாட்டுத் தமிழ்ப் புலவர் சரித்திரம்
- சி. கணேசையர்

---

பிறவி குணம் தொழில் என்பவை இல்லாததும், உள்ளும் புறமும் ஆகாசம் போலக் கலந்திருப்பதும், அளவிடமுடியாததும், அநுபவத்தால் உணரத்தக்கதுமாகி பரம்பொருளை, எவனொருவன் நேருக்கு நேராகத் தெரிந்து, காமம் கோபம் குரோதம் வெறி முதலிய குற்றங்களில்லாதவனாய், பாவம் ஆசை மோகம் நீங்கினவனாய், ஆடம்பரம் அகங்காரம் பொருந்தாத நெஞ்சம் உடையவனாய் இருக்கின்றானோ அவனே பிராமணன். பிறப்பால் மட்டும் ஒருவன் பிராமணனாக மாட்டான். வேதம் ஆகமம் புராணம் இதிகாசம் இவற்றின் கருத்தும் இதுவே.

— மகாகவி பாரதியார்.

# கார்த்திகேயப் புலவர்

## 1819 — 1898

காரைநகர் முருகேசையரின் புதல்வராகிய இவர் தமது தந்தையாரிடம் ஆரம்பக் கல்வியையும், சுவாமி நாததேசிகர் என்பாரிடம் வடமொழியையும் தொடக்கத்திற் படித்தவர். பின்பு அந்தக் காலத்திற் பெருங் கல்விமானாக விளங்கிய சண்முகச் சட்டம்பியாரை யடைந்து தமிழ் நன்கு பயின்றார்.

தந்தை முருகேசையர் இறுதிக் குறையாக விட்ட தன்னையகம அந்தாதியின் 71 – 100 பாடல்களைத் தமது 16ஆம் வயசிற் பாடி நிறைவு செய்தார். வரகவி என்று அறிந்தோர் போற்றும் வண்ணம் விளங்கிய இவரின் அற்புதமான புலமையை வியந்து, புகழ்பெற்ற கங்காதர சாத்திரியார் 'புலவர்' என்ற பட்டம் இவருக்கு வழங்கினார். அப்போது இவருக்கு வயசு 18.

அந்தக் காலத்தில் நெல் முதலியவற்றை மதிப்பிடவும், வேறும் சில அரச கருமங்கள் காரணமாகவும் இருபாலைச் சேனாதிராச முதலியார் காரை நகருக்கு வந்து முருகேசையர் வீட்டில் பத்துப் பதினைந்து தினங்கள் தொடர்ந்து தங்குவது வழக்கம். இதனால் கார்த்திகேயப் புலவருக்கு அவரைக் குருவாகப் பெறும் வாய்ப்புக் கிடைத்தது. இராமாயணம், பாரதம், நன்னூல், காரிகை முதலான நூல்களை அவர் முதலியாரிடம் பாடம் கேட்டனர்.

தந்தை முருகேசையர் பாடி வைத்திருந்த குருக்கேத்திர நாடகத்தைத் திருத்தியும் புதுக்கியும் விளக்கியும் இவர் எழுதிப் பலரின் வேண்டுகோட்படி

நடிக்கச் செய்து அரங்கேற்றி வைத்தனர். அப்போது இவருக்கு வயசு 25. பலரும் வேண்டியபடி இவர் சூரபன்மன் நாடகம், சந்திரவண்ணன் நாடகம் என்பவற்றையும் ஆக்கி நடிக்கச் செய்து அரங்கேற்றினர்.

இவர் காலத்தில் கிறிஸ்துவப் பாடசாலைகளைப் பாதிரிமார் கட்டிச் சைவசமய நிந்தனை செய்து, மக்கள் சிலரை ஏமாற்றிக் கிறிஸ்துவராக்கினர். இவரும் மக்களின் ஒத்துழைப்போடு சைவப் பாடசாலைகளைக் கட்டிச் சைவப் பிள்ளைகள் சைவ சமயக் கல்வி பெற வழி காட்டியதோடு, கிறிஸ்துமத குடாரம் என்னும் கண்டன நூலையும் எழுதிப் பரப்பினர்.

வண்ணைத் திரிபந்தாதி, திக்கைத் திரிபந்தாதி (1864) திருப்போசை வெண்பா, நகுலேசர் யமக அந்தாதி, தில்லைப்பல்சந்த மாலை போன்ற நூல்களையும் எழுதினர். சோதிட நூலாகிய விதான மாலைக்கு உரையெழுதிப் பதிப்பித்தார்.

புலவரது ஆக்கங்களுள் தலைசிறந்ததாக அறிஞர் திண்ணபுர அந்தாதியைப் போற்றுவர். இந்நூல் திண்ணபுரச் சுந்தரேசுவரப் பெருமான் மேற் பாடப்பட்டது. இதற்குச் செஞ்சொற் கொண்டல் கலாநிதி சிங்காரவேலன் அவர்கள் ''செஞ்சொல் விளக்கம்'' என்னும் பெயரில் இனிய உரை எழுதியுள்ளார்.

இவரின் திக்கைத் திரிபந்தாதிக்குப் பண்டிதர் க. மயில்வாகனம் அவர்கள் பொழிப்புரை எழுதியுள்ளார்.

''பவத்துக் கிறையுமஞ் சாமற் பொருளைப் பலவிதமாய்
அவத்துக் கிறைத்துத் திரியும் அசடர்க ளேயுயர்பா
தவத்துக் கிறையை வளைத்தோன் மகன்றனைச் சண்முகனைச்
சிவத்துக் கிறைவனைத் திக்கைய னைத்தெரி சித்துய்யுமே.''

திக்கையந்தாதியில் உள்ள இச் செய்யுள், புலவரின் கவித்துவ ஆற்றலையும், சைவசித்தாந்தப் புலமையையும் ஒருபானை சோற்றுக்கு ஓரவிழ் பதமாகுந் தன்மைபோற் காட்டும்.

புலவரவர்கள் சிறந்த கவிஞராக, இலக்கிய கர்த்தராக, நாடகாசிரியராக, சைவசமயப் பாதுகாவலராக, சோதிடக்கலை விற்பன்னராக, சிறந்த நூற்பதிப்பாசிரியராக, நல்லாசானாக, அருளாளராக விளங்கியுள்ளார்.

இவர் தமது 79ஆவது வயசிலே தமக்கு அந்திய காலம் கிட்டியதை உணர்ந்து, தமது குடும்பத்தார் உறவினர் மாணவரை அருகில் அழைத்து நல்ல புத்தி மதிகள்கூறி, ''எண்ணுகேன் என்சொல்லி எண்ணுகேனே....'' என்ற அப்பர் திருத்தாண்டகத்தைப் பாடச் செய்து, தாமும் பாடிக் கொண்டே பரகதியடைந்தார்.

ஆதாரம் :

1. ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரித்திரம் சி. கணேசையர்
2. காரைநகர் மான்மியம் F. X. C. நடராசா
3. கார்த்திகேயப் புலவர் சரித்திரம் கா. சிவசிதம்பர ஐயர்
4. தமிழ்தந்த தாதாக்கள் க. சி. குலரத்தினம்

---

சாதிகள் இல்லையடி பாப்பா - குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்
நீதி உயர்ந்தமதி கல்வி - அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்.

— மகாகவிபாரதி

# நாகநாத ஐயர்

## 1848 — 1916

இவர் கார்த்திகேயப் புலவரின் மூத்த மகனுவர். தந்தையாரிடம் படித்துப் பெரிய விற்பத்திமானுக விளங்கியவர். கவிதைபாடும் ஆற்றலும் வாய்ந்தவர். இவர் பாடியனவாகப் புலியூரந்தாதிக்கு உரையாசிரியர் வேற்பிள்ளை எழுதிய உரையைப் பாராட்டிய சிறப்புப் பாயிரக் கவிதைகள் உள்ளன.

சீர்மேவு மாதைநகர் மயில்வா கனப்புலவர்
    செய்தசிற் பரம தான
செம்பொனம் பலமருவு புலியூரி னந்தாதி
    யுரையைநீ செய்க என்ன
பேர்மேவு நல்லைநகர் வேலாயு தபிள்ளை
    பெருமகிழ்வொ டருள்செய் குமரன்
பிரபல மிகுங்கார்த்தி கேயாசான் புகன்றிடப்
    பிரியாம லவனி டத்தும்
வார்மேவு சுகுணசர மதலைபொன்
    னம்பலவ நாம தேயம்
மருவியநல் வித்துவ சிரோமணி யிடத்திலும்
    வளர்மதிப் பெரிய மத்தால்
ஆர்மேவு கல்விப் பயோததி மதித்தரிய
    பிரசார அமுத முதவி
ஆன்மகோ டிகள்மயற் பசியொழித் தரனடிக்
    கெஞ்ஞான்றும் அன்பு பூண்டோன்

பரமதச் செறியிருள் திசாமுகம் மறைந்திடப்
    பாரில்வரு ஞான பாநு
பகருமெக் கொடையிலும் கல்விப்பெ ருங்கொடைப்
    பயனதிக மென்று ணர்ந்து
வரமுதவு தில்லைத் தலத்திலும் வண்ணையினும்
    இருகழகம் வைத்த மேன்மை
மண்டலங் கொண்டபுக ழாறுமுக நாவலன்

மருங்கினும் கற்று வல்லோன்
பொருவில்சீர் ராமனது சரிதாதி காவியப்
பொருளினி துணர்ந்த நிபுணன்
பொழில்வளையும் மட்டுவிலோர் வித்தியா சாலையைப்
போற்றுமதி காரி யாகித்
திருநெல்வே லிப்பதியி னன்கண பதிப்பிள்ளை
செய்தவ மெனவு தித்த
செய்யவே லுப்பிள்ளை யுரைபுரிந் தெழுதா
எழுத்தினில் நீட்டி னனே.

இவரது தந்தையாராகிய கார்த்திகேயப்புலவர் இறைவனடி யடைந்தவேளையில் இவர்பாடிய இரங்கற் பாக்களில் ஒன்று பின்வருமாறு.

கொத்தார்ந்த கொன்றையும் கூவிள முஞ்சடைக் கொண்டசிவன்
சித்தாந்த மோனத் தெளிபொருள் தேறிச் சிவமடைந்த
அத்தா உமக்குத் தமியேம் புதல்வர்க ளாகவர
இத்தா ரணியினில் முன்னென்ன புண்ணியம் ஈட்டினமே.

மேரு கிரியெனும் நாமத்து மாமுனி மெய்க்குலத்தை
ஆரும் மதிக்க விளக்கிய வந்த அருமணியே
கூரும் அறிவிலெச் கல்வியும் வைத்த குணக்குன்றமே
சேருன் அருமை இனித்தான் தெரியும் செகத்தவர்க்கே

ஆதாரம்: 1. புலியூரந்தாதியுரை
2. கார்த்தியேயப் புலவர் சரித்திரம்

---

செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே – எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே ஒரு
சத்தி பிறக்குது மூச்சினிலே.

— மகாகவிபாரதியார்

# வித்துவான் சிவசிதம்பர ஐயர்

## 1851 — 1912

கார்த்திகேயப் புலவரின் இளைய குமாரரான இவர் தமிழ், ஆரியம் இரண்டிலும் பெரும்புலமை பெற்றவர். மதுரைத் தமிழ்ச் சங்க வித்துவான்; சைவப் பிரசாரகர்.

இவர் தட்சிண கைலாச புராணத்தைப் (1887) பதிப்பித்தவர். தந்தை கார்த்திகேயப் புலவரால் முதலிற் பதிப்பிக்கப்பட்ட சோதிட நூலாகிய விதான மாலையை (1900) இரண்டாம் பதிப்புச் செய்தவர். கந்தபுராணம் மகேந்திர காண்டத்துக்கு (1908) இவரெழுதிய உரை, சுன்னுகம் குமாரசுவாமிப் புலவரால் பரிசோதிக்கப்பட்டு இவரின் புதல்வராகிய கா. சி. மகேசசர்மாவினுல் (1909) அச்சிற் பதிப்பிக் கப்பட்டது.

இவர் பாடிய திக்கை நாயகர் மும்மணிமாலை களபூமியிலுள்ள திக்கரைத் தலத்து முருகப்பெருமான் மீது (1882) பாடப்பட்டது. இந்த நூல் பற்றிய குறிப்புக்களை 1882 இல் வெளிவந்த உதயதாரகைப் பத்திரிகை பேசும். காலிக் கதிரேசர் அடைக்கலப்பத்து. (1887), கார்த்திகேயப் புலவர் சரித்திரம் (1908) என்னும் நூல்களும் இவரால் ஆக்கப்பட்டவையாகும்.

தந்தையாரின் மறைவின் பொழுது இவர் பாடிய இரங்கற் கவிதைகள்:

கீர்த்தியொடு செல்வக் கிளைபெறலாம் கார்த்திகேயப்
பேர்க்கவிஞ நின்னைப் பெறலாமோ — சீர்த்தமொழி
ஆரமிர்தா லெங்கள் அகங்குளிர் வித்தவுனக்
காருவமை யாராய்ந் திடின்.

படுக்கையினி லிருந்தெனது பாலகனை மெலக்கூவி
எடுத்தணைத்து நற்பாடம் இனிதுவரைந் தேயளித்துக்
கடுக்கைமுடிப் பிரான்கமலக் கழல்போற்று கெனவுரைத்து
விடுத்தவுனை யெப்பிறப்பில் வினையேம்யாம் காண்பேமோ

எண்ணுகேன் என்னுமுதல் இயற்பதிகம் இசைத்தியென
உண்ணெகிழ்வி னேடுமொழிந் துச்சியின்மேற் கைகுவித்து
அண்ணலே நின்மலர்த்தாள் அடைகின்றேன் எனவுரைத்த
வண்ணமொழி இனித்தமியேம் மனங்குளிரக் கேட்பேமோ.

ஆதாரம்: 1. கார்த்திகேயப் புலவர் சரித்திரம்.
2. மணிவாசகர் சபை வெள்ளிவிழா மலர்.

---

ஐயா நினது திருக்கோயில் அசையா மணியின் இசைகேட்டும்
ஆர்வத் துடன்நின் சந்நிதியை அடைந்து பக்தி பரவசமாய்க்
கையால் துதியா துளதுறையுள் காலாற் சூழா தவலித்துக்
கசிந்து கண்ணீர் சொரியாத கயவ னெனையும் ஆண்டமுரு
கையா வருக; எமதருமை அப்பா வருக; அன்புருவாம்
அண்ணல் வருக; நீதிசெயும் அரசே வருக; பொய்யருக்குப்
பொய்யா வருக; விரைந்திந்தப் பொழுதில் விசவத் தனையி
லெங்கள்
பொன்னே வருக; துரைவருக; புனிதா வருக; வருகவே.

— விசவத்தனைமுருகன் பிள்ளைத்தமிழ்

# நாகமுத்துப் புலவர்
## 1857 — 1939

காரைநகர் தனுக்கோடிப் பிள்ளைக்கும் சேது நாயகியம்மாளுக்கும் தனிப் புதல்வனுகப் பிறந்த இவர் ஆரம்பக் கல்வியைத் திண்ணைப் பள்ளிக்கூடத்திற் பெற்றுர். இலக்கண இலக்கியப் படிப்பை நெவின்ஸ் சிதம்பரப்பிள்ளையிடம் கற்றுணர்ந்தார். சிதம்பரப்பிள்ளையைத் தமது குருவாகப் போற்றியுள்ளார்.

'' திருவாழ் சிவபிரான் பாதாம் புயத்தினைத் தேசிகனுர்
உருவாழ் சிதம்பரப் பிள்ளை நெவின்சை உளத்திருத்தி ''

என்று கடவுள் வணக்கமும் குருவணக்கமும் செய்துள்ளார். சிதம்பரப்பிள்ளை காலமான வேளையில் இவர் பாடிய சரமகவிகளிலொன்று வருமாறு:

தாங்குபுகழ்க் கம்பன் தனிக்காள மேககம்பன்
ஆங்கிலலற் றின்பாடை ஆய்ந்தனரோ—பாங்குவட
தென்மொழியில் நேர்வர் சிதம்பரப் பிள்ளையுன்போற்
பன்மொழி நேர் வாரோ பகர்.

இவர் சுப்பிரமணிய வித்தியாசாலையிலே 35 ஆண்டுகள் படிப்பித்தவர். இவரின் ஏகபுத்திரன் கனகசுந்தரம், காரை. இந்துக்கல்லூரியிற் கற்பித்தவர். புலவர் தமது நண்பர்கள், புரவலர்கள் மேற் பாடிய சீட்டுக்கவிகளும் பல. சண்முகம் ஆசைப்பிள்ளை என்பவருக்கு எழுதிய சீட்டுக்கவி வருமாறு:

சகராசர் சேகரன் கோத்திரன் காரைத் தனிநகரான்
மகராசன் சண்முகம் சேயாசைப் பிள்ளை மகிழ்ந்தறிக
மிகராசர் போற்றிடு நாகமுத் தாசான் விடுகடிதம்
வகராச சேகர என்மிடி நீக்கிநீ வாழியவே.

இவ்வாறான நூற்றுக்கு மேற்பட்ட கவிகளைத் திரட்டி ''திருமங்கல வாழ்த்துச் சீட்டுக் கவித்திரட்டு'' என்னும் நூலாக்கி 1914 இல் வெளிப்படுத்தினர்.

காரைநகர்த் திண்ணபுர சுந்தரேசர் திருப்பதிகம், திருவூஞ்சல், சுந்தரேசர் பக்திரசக் கீர்த்தனங்கள், பயிரிக்கூடல் சுப்பிரமணியர் திருவூஞ்சல், கலிகால வேடிக்கைக் கும்மி, மலாய் நாட்டு மனோரஞ்சிதக் கும்மி என்னும் நூல்களையும் இயற்றியுள்ளார்.

ஆதாரம்: 1. காரைநகர் மான்மியம்
2. மணிவாசகர் சபை வெள்ளிவிழா மலர்.
3. ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரித்திரம்.

---

ஆவீன மழைபொழிய இல்லம் வீழ
அகமுடையாள் மெய்ந்நோவ அடிமை சாவ
மாவீரம் போகுமென்று விதைகொண் டோட
வழிதனிலே கடன்காரர் மறித்துக் கொள்ள
சாவோலை கொண்டொருவன் தனியே எய்தத்
தள்ளவொண்ணு விருந்துவரச் சர்ப்பந் தீண்டக்
கோவேந்தர் முடிக்குரிய கடமை கேட்க
குருக்களும் தட்சணைகள் கொடுவென் றூரே.

— தனிப்பாடற்றிரட்டு

# அருணாசல உபாத்தியாயர்

## 1864 – 1920

''அவர்களுக்குப் பிறகு அருணாசலந்தான் இந்த நாட்டில் ஒருமனிதர்'' இவ்வாறு கூறியவர் நாவலர் அவர்களின் தமையனார் மகனாகிய த. கைலாசபிள்ளை. அவர்கள் என்றது நாவலர் அவர்களை. 'யாழ்ப்பாணத்திலுள்ள சைவ ஆசிரியகலாசாலைக்கு முதற்காரணம் ச. அருணாசலமே. பரோபகாரிகளென்று யாழ்ப்பாணத்தில் பிறந்தவர்களுள் ஸ்ரீலஸ்ரீ நாவலர் அவர்களுக்கு அடுத்து இரண்டாவதாக யான் மதித்திருப்பது இவரையே. மூன்றாவதாகச் சொல்வதற்கு ஒருவருமிலர்' என்றும் குறித்த கைலாசபிள்ளை குறிப்பிட்டுள்ளார்.

இலக்கியகலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள், ''யாழ்ப்பாணத்தின் மூன்று சமயக்கண்களுள் பெரியார் அருணாசலமும் ஒருவர்'' என்றும், ''ஸ்ரீமந் அருணாசலம் அவர்கள் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின் சிந்தனைகளுக்கும், இந்த நூற்றாண்டின் சைவ எழுச்சிக்கும் இடையில் அமைந்ததொரு சேதுபந்தனம் ஆவார்கள். நாவலர் இட்ட வித்தை 30 வருடங்களுக்குமேலே பாதுகாத்து முளைவரச்செய்த மகான் அருணாசலம்'' என்றும் ''1912 தொடக்கம் 1922 வரைவெளிவந்த, இலங்கையிலுள்ள திருநீறு பூசுகின்ற பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் அனைவரும் அருணாசலம் பொரித்த குஞ்சுகளே யாவர்'' என்றும் கூறியுள்ளார். மூன்றாவது சமயக் கண்ணாகப் பண்டிதமணி குறிப்பிடுவது சைவவித்தியாவிருத்திச் சங்க மனேச்சர் சு. இராசரத்தினம் அவர்களையாகும்.

ஆரம்பக் கல்வியைக் காரைநகரிலிருந்த மிசனரி மாரின் பாடசாலைகளிற் பெற்ற அருணாசலம், ஆசிரிய பயிற்சிபெறத் தெல்லிப்பழைக் கிறித்துவ ஆசிரிய கலாசாலையிற் சேர்ந்தார். 1885இல் பயிற்சி முடிந்து தராதரப் பத்திரம் பெறும் காலம் சமீபித்தது. அதுவரையில் ஞானஸ் நானம் பெறச் சாக்குப்போக்குச் சொல்லிக் காலங்கடத்திக் கொண்டுவந்த அருணாசலம், மதமாற்ற வற்புறுத்தல் மேலோங்கிய வேளையில் ஞானஸ்நானம் பெற மறுத்து, நள்ளிரவில் கல்லூரி மதிலில் ஏறிக்குதித்துப் பெட்டியுடன் வீடு வந்து சேர்ந்தார்.

இவர் காலத்தில் சைவர்கள் ஆசிரிய பயிற்சி பெறுவதாயின், பயிற்சிக்காலம் முடிவதற்கு முன்னர் கிறிஸ்து சமயத்தைத் தழுவவேண்டுமென்ற நியதி யிருந்தது. அதனை மாற்றிச் சைவர்களும் கிறிஸ்துவர் களும் ஒருங்கு இணைந்து தத்தம் சமயத்தை அநுட் டித்தவாறே பயிற்சி பெறுவதற்கு வாய்ப்பாகக் கோப் பாயில் ஐக்கியபோதனா பாடசாலை தோன்றுவதற்கு மூலகாரணராய் விளங்கியவர் அருணாசல உபாத்தி யாயரேயாவார்.

---

சைவப்பிள்ளைகள் சைவத்தமிழ்க்கல்வி பெறுவ தற்குச் சைவப்பாடசாலைகள் தாபிக்க வேண்டுமென்று அருணாசலம் உறுதிபூண்டார். அவருடைய முயற்சி யாலும் தூண்டுதலாலும் காரைநகரிற் சுப்பிரமணிய வித்தியாசாலை, திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் வித்தியாசாலை, வியாவில் சைவபரிபாலன வித்தியா சாலை என்பன தோற்றுவிக்கப்பட்டன. ஆசிரியர் சயம்பரின் ஆளுகையில் இருந்த திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் வித்தியாசாலை ஆங்கிலப் பாடசாலை யாய்ப் பின் காரைநகர் இந்துக்கல்லூரி எனப் பரிண மித்தது. அருணாசலம் அவர்களைப் பின்பற்றிக் காரை நகரின் பலபாகங்களிலும் சைவப்பாடசாலைகள் உதய மாயின.

தமது உடல் பொருள் ஆவி மூன்றையும் அர்ப்பணித்து, அரும்பாடுபட்ட அருணசலம் அவர்களின் பெருமுயற்சியினுல் — சீரியதொண்டினுல் — காரைநகரிற் சைவக்கல்வியும், தேவாரதிருவாசகத் திருமுறைகளின் ஒலியும், திருநீற்றின் ஒளியும் மேலோங்கி நிலைபெற்றன.

சிற்றம்பலம் சங்கரப்பிள்ளை இவரது தந்தையார். தாயார் பத்தினியம்மாள்; மனைவியார் நாகமுத்து. இவருடைய மக்களாக இன்று விளங்கும் ஆசிரியர்கள் சிவப்பிரகாசம், சிவபாதம் என்போர்.

அருணசல உபாத்தியார், நீதிவெண்பா உரை (1904) எழுதிவெளியிட்டார்.

ஆதாரம்: 1. அருணசலம் — காரை சைவமகாசபை
2. காரைநகர் மான்மியம்
3. மணிவாசகர் சபை வெள்ளிவிழா மலர்.

---

பச்சைமா மலைபோல் மேனிப் பவளவாய்க் கமலச் செங்கண்
அச்சுதா அமரர் ஏறே ஆயர்தங் கொழுந்தே யென்னும்
இச்சுவை தவிர யான்போய் இந்திர லோக மாளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே.

— நாலாயிரதிவ்வியபிரபந்தம்

# அலன் ஆபிரகாம்

## 1865 — 1922

இவர் காரைநகரில் வாழ்ந்த சைவ வேளாண் மரபைச் சேர்ந்த சுப்பிரமணியம் பார்வதியம்மைத் தந்தை தாய்க்கு மூத்த மைந்தராக வந்தவர். பெற்ருேர் இவருக்கு இட்டபெயர் அம்பலவாணர் என்பது. தமது பதினேரா வது வயதில் இவர் தந்தை தாய் இருவரையும் இழந்தார். ஆரம்பக்கல்விக் காலத்தில் இவரிடம் சிறந்து விளங்கிய ஆற்றல்களை அவதானித்த நல்லாசிரியர் ஒருவர், இவரைத் தெல்லிப்பழையில் அமெரிக்கன் மிசனரிமார் நடத்தி வந்த போதன வித்தியாசாலையிற் கற்கவைத்தார். அங்கே கற்றுக் கொண்டிருந்த காலத்திலேயே அம்பலவாணர் அலன் ஆபிரகாம் என்னும் பெயர் சூட்டப்பட்டுக் கிறிஸ்துவராஞர்.

ஆசிரிய பயிற்சியையும் பெற்றுத் தமிழாசிரியராய்த் தாம்படித்த பாடசாலையிலேயே சில ஆண்டுகள் சேவை செய்தார். பின்பு 1891 ஆம் ஆண்டளவில் வட்டு யாழ்ப் பாணக் கல்லூரியிற் சேர்ந்து ஆங்கிலமொழி பயின்று 1896 ஆம் ஆண்டில் கலைமாணிப் (B. A) பட்டம் பெற்ருர்.

அவர் மிக்க விவேகமும் ஆராய்ச்சித்திறனும் வாய்ந் தவர். தமது நுட்பமான அறிவினல், உள்ளூர் மூலப் பொருள்களைக் கொண்டு தமது கைகளால் தொலை காட்டியை அமைத்தார். அகில உலக வானசாத்திர நிபுணர் சங்கம். (Royal Astronomical Society) 75 ஆண்டு களுக் கொருமுறை தோற்றும் வால்வெள்ளியொன்று தோன்றவிருக்கும் மாதம் நாள் நேரம் முதலிய விவரங் களைப் பத்திரிகைகளில் அறிவித்தது. இந்த வேளையில்

சில அரைகுறை விஞ்ஞானிகள் வால்வெள்ளியின் வாலானது பூமியைத் தொடுவதன் மூலம் உலகமே அழியப் போவதாகப் பயமுறுத்தினர். எங்கள் விஞ்ஞானி அலன் அவர்கள் செயலில் இறங்கினூர். அவரது நுட்பமான அளவீடுகளின்படி வானசாத்திர நிபுணர் சங்கத்தினரின் அளவீடுகளில் தவறுள்ளமையைக் கண்டறிந்து, வால் வெள்ளி கண்ணுக்குப் புலனுகும் மாதம் நாள் நேரம் முதலியவற்றை மட்டுமல்லாமல், வெள்ளியின் வால் பூமியிலிருந்து தொலைவிலுள்ள தூரத்தினையும் கணித்துப் பத்திரிகைகளுக்கு அறிவித்ததன் மூலம் மக்கள் கொண்டிருந்த அச்சத்தை அகற்றினூர். சர்ச்சைக்குரிய வால் வெள்ளியும் தோன்றியது. உலக வானசாத்திர நிபுணர்களின் கூற்றுக்கள் அனைத்தும் பொய்யாகி, அலன் ஆபிரகாம் குறிப்பிட்ட அதேதேதி அதேநேரம் அதே தூரத்தில் அந்த வால் வெள்ளி தோன்றியது. அன்றையதினம் (1912 ஆம் ஆண்டில்) உலகமெங்கும் அலனின் புகழ் ஒலித்தது. காரைநகர்பெற்ற தவப்புதல்வர் உலகத் தவப் புதல்வர் ஆனூர். அவர் ஆக்கிய தொலைகாட்டியையும், அவருடைய நுண்மாண் நுழை புலத்தையும் கண்டு வானசாத்திர நிபுணர் சங்கம் அவருக்கு F. R. A. S. (Fellow of the Royal Astronomical Society) பட்டம் வழங்கிக் கௌரவித்தது. இந்த விருதினைப் பெற்ற முதல் இலங்கையர் இவரே.

இவர் தமிழில் கவிதை பாடுவதிலும் வல்லவராக விளங்கினூர். வான அதிசயங்கள், மதுவிலக்குக் கும்மி என்ற நூல்களை ஆக்கியுள்ளார்.

ஆதாரம் :

1. காரைநகர் மான்மியம்
2. யாழ்ப்பாணக் கல்லூரிச் சஞ்சிகை

# வித்துவான் சபாரத்தின ஐயர்

## 1880 — 1935

இவர் வடமொழி தென்மொழிகளில் வல்லவர். தமிழ் நூல்களை அச்சிட்டு வெளியிடுவதற்காகக் காரைநகரில் மாணிக்கவாசக அச்சியந்திரசாலையை நிறுவினுர். தனியொருவராகவே நின்று "கலிகாலதீபம்" என்னும் பத்திரிகையையும் நடத்தினுர். ஆலயந்தோறும் சென்று புராணபடன விரிவுரை செய்து வந்த இவர், ஈழத்துச் சிதம்பரத்தில் எழுந்தருளியிருக்கும் சுந்தரேசுவரப் பெருமான் மீது திருவூஞ்சலும் பாடியுள்ளார் (1910) இந்நூல் 1923ஆம் ஆண்டில் கணபதீசுவரக் குருக்களாற் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

இவர் நிறுவி நடத்திய அச்சியந்திரசாலை 1930ஆம் ஆண்டளவில் சீர்குலைவதாயிற்று.

ஆதாரம் : காரைநகர் மான்மியம்

---

தேடிச் சோறுநிதம் தின்று—வெகு
சின்னஞ் சிறுகதைகள் பேசி—மனம்
வாடித் துன்பமிக உழன்று—பிறர்
வாடப் பலசெயல்கள் செய்து—நரை
கூடிக் கிழப்பருவம் எய்திக்—கொடுங்
கூற்றுக் கிரையெனப்பின் மாயும்—சில
வேடிக்கை மனிதர் போலே—நானும்
வீழ்வே னென்றுநினைத் தாயோ

— பாரதி மகாகவி

# பண்டிதர் சுப்பிரமணிய தேசிகர்

## 1885 — 1970

பருத்தித்துறை அல்வாய் வடக்கில் வாழ்ந்த சிவசங்கரக்குருக்கள் வள்ளியம்மைப் பெற்றாரின் பிள்ளையாக இவர் 27-08-1885இல் பிறந்தார். ஆரம்பக் கல்வியை மேலைப்புலோலிச் சைவப்பிரகாச வித்தியா சாலையிற் பெற்றார். பின்பு தென்னிந்தியாவுக்குச் சென்று, மதுரைச் செந்தமிழ்க் கல்லூரியிற் சேர்ந்து வித்துவான் நாராயண ஐயங்கார் என்ற பேரறிஞரிடம் படித்து 1907 ஆம் ஆண்டில் மதுரைத்தமிழ்ச் சங்கப் பண்டிதரானார்.

1922 ஆம் ஆண்டில் காரைநகர் கணக்கனார் கண்டி ஆறுமுகம்பிள்ளையின் மகள் பார்வதியம் மாளைத் திருமணஞ்செய்து 1925ஆம் ஆண்டு தொடக்கம் காரைநகரை வசிப்பிடமாகக் கொண்டார்.

முதலில் திருநெல்வேலி பரமேசுவரக் கல்லூரித் தமிழாசிரியராயும் பின்பு சைவப் பிரசாரகராகவும் பணிபுரிந்தார். காரைநகர்ச் சுப்பிரமணிய வித்தியா சாலையிற் பஞ்சாட்சரக்குருக்கள் அதிபராய் இருந்த காலத்தில், இவர் உதவியாசிரியராகக் கற்பித்தார்.

இவர் ஆலய புனருத்தாரணக் கிரியைகள், மரணம் அடைந்தவர்களுக்குச் செய்யும் அபரக்கிரியைகளைச் செய்யும் சிவாசாரியராயும் மக்கள் மகிழப் பணி செய்துள்ளார்.

காரைநகரிலுள்ள கோயில்கள் பலவற்றிற் கந்த புராணபடனம், பெரியபுராணபடனம், திருவிளையாடற் புராணபடனம் - விரிவுரை நிகழ்த்தியதுடன் காரை

நகர்ச் சைவமகாசபை, வியாவில் சைவவித்தியாசாலை என்னும் இடங்களிலே தேவாரப் பண்ணிசை வகுப்புக் களை இவர் நடத்துவதற்கு உற்றதுணையாக உடையார் திரு. ஆ. நாகலிங்கம் உதவிபுரிந்தார்.

இவரின் ஆக்கங்கள்:- திருவெம்பாவையுரை, திருபள்ளியெழுச்சியுரை, அல்வாய்ச் சித்திவிநாயகர் தலவரலாறு-பதிகம், திருப்பொன்னூஞ்சல், சைவக் கிரியைகள, கம்பராமாயணம் காட்சிப்படலம் நிந் தனைப் படலங்களுக்கு விளக்கவுரை, திண்ணபுரச் சுந்த ரேசுவரர் ஆலயவரலாறு என்பன.

சங்கநூற் செல்வர் பண்டிதர் அருளம்பலவனாரின் ஆராய்ச்சியுரைகளாகிய திருமுருகாற்றுப்படை, பெரும் பாணாற்றுப்படை, பதிற்றுப்பத்து, திருவாசக ஆராய்ச் சியுரைகளுக்கும் தேசிகர் உறுதுணையாயிருந்துள்ளார்.

இவர் *10-3-1970* இல் அமரவாழ்வெய்தினர்.

ஆதாரம்: இவரின் குமாரர் சண்முகரத்தினம் ஆசிரியரிடம் பண்டிதர் மு. சு. வேலாயுதபிள்ளை கேட்டு எழுதியுதவியது.

---

கொடிவளரும் அணிமாடக் கோபுரஞ்சூழ்
நல்லூரிற் குமர மூர்த்தி
அடியருளத் திருளகல அமரர்முகம்
மலரவர அணிமா னீன்ற
கொடியினொடும் பிடியினொடும் குலவுமுடம்
பிடியொடுகோ தண்ட மேந்தி
மிடியகல மயிலேறி விடியவந்த
தினகரன்போல் மேவி னானே.

— நல்லைச் சேனாதிராசமுதலியார்

# கணபதீசுவரக் குருக்கள்
## 1888 — 1967

இவருடைய தந்தையார் பெரியகுருக்கள் என்று மக்களாற் போற்றப்பட்ட சரவணபவக்குருக்கள். தாயார் திருவேங்கடம்மா. வியாவில் ஐயனுர் கோயிற் பூசைக்கென இராமேச்சுரத்திலிருந்து அழைத்து வரப் பட்ட அந்தணர் குடும்பத்தில் உதித்தவரே கணபதீ சுவரக்குருக்கள். அவரை மக்கள் சின்னக்குருக்கள் என வாஞ்சையுடன் அழைப்பார்.

இவர் தமது தொடக்கக் கல்வியைக் காரை சுப்பிரமணிய வித்தியாசாலையில் அருணசல உபாத்தி யாயர், நாகமுத்துப் புலவர் என்போரிடம் பெற்ருர். காரைநகர் இ. முருகேசுஐயர், துணவி அப்பாத்துரைக் குருக்கள், வடலியடைப்பு அருணசல சாத்திரிகள். கந்தரோடை வைத்தியநாத சாத்திரிகள் ஆகியோரி டம் வடமொழி கற்றுத் தேர்ந்தார். பின்பு அல்வாய் இராமலிங்கக்குருக்கள் ( மாப்பிள்ளைக்குருக்கள் ) அவர் களிடம் குருகுல முறையிற் சைவக்கிரியைகளைத் துறை போகக் கற்ருர்.

1915 இல் காஞ்சிபுரம் சென்று சுப்பிரமணியக் குருக்களால் ஆசாரிய அபிடேகம் செய்யப் பெற்ருர். ஆலயக்கிரியைகளைச் செய்வதில் ஈழநாட்டில் இருந்த ஆசாரியர் பலருக்கும் முதல்வராக இவர் திகழ்ந்தார். இவர் பிரதமகுருவாக இருந்து நடத்திய குடமுழுக்கு விழாக்கள், உபநயன விழாக்கள் ஆசாரிய அபிடேகங் கள், திருமணங்கள், சாந்திகள் மிகப் பலவாகும். ஈழத்துச் சிதம்பர தேவத்தானத்தில் தொடர்ச்சியாக 64 ஆண்டுகள் சேவை செய்தபேறு உடையவர்.

இவர் வேதங்கள் ஆகமங்களை எழுத்தெண்ணிப் படித்தவர். உபநிடதங்களிலும் திருவாசகத்திலும் அதிகம் ஈடுபாடு உடையவர். காலத்துக்குக் காலம் பத்திரிகைகளுக்குச் சமயசம்பந்தமான கட்டுரைகள் எழுதி வெளிவரச் செய்தவர்.

இவருடைய கிரியைமுறைகளைப் பாராட்டி மகா வித்துவான் சி. கணேசையர் அவர்கள்,

வடமொழி யறிவின் மிக்கு மன்னுமா கமும்தேர்ந்து
புடவியிற் கோயிற் கேற்ற கிரியையிற் புலமை மிக்கு
கடமைகள் வழுவா தாற்றும் கணபதீச் சரப்பேர் பூண்ட
குடமுனி போல்வி ளங்கும் குரு ..'' என்று போற்றினர்.

இவருடைய மக்கள் சௌந்தராம்பிகை, மங்களேசுவரக்குருக்கள், இரத்தினசபாபதிக்குருக்கள், வைத்தீசுவரக்குருக்கள், திருவேங்கடம்மா என்போர்.

இவரியற்றிய நூல்கள்:— ஈழத்துச் சிதம்பரம் (1962) ஆன்மதரிசனம் (1967) திருவூடல் (1964) ஆத்மயாத்திரை (1965)

அகில இலங்கைச் சிவப்பிராமணர் சங்கம், அகில இலங்கைக் குருப்பிரம்ம வித்தியார்த்தி சபா, ஈழத்துச் சிதம்பரம் திருப்பணிச்சபை, காரைநகர் மணிவாசகர் சபை முதலியவற்றின் காப்பாளராக இருந்தார். அகில இலங்கைச் சைவகுருமார் சபையின் தலைவராகப் பதினன்கு ஆண்டுகள் சேவை புரிந்தர். சைவசமயத்துக்கு இவர் செய்த சேவைகளைப் பாராட்டிக் குருமார் சபையும் அபிமானிகளும் 21-10-62 இல் பெரியவிழா எடுத்துப் பொன்னுடைபோர்த்திப் பொற்பதக்கம் சூட்டி ''வேதாகம கிரியா பூஷணம்'' என்றபட்டமும் வழங்கிச் சிறப்பித்தனர்.

ஆதரம்; 1. காரைநகர் மான்மியம்—F. X. C. நடராசா.
2. மணிவாசகர் சபை வெள்ளிவிழா மலர்.

# பண்டிதர் பஞ்சாட்சரக் குருக்கள்

## 1889 — 1953

நாவலர் காவியபாடசாலையிலே சுன்னாகம் குமார சுவாமிப்புலவரிடம் கற்றுப் பண்டிதரான இவர் பயிற்சி பெற்ற ஆசிரியருமாவர். கொழும்பு அரசினர் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியிற் கற்பித்த தென்கோவைப் பண்டிதர் கந்தையாபிள்ளை அவர்களைத் தமது ஆசிரியராகக் கொண்ட குருக்கள், சித்தாந்த சாத்திரங்களிலும் வல்லவர். வடமொழியறிவும் நிரம்ப உடையவர். கவிதை புனையும் ஆற்றல், புராணபடன விரிவுரையாற்றுதல், சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்தல் போன்றவற்றிலும் வல்லவர். காரை சுப்பிரமணிய வித்தியாசாலையில் அதிபராயிருந்தவர்.

திண்ணபுர வெண்பா (1945) வலந்தலை மருதடி விநாயகர் இரட்டை மணிமாலை (1931) விநாயகர் அகவல், விநாயக கவசம் பதவுரை (1947) கொழும்பு தம்பையா சத்திரம் சித்திவிநாயகப் பெருமான் திருப்பதிகம், திருவூஞ்சல் (1948) என்பன இவராக்கிய நூல்களாகும்.

இவரது தந்தையார் சண்முக ஐயர். இவரது திண்ணபுர வெண்பாவிலிருந்து ஓர் பாடல்

சாரும் செபதவத்தாற் சாப அநுக்கிரகம்
சேரும் திருக்கூட்டத் திண்ணபுரம்— காருணியன்
திண்ணன் திறத்தைச் சிவகோ சரிக்குணர்த்தும்
அண்ணல் அமரா லயம்.

ஆதாரம்: 1. காரைநகர் மான்மியம்.
2. ஈழநாட்டுத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம்.

# வித்துவான் சபாபதி
## 1908 — 1989



காரைநகரிற் சங்கரப்பிள்ளை வள்ளியம்மைப் பெற்றோரின் இளையகுமாரனாகத் தோன்றிய இவர் தமது ஆரம்பக்கல்வியைக் காரைநகரிலும், இடைநிலைக் கல்வியைத் தெல்லிப்பழையிலும் பெற்றபின்னர், கோப்பாய் அரசினர் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியிற்கற்று 1928ஆம் ஆண்டிற் பயிற்றப்பட்ட ஆசிரியராக வெளியேறினார். அப்போது இவர் பாலபண்டித பரீட்சையிலும் சித்தியடைந்திருந்தார்.

அமெரிக்கன் மிஷன் தாபனத்தார் 1929 ஆம் ஆண்டிலே இவரைத் தெல்லிப்பழையிலிருந்த தங்கள் உயர்கல்லூரியில் ''பிறிலிம்'' வகுப்புக் கற்பிக்கும் ஆசிரியராக நியமித்தனர். அங்கு சேவை செய்யும் காலத்திலேயே இவர் நொத்தாரிசு பரீட்சையிலும் சித்திபெற்றிருந்தார்.

பின்பு காரைநகர் வியாவிற் சைவப்பாடசாலைத் தலைமையாசிரியராக நியமனம் பெற்றுச் சேவைபுரிந்தார். சிறிது காலத்தால் அங்கிருந்து விலகிக் காலியிலுள்ள உயர்தரவித்தியாசாலையொன்றல் அதிபராகக் கடமையாற்றினார். சில வருடங்களின் பின் இலங்கைப் பல்கலைக்கழகத்திற் சேர்ந்து 3 ஆண்டுகள் கற்றுத

தமிழ் டிப்புளோமா பட்டம் பெற்று வித்துவான் ஆயினர். வித்துவான் சபாபதியைக் கல்வித் திணைக் களம் வட்டாரக்கல்வியதிகாரியாக நியமித்தது. ஆங்கிலம் சிங்களம் என்னும் மொழிகளில் சரளமாகப் பேசவும் எழுதவும் வல்லமைபடைத்த வித்துவான் அவர்கள், அரசாங்கத்துடன் தமது கடிதத் தொடர்பு களையெல்லாம் தமிழிலேயே வைத்துக் கொள்ளும் கொள்கையினராயிருந்தார்.

1968இல் வட்டாரக்கல்வியதிகாரிச் சேவையி நின்றும் ஓய்வு பெற்ற பின்பு அவர்கள் ஆன்மிகத் துறையில் முன்னையிலும் தீவிரமாக ஈடுபட்டார். காரைநகர் ஈழத்துச்சிதம்பரத்துச் சிவாச்சிரமத்தில் அநேக பொழுதுகளைக் கழித்தார். இராமகிருஷ்ணர் விவேகானந்தர், சித்பவானந்தர் போன்றோரின் அருள் மொழிகளைத் தொடர்ந்து படித்து இன்பங்கண்டார். திருவாசகத்தில் மிக்க ஈடுபாடுடையவராக இருந்தார். தாம் பெற்ற இன்பம் பிறரும் பெறவேண்டுமென்ற உயரியநினைவில் அவ்வருள் மொழிகளில் பலவற்றைத் திரட்டி, ''அருள்நெறித்திரட்டு'' என்னும் பெயரிய நூலாக்கிப் பலருக்கும் இலவசமாக உதவினார்.

நேர்மை, வாய்மை, தன்மானம் நிறைந்த வித்து வான் சபாபதி அவர்கள் செய்யும் தொழிலே தெய் வமெனக் கொண்டு தமிழுக்கும் தமிழினத்துக்கும் நாட்டுக்கும் சேவை செய்து கொண்டே தமது 81 ஆம் வயசில் இறைபதம் எய்தினார்.

ஆதாரம் : இவர் நினைவாக இவர் குடும்பத்தினர் வெளியிட்டமலர்.

# சங்கநூற் செல்வர் அருளம்பலம்

## 1910 — 1966

இவருடைய தந்தையார் சுவாமிநாதன். தாயார் சிதம்பரம். காரைநகரிலே 11 - 04 - 1910 இலேபிறந்த இவர் தமது கல்வியை முதலிலே அமெரிக்கன் மிஷன் பாடசாலையிலும் பின்னர் சுப்பிரமணிய வித்தியா சாலையிலும் பெற்ருர். தமது குருவாகச் சுப்பிரமணிய தேசிகரைக் கொண்டார்.

கோப்பாய் அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை யிற் பயிற்சி பெற்ற பின் தாம்படித்த சுப்பிரமணிய வித்தியாசாலையிலேயே முதல் நியமனம் பெற்ருர். மதுரைத்தமிழ்ச்சங்கப் பண்டிதபரீட்சையிலே 1936 இலே திறமைச்சித்திபெற்ருர்.

பெரும்பாணுற்றுப்படை ஆராய்ச்சியுரையும் திரு முருகாற்றுப்படை ஆராய்ச்சியுரையும் 1937 இலே வெளியிட்டார்.

1938 இலே புத்தளம் அரசினர் பாடசாலையிலே அதிபராகப் பணியேற்ருர். பின்பு கொட்டாஞ்சேனை அரசினர் பாடசாலை, காலி உயர்தர அரசினர் பாட சாலை, களுத்துறை அரசினர் பாடசாலை என்பவற்றிற் கடமைபுரிந்தார். இனக்கலவரத்தின்போது மயிரிழை யிலே உயிர்தப்பி 1959 இலே யாழ்ப்பாணத்திற்கு மாற்றம்பெற்ருர்.

இவரியற்றிய பதிற்றுப்பத்து ஆராய்ச்சியுரைக்கு 1960 இலே இலங்கைச் சாகித்திய மண்டலப் பரிசு கிடைத்தது. காரைநகர் மக்கள் 1961 இலே பாராட்டு

விழா நடத்தி ''சங்கநூற் செல்வர்'' என்றபட்டம் வழங்கினர். யாழ்ப்பாணம் ஆரியதிராவிடபாஷாபி விருத்திச் சங்கம் ''பண்டிதமணி'' பட்டம் வழங்கிக் கௌரவித்தது.

திருவாசக ஆராய்ச்சியுரை பகுதி I, பகுதி II க்கும் சாகித்திய மண்டலப் பரிசில்கள் கிடைத்தன. இவரின் துணைவியார் விஜயசவுந்தரஅம்மா என்பவர்.

ஆதாரம்: இவரின் மகள்மூலம் க. வைத்தீசுவரக் குருக்கள் எழுதி யுதவியது.

---

செய்யும் தொழிலே தெய்வம்—அந்தத்
திறமைதான் நமது செல்வம்
கையுங் காலுந்தான் உதவி—கொண்ட
கடமைதான் நமக்குப் பதவி

— பட்டுக்கோட்டை கலியாணசுந்தரம்

மெய்ம்மண வாழ்வில் அதியின்ப மாயுய்ய வேண்டுபவர்
கையில் அதிபணம் பாரிய ஆஸ்தி கதித்தநகை
பெய்யுமின் ஞளிவ ளென்றெரு பெண்ணிற் பிரிதிகொள்ளார்
செய்திறம் மேன்மை குணங்கல்வி கற்பிவை வேண்டுவரே.

— பாவலர் துரையப்பாபிள்ளை

# மகா வித்துவான் F. X. C. நடராசா

## 1911 —

காரைநகரிலே 21 - 07 - 1911 இலே செல்லையா சிவகாமிப்பிள்ளை என்னும் தந்தை தாய்க்கு ஆறுவது மகனாக இவர் பிறந்தார்.

காரை. அ. மி. பாடசாலையிலும், வியாவில் சைவப் பாடசாலையிலும் 4ஆம் வகுப்பு வரையுள்ள கல்வியைப் பெற்றார். பின்பு காரை. இந்துக்கல்லூரியிலும் 1928இலே சுழிபுரம் விக்ரோறியாகல்லூரியிலும் கற்று E. S. L. C. பரீட்சையிற் சித்தியடைந்தார்.

முதலிற் காரை. வியாவில் சைவப்பாடசாலையிலே ஆசிரியராகப் பணிபுரிந்து 1931–33ஆம் ஆண்டுகளிலே மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிற் பயிற்சி பெற்றார். மட்டக்களப்பு சிசிலியா ஆங்கிலப் பாடசாலையிலும், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிலும் சேவையாற்றி 1947–50 ஆண்டுகளிற் கொழும்புப் பல்கலைக் கழகத்திற் கற்று வித்துவான் விருது பெற்றார்.

ஆசிரியராக அதிபராக 22 ஆண்டுகள் சேவை செய்து 1952இலே இலங்கை அரசகரும மொழித் திணைக்கள ஆராய்ச்சி உதவியாளராக நியமனம் பெற்றார். அந்தத் திணைக்கள அத்தியட்சகராக 1968இலே பதவியுயர்வு பெற்றுப் பின்பு 1971இலே ஓய்வூதியம் பெற்றார்.

இவர் சைவம், கிறிஸ்துவம், இசுலாம் என்ற சமயங்களைச் சேர்ந்தவையாயுள்ள இலக்கியம், இலக்கணம், வரலாறு தொடர்பான 21 நூல்களை ஆக்கியுள்ளார். எண்ணெய்ச்சிந்து (1958) ஈழமும் தமிழும் (1956) மொழிபெயர்ப்பு மரபு (1956) இலங்கைச்

சரித்திரம் (1956) ஈழத்து நாடோடிப் பாடல்கள் (1962) காரைநகர் மான்மியம் (1965) கண்ணகி வழக்குரை (1965) நாவலர் பெருமான் வாழ்க்கைக் குறிப்புக்கள் (1979) நன்னூற் காண்டிகையுரையும் நாவலர் பெருமானும் (1982) சரசோதிமாலை (1988) விபுலாநந்தர் மீட்சிப்பத்து (1990) என்ற நூல்களை ஆக்கியுள்ளார். இவரெழுதிய மட்டக்களப்பு மான்மியம் (1962) என்ற நூலுக்கு இலங்கைச் சாகித்திய மண்டலம் வழங்கிய பரிசிலைப் பாராட்டி மட்டக்களப்புக் கலாசாரப் பேரவை, விழா எடுத்து மகாவித்துவான் விருது வழங்கியது. 1991இலே சாகித்திய விழாவில் இலக்கியச் செம்மல் என்ற விருதும், இலங்கைத் தேசிய வீரர்தினத்திலே (1991) கலாசூரி விருந்து வழங்கப் பெற்றார்.

ஆதாரம்: நூலகர் சா. தவமணி எழுதிய நூல்விவரப் பட்டியல் (**Bibiliography**)

---

பேய்போல் திரிந்து பிணம்போற் கிடந்திட்ட பிச்சையெல்லாம்
நாய்போ லருந்தி நரிபோ லுழன்றுநன் மங்கையரைத்
தாய்போற் கருதித் தமர்போ லனைவர்க்கும் தாழ்ச்சிசொல்லிச்
சேய்போல் இருப்பர்கண் டீருண்மை ஞானம் தெளிந்தவரே

— பட்டினத்தடிகள்

நாட்டுப் பொருளிருக்க நாடாமல் அந்நியர்தம்
நாட்டுப் பொருளழகை நாடுவதேன் — வீட்டுக்
கொழுநன் அழகிலனென் றன்னியர்தங் கோலம்
விழைகுநரும் உண்டுபுவி மேல்.

— பண்டிதர் மகாலிங்கசிவம்

# வித்துவான் முருகேசனர்

## 1916 — 1988

காரைநகரில் உதித்த கணபதிப்பிள்ளை முருகேசனர் தமது கல்வியைச் சுப்பிரமணிய வித்தியாசாலையிலே பஞ்சாட்சரக்குருக்கள், நாகமுத்துப்புலவர் என்போரிடம் பெற்றுத் தமிழ்நாட்டுக்குச் சென்று, சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே நான்கு வருடம்படித்து வித்துவான் பட்டதாரியானர்.

முதலிலே கம்பளை சகீராக் கல்லூரியிலே ஆசிரிய நியமனம் பெற்ற வித்துவான், தமது சேவையிலே பெரும் பகுதிக்காலத்தைக் காரைநகர் யாழ்ரன் கல்லூரியிலேயே செலவிட்டார். காரை இந்துக்கல்லூரியிலும் சில ஆண்டுகள் சேவையாற்றினர். 1972 இலே ஓய்வூதியம் பெற்றார்.

இலங்கை வானொலியிலே இவருடைய நற்சிந்தனையுரைகள் அடிக்கடி இடம்பெற்றன. தமிழ்விடுதூது என்ற பிரபந்தமும் ஆக்கி வானொலியிலே நிகழ்த்தியுள்ளார். இயல் இசை நாடகம் என்ற முத்தமிழிலும் பேச்சு, கவிதை, நாடகங்கள் எழுதி நிகழ்த்தினர். இவை காரணமாகமக்கள் இவருக்கு முத்தமிழ் மணி என விருது சூட்டினர்.


வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்சங்க உறுப்பினராகிய இவர் சங்கம் நடத்தியபிரவேச பால பண்டித பண்டிதவகுப்புக்களிலே படிப்பித்தவர். இந்த வகுப்புக்களிற் படித்த இவருடைய மகள் சிவசோதி என்பவரும் பண்டிதராகச் சித்தியெய்தியுள்ளார்.

ஈழத்துச் சிதம்பர தேவத்தான மணிவாசகர்சபை அன்னதானசபை என்பவற்றுடன் நெடுங்காலம் தொடர்பு கொண்டு சமயசமூக சேவைகளும் புரிந்தவர்

ஆதாரம்: யாம் கேட்டும் அறிந்தும் எழுதியவை.

# பண்டிதர் வைத்தீசுவரக் குருக்கள்

## 1916 —



காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்திற் பிறந்த இவரது தந்தையார் கணபதீசுவரக் குருக்கள். தாயார் சிவயோக சுந்தராம்பாள்.

**இவர் கற்ற பாடசாலைகள்:**

காரை வலந்தலை அ. மி. பாடசாலையிலே 1-5 வகுப்புவரை படித்தார். சுப்பிரமணிய வித்தியாசாலையிலே பஞ்சாட்சரக் குருக்கள் சுப்பிரமணிய தேசிகர் என்போரிடம் 6-8 வகுப்புக்கள் வரையிற் கற்றார். பின் இந்துக் கல்லூரியிற் சேர்ந்து படித்து V. S. L. C. வகுப்புச் சித்தியடைந்தார். அளவெட்டி நாகபூஷணி வித்தியாசாலையிற் படித்து, பிறிலிம் வகுப்புச் சித்தி பெற்றார். பின்பு சுன்னாகம் பிராசீன பாடசாலையிற் சேர்ந்து சம்ஸ்கிருதம் வேத விசாரத சிதம்பர சாத்திரிகளிடமும், தமிழை மகாவித்துவான் கணேசையரிடமும் படித்துப் பாலபண்டிதர் தேர்விற் சித்தியெய்தினார். பின்பு பரமேசுவர பண்டித ஆசிரிய பயிற்சிக் கலாசாலையிற் சேர்ந்து 1936 — 1939 கற்றுப் பண்டிதரும் பயிற்சி பெற்ற ஆசிரியருமாயினார்.

**இவர் கற்பித்த பாடசாலைகள்:**

கொழும்பு விவேகானந்த வித்தியாலயத்திலே முதல் நியமனம் பெற்று அங்கு சபையின் சமய பாடப் பரீட்சைக் குழுவினருள் ஒருவராயிருந்து சேவையும் செய்ததோடு பத்திரிகைச் செய்தியாளராயும் பணிபுரிந்தார்.

**இவரது ஆக்கங்கள்:**

1. ஈழத்துச் சிதம்பர புராணச் சுருக்கம்
2. தொடர்மொழிக்கு ஒரு மொழி
3. எதிர்ச் சொற் கோவை
4. உரைநடையாக்கம்
5. பாரதகாப்பியத்தில் வரும் பாத்திரங்களின் குணவியல்பு
6. பெரியபுராணம்—திருநகரப்படல உரை
7. காரைநகரிற் சைவசமயவளர்ச்சி
8. மதிப்பீட்டுப் பயிற்சிக்கோவை தமிழ்மொழி 1-5புத்தகங்கள் (க.பொ.த.சா.த)

**இவர் பதிப்பித்த நூல்கள்**

1. நாவலர் பிள்ளைத்தமிழ்
2. திருமுறைப்பெருமை
3. நன்னூற் காண்டிகையுரையும் நாவலர் பெருமானும்
4. திண்ணபுர அந்தாதியுரை
5. அருள் நெறித் திரட்டு—தொகுப்பு
6. திக்கையந்தாதியுரை
7. க்ஷேத்திரத் திருவெண்பா உரை
8. தன்னையந்தாதியுரை
9. திருவெழு கூற்றிருக்கை உரை
10. சீறுப்புராணம்—சிலசெய்யுள்கள் உரை

11. திருப்போசை வெண்பா உரை
12. ஈழத்துச் சிதம்பரபுராணம் உரை
13. கார்த்திகேயப் புலவர் நினைவுமலர்
14. புதுமுறைக் கட்டுரைக் கோவைகள் 2.
இன்னும் சில

காரைநகர் தமிழ் வளர்ச்சிக் கழகம், காரை மணி வாசகர் சபையின் தாபகர். 1971ஆம் ஆண்டிலே இலங்கையிலே வெளிவந்த பதிப்புக்களிற் சிறந்தபதிப்பு ஈழத்துச் சிதம்பரபுராணம் என்று அரசு தெரிவு செய்து இவருக்குச் சான்றிதழ் வழங்கியது. காரைநகர் சைவ மகாசபைப் பொன்விழா மலர், காரை மணிவாசகர் சபைப்பொன்விழாமலர், திருவாதிரை மலர்கள் இவற்றின் ஆசிரியராயும் சேவையாற்றினர்.

ஆதாரம்: இவரிடம் கேட்டு யாம் எழுதியவை

---

அன்னநடை பிடியினடை யழகுநடை
யல்லவென அகற்றி யந்நாட்
பன்னுமுது புலவரிடஞ் செய்யுணடை
பயின்றதமிழ்ப் பாவை யாட்கு
வன்னடை வழங்குநடை வசனநடை
எனப்பயிற்றி வைத்த ஆசான்
மன்னுமருள் நாவலன்றன் அழியாநல்
லொழுக்கநடை வாழி வாழி.

— சோமசுந்தரப்புலவர்

# வித்துவான் மு.சபாரத்தினம்
## 1924 -- 1989

காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட இவரின் தந்தையார் முத்தையா ; தாயார் சின்னக்குட்டி.

காரைநகர் சுப்பிரணிய வித்தியாசாலையிலும் பின் இந்துக்கல்லூரியிலும் கற்று சி. பா . த பரீட்சையிலே தேறினார். தமிழகம் சென்று தஞ்சாவூர், சென்னைப் பல்கலைக் கழகங்களிற் படித்து வித்துவான் பட்டதாரியானார். படிக்கும் காலத்திலேயே சொல்வன்மையிற் சிறந்து, அகில இந்தியரீதியில் நடைபெற்ற நாவன்மைப் போட்டியிலே முதலிடம் பெற்றார்.

இவர் 1952 இலே சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலே ஆசிரிய நியமனம் பெற்றார். பின் உரும்பிராய் இந்துக் கல்லூரிக்கு மாற்றம் பெற்று, ஈற்றிலே 1979 ஆம் ஆண்டிலே காரை இந்துக்கல்லூரி ஆசிரியர் சேவையிலே இடம் பெற்றார். 1984 ஆம் ஆண்டிலே சேவையிலிருந்து ஓய்வு பெற்றார். அந்த ஆண்டிலே அவரின் தமிழ், சமய, சமூக சேவைகளைப்பாராட்டிக் காரைநகர் மக்கள் மிகச்சிறந்த முறையில் மணிவிழா நடத்தி, ''செஞ்சொல் வாரிதி'' என்ற விருது சூட்டி, பட்டும் பொன்னும் வழங்கிச் சிறப்பித்தனர்.

பேச்சு வன்மையிற் சிறந்த இவர் இலங்கையின் பல பாகங்களுக்கும் சென்று நூற்றுக்கணக்கான பேச்சுக்கள், தொடர் சொற்பொழிவுகள் செய்து சைவமணி சித்தாந்தச் செம்மல் என்னும் விருதுகளையும் பெற்றார். சிங்கப்பூர், மலேசியா தேசங்களுக்கும் சென்று பிரசங்கங்கள் பல செய்து புகழ் பெற்றார்.

காரைநகரிலே தமது இல்லத்திலே பாலா அச்சகத்தைத் தமது மகன் பாலகிருஷ்ணன் பெயரிலே தாபித்து அச்சுவேலையிலும் புகழ் பெற்றார்.

'' ஆண்டிகேணி ஐயனார் '' என்னும் நூலை 1987 இலே எழுதி வெளியிட்டார் காரைநகரிலுள்ள சங்கங்கள் பலவற்றிலும் பெரிய பதவிகள் வகித்துச் சேவை செய்த இவர் 1989 ஆம் ஆண்டிலே காலமாயினர்.

ஆதாரம்; இவருடைய குடும்பத்தினர் வெளியிட்ட நினைவுமலர் ( 1989 )

---

ஆபத்துக் குதவாப் பிள்ளை
அரும்பசிக் குதவா அன்னம்
தாபத்தைத் தணியாத் தண்ணீர்
தரித்திரம் அறியாப் பெண்டிர்
கோபத்தை அடக்கா வேந்தன்
குருமொழி கொள்ளாச் சீடன்
பாபத்தைத் தீராத் தீர்த்தம்
பயனில்லை ஏழுந் தாமே.

— விவேகசிந்தாமணி

பொருளுங் கலையும் புடவியொடு மற்றும்
அருளும் படிவேண்டே லையா — தெருளும்
மறையதன்மூ லத்தும் மருதடிமூ லத்தும்
உறைமுதலே வேண்டுவனுன் றுள்.

— மகாவித்துவான் சி. கணேசையர்.

# பண்டிதை சரஸ்வதி

## 1937–

இவரின் தந்தையார் விசுவலிங்கம். கணவர் யோகலிங்கம். காரைநகர் தெற்கு அமெரிக்கன் மிஷன் பாடசாலையிலே முதலிலும், பின்னர் காரை இந்துக்கல்லூரியிலும் கற்று, சி. பா. த. பரீட்சையில் சித்தியடைந்தார்.

1957 — 1958 ஆம் ஆண்டுகளிலே திருநெல்வேலி சைவாசிரிய பயிற்சிக்கல்லூரியிற் படித்துப் பயிற்றப் பட்ட ஆசிரியரானார். அங்குக் கற்கும் காலத்திலே பண்டிதமணி சி. கணபதிபிள்ளை, உபஅதிபர் பொ. கைலாசபதி என்போரின் அன்புக்குப் பாத்திரமான மாணவியாகத் திகழ்ந்தார்.

1959 இலே வியாவிற் கனிஷ்டமகாவித்தியாலய ஆசிரியராயும் 1967 இலே காரை இந்துக்கல்லூரி ஆசிரியராயும் கடமை செய்த இவர் 1963 ஆம் ஆண்டிலே பண்டிதர் பரீட்சையிலே சித்தியடைந்தார். 1976 இலே காரைநகர் யாழ்ரன்கல்லூரிச்சேவையிற் சேர்ந்து, 1990 தொடக்கம் அந்தக்கல்லூரியின் கனிஷ்டபிரிவின் பொறுப்பாசிரியராக நியமிக்கப்பட்டுச் சேவைபுரிந்து வருகின்றார்.

ஆதாரம்: இவரிடம் கேட்டு க. வைத்தீசுவரக் குருக்கள் எழுதியவை

# கலாநிதி சுந்தரம்பிள்ளை

## 1938 —

**கல்வியும் பிறப்பும் :**



காரைநகரிலே களபூமிப் பிட்டியொல்லைக் குறிச்சியிற் பிறந்த இவரின் தந்தையார் செல்லர். தாயார் தங்கம்மா. 20-05-1938இல் பிறந்த இவர் ஆரம்பக் கல்வியை ஊரிக்காடு அ. மி. த. க. பாடசாலையிலும், ஆங்கிலக் கல்வியை 6–10 வகுப்புவரை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியிலும் பெற்றார். சுழிபுரம் விக்ரோறியா கல்லூரியிற் கற்று க. பொ. த. உயர்தர பரீட்சையிற் சித்தியடைந்தார். பின்பு கொழும்பு அக்குவேஞஸ் பல்கலைக் கல்லூரியிற் சில வருடங்கள் பயின்றார். 1960இலே இலண்டன் பல்கலைக்கழக (B. A.) கலைமாணிப் பட்டம் பெற்றார். கொழும்புப் பல்கலைக்கழகத்து M. Ed. பட்டம் 1980 இலும், M. Phil பட்டம் 1983இலும் பெற்றார். 1990இலே யாழ். பல்கலைக் கழகம் நாடகத்துறையிற் கலாநிதிப் பட்டம் இவருக்கு வழங்கியது. இலங்கைப் பல்கலைக்கழகக் கல்வி டிப்புளோமா பரீட்சையிலே 1976ஆம் ஆண்டிலும், நாடகம் அரங்கியல் டிப்புளோமா பரீட்சையிலே 1977இலும் சித்தியடைந்தார்.

**சேவைகள் :**

இவர் 1960ஆம் ஆண்டு தொடக்கம் ஆசிரிய சேவையிலும், 1978 தொடக்கம் கல்லூரி அதிபர் சேவையிலும், 1981 தொடக்கம் பலாலி ஆசிரிய

கலாசாலை விரிவுரையாளர் சேவையிலும் இருந்தார். 1984இலே தலவாக்கொல்லை ஆசிரிய கலாசாலை அதிபராகக் கடமையாற்றினர். இப்பொழுது கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைச் சிரேட்ட விரிவுரையாளராகவும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிப் பட்டப்படிப்புப் பிரிவுப் பகுதி நேர விரிவுரையாளராகவும் கடமையாற்றி வருகின்றார்.

**எழுத்துத் துறை**

இவர் எழுத்துத் துறையில் 196‍ தொடக்கம் ஈடுபட்டார். கவிதைகள் பலபாடிப் புகழ் பெற்றதைத் தொடர்ந்து நாடகம், கட்டுரை, விமர்சனம், நாடக ஆய்வுத்துறையிலும் பரந்து உழைத்து வருகின்றார். இவரது " தேனாறு " என்ற கவிதைத்தொகுதி யாழ் இலக்கிய வட்டவெளியீடாக 1971 இலும், " பாதை மாறியபோது " என்ற காவியம் வரதர் வெளியீடாக 1986 இலும், நாடகதீபம் 1989 ஆம் ஆண்டு காங்கேயன்துறை வசந்தகானசபா வெளியீடாகவும் வெளியாயின. 1990 இலே யாழ். இலக்கியவட்ட வெளியீடாக வந்த " இசைநாடக வரலாறு " சாகித்தியமண்டலப் பரிசு பெற்றது. " காவேரி " என்ற காவியம் 1993 இலே யாழ். இலக்கிய வட்ட வெளியீடாக நூலுருவம் பெற்றது.

இவர் அகில இலங்கைரீதியிலே கவிதைப்போட்டிகளிலே தங்கப்பதக்கங்கள் பரிசிலாகப் பெற்றார். 3 தடவைகள் சாகித்திய மண்டலப் பரிசில் பெற்றார்.

**நாடகத்துறையும் பல்கலைப் புலமையும்**

பாடசாலையிற் படித்த காலத்திலிருந்தே இவருக்கு இத்துறையிலே ஈடுபாடு இருந்தது. நாட்டுக்கூத்துக்

துறையில் இவர் விசேட பயிற்சி பெற்றவர். ஆடலும் பாடலும் அறிந்தவர்; ஆய்வாளர். அண்மைக்காலத் திலே சிறந்த ஆட்டக்கூத்துக்களை மேடையேற்றியவர். அவற்றுட் ''பாஞ்சாலி சபதம்'' சிறந்த வெற்றிப் படைப்பு எனப் பாரட்டுப் பெற்றது. பல்கலைக்கழகத் திலே நாடகப் பயிற்சியை மேலைநாட்டு அறிஞர்களின் கீழ்ப்பெற்றவர். அதனால் நவீன நாடகத்துறையிலும் ஆற்றல் பெற்றவர்.

நடிகர்; நெறியாளர்; நாடக ஆசிரியர்; நாடக விமர்சகர். இலக்கியம், சமயம் என்பவற்றிற் சிறந்த சொற்பொழிவாளர். கவியரங்குக் கவிஞர். தமிழ், ஆங் கிலம், சம்ஸ்கிருதம், பாளி ஆகிய மொழிகளிலே பாண் டித்தியம் உடையவர்.

ஆதாரம்: இவரிடம் நேரில் கேட்டு யாம் எழுதியவை.

---

மானிட மேந்தி தருமுரு காதிரு மால்மருகா
கானிட மார்குற மான்தினை மாவைக் கலந்துணற்குத்
தேனிட வுண்டு களித்தவ னேநின் திருவடிக்கீழ்
நானிடங் கொள்ள உளமோ திருச்செந்தில் நாயகனே.

— திருச்செந்தூர்ப்பதிகம்

பெற்றதா யும்வெறுத் திடுவாள் — எனக்குப்
பிள்ளைநீ யல்லை பிசாசென்று புகல்வாள்
சற்றும் சிறப்பில்லை மணியே — குடி
சாராது வாழ்மிக்க சீராய்க்கண் மணியே...

— குடிவெறியின்கேடுபற்றி முதுதமிழ்ப்புலவர் நல்லதம்பி

# புலவர் தேவகி

## 1939 —

காரைநகர் ஆலடியைச் சேர்ந்த வைத்தியலிங்கத்தின் மகளாகிய இவர் 11.09.1939 இலே பிறந்தவர்.

முதலிலே ஆயிலி சிவஞானோதய வித்தியாசாலையிலும் பின்பு யாழ்ரன் கல்லூரியிலும் கற்றபின் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் படித்துப்புலவரானவர். கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியிலே 2 ஆண்டுகள் படித்துப் பயிற்றப்பட்ட ஆசிரியரான இவர் காரை இந்துக்கல்லூரி, தோப்புக்காடு மறைஞான சம்பந்த வித்தியாசாலைகளிற் கற்பித்தவர். இவர் மறைஞானசம்பந்தாவில் 1979 தொடக்கம் கற்பித்து வருகின்றார்.

இவரின் கணவர் திரு. சுந்தரராஜா அவர்கள்.

ஆதாரம்: இவரைநேரிற் கண்டுகேட்டுப் பண்டிதர் மு. சு. வேலாயுதபிள்ளை எழுதியுதவியது.

---

நீறருட் கண்மணி யெங்கேபஞ் சாக்கர நேர்மையெங்கே
வீறுயர் வைதிக சைவமெங் கேதமிழ் வேதமெங்கே
தூறிக் கலியிலெஞ் சீமானிந் நாள்வந்து தோன்றிலையேல்
கூறரு ளாறு முகநா வலசற் குருமணியே.

— நாவலர் சற்குருமணிமாலை – அம்பலவாணநாவலர்

# புலவர் பூரணம்

## 1940 —

இவரது தந்தையார் காரைநகர் சின்ஞலடியைச் சேர்ந்த கந்தப்பு அவர்கள். 9. 8. 1940 இலே பிறந்த இவர் தங்கோடை அமெரிக்கன் மிஷன் பாடசாலேயிலும், பின் யாழ்ரன் கல்லூரியிலும் கற்றவர். சிதம்பரம் அண்ணுமலேப் பல்கலேக்கழகத்திலே 5 ஆண்டுகள் படித்துப் புலவர், B. O. L. விருதுகள் பெற்றவர்.

இவருடைய கணவர் திரு ஏஞதிநாதன் அவர்கள். 1964 — 1969 ஆம் ஆண்டுகள் வரை ஈழநாடு செய்தி இதழின் உதவி யாசிரியராயும் குடும்பச்சுடர் என்ற சஞ்சிகையின் ஆசிரியராகவும் இருந்தவர்.

'' பசுந்தமிழ்ச் சோலே '' என்னும் வாரமலரிலே இவர் சங்ககாலந்தொட்டு 1969 வரையான தொடர் கட்டுரைகள் எழுதியவர். இலங்கை வானெலியிலே இவரின் உரைச்சித்திரங்கள் 1964—1969 காலப் பகுதியிலே இடம் பெற்றன. சமய இலக்கியங்கள் பற்றிய சொற் பொழிவுகள் ஆற்றியவர். அறிஞர் பேட்டிகளிலும் ஈடுபட்டவர்.

1976 இலே கரம்பன் சண்முகநாதவித்தியாலய ஆசிரியராகிப்பின்பு, சென்ற 17 ஆண்டுகளாகக் காரைநகர் இந்துக் கல்லூரியிற் கற்பித்து வருகின்ருர்.

இவரின் ஆக்கமான ''தாய்மையின் பெருமை என்னும் கட்டுரைக்கனிகள்'' அண்ணுமலேப் பல்கலேக் கழகப்பதிப்பாக நூலுருவம் பெற்றன.

**ஆதாரம்: இவரிடம்கேட்டுப் பண்டிதர் மு. சு. வேலாயுதபிள்ளே எழுதியுதவியது.**

# பண்டிதை யோகலட்சுமி

## 1944 —

காரைநகர் ஆயிலியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், ஆயிலி சிவஞானோதய வித்தியாசாலையின் அதிபராயிருந்த சோமசுந்தரம் அவர்களின் புதல்வியாவர். இவரது தாயார் பெயர் இலட்சுமிப்பிள்ளை. 04-07-1944 இலே பிறந்த அவர் தமது கல்வியை முதலிலே ஆயிலியிலும் பின்பு யாழ்ரன் கல்லூரியிலும் பெற்றவர்.

வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச்சங்கம் பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்திலே நடத்திய பாலபண்டித வகுப்பிலும் பின்பு பண்டித வகுப்பிலும் கற்றுச்சித்திபெற்றவர். 1970இலே பண்டிதரான இவர், பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டதாரி மணவராகப் (1977 — 1979) படித்து (B. A.) கலைமாணிப் பரீட்சையிலே சித்தியடைந்தார் (1990 — 1991) இலே யாழ்பல்கலைக்கழகக்கல்வி டிப்புளோமா பரீட்சையிலும் சித்தி பெற்றவர்.

முதலிலே புங்குடுதீவு மகாவித்தியாலய ஆசிரியராக 1977இலே நியமனம் பெற்று, காரை. இந்துக்கல்லூரி வவுனியா இராசேந்திரன்குளம் ம. வி. என்பவற்றிற் கற்பித்து 1982 தொடக்கம் யாழ்ரன் கல்லூரி ஆசிரியராகக் கடமையாற்றி வருகிறார். இந்தக் கல்லூரிக் கீதத்தை ஆக்கியவர் இவரே.

1979 — 1982 இலே சமூகக்கல்விப் பாடத்திலே விசேட பயிற்சிபெற்று 5 பாடங்களிலும் அதிவிசேட சித்திபெற்றவர்.

பண்டிதர் தேர்விலே சித்தி பெற்றபின் ''திருவெம்பாவையும் திருக்கோவையாரும்'' என்னும் தலைப்பிலே ஆராய்ச்சிக் கட்டுரை சமர்ப்பித்தவர். வாழ்த்துப் பாக்கள், பிரிவுபசாரப் பாக்கள், சரமகவிகள் பலபல பாடி வழங்கியவர்.

**ஆதாரம் : இவரிடம் கேட்டு யாம் எழுதியவை.**

# பண்டிதர் வேலாயுதபிள்ளை

## 1945 —

இவர் காரைநகர் புதுறோட்டு முத்தையா சுப்பிர மணியத்தின் மைந்தர். முதலிலே காரை சுப்பிரமணிய வித்தியாசாலையிலும் பின்பு இந்துக்கல்லூரியிலும் கற்றவர்.

வட்டுக்கோட்டைத் தொகுதித்தமிழ்ச்சங்கம் நடத்திய பிரவேச பாலபண்டித பண்டித வகுப்புக் களிலே வரன்முறையாகக்கற்று, 1972இலே பண்டித ரானார்.

காரை இந்துக்கல்லூரி ஆசிரியராகச் சேவை யாற்றும் இவர், காரைநகரின் பெரும் புலவர்களுள் ஒருவரான நாகமுத்துப் புலவரின் ஏகபுத்திரனை ஆசிரியர் கனக சுந்தரத்தின் மகளைத் திருமணம் செய்தவர். நாகமுத்துப் புலவரின் கவிதைத்திரட்டினை 1974இலே மறுபதிப்பாக வெளியிட்டவர்.

ஈழத்துச் சிதம்பர தேவத்தானத்து மணிவாசகர் சபையின் செயலாளராக, தலைவராகப்பல ஆண்டுகள் பணி செய்தவர். வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச் சங்கத்தின் இன்றைய செயலாளர். காரைநகரில் கம்பன்கழகக்கிளையை இயக்கி வருவதிலும் முக்கியபங்கு வகிப்பவர். சிறந்த பேச்சாளர், எழுத்தாளர், கவிஞராக விளங்குகின்ற இவரின் கவிதைகள் கீழே தரப்படுபவை.

வண்டிக ளின்றிச் செருப்புமில் லாது மண்ணுறக் காலினால் நடந்தும்
மண்டிய இருளிற் பனியினில் வெயிலில் மழையினிற் பலஇடர் உழந்தும்
உண்டியை ஒறுத்தும் ஊரெங்கும் ஓடி உத்தமத் தொண்டர்கள் பலரைக்
கண்டுமெங் காரை நகரினிற் கல்விக் கழங்கள் தாபித்த பெரியார்.

சுப்பிர மணிய வித்தியா சாலை சுடர்வியா விற்பாட சாலை
திப்பிய சயம்பர் இந்துக்கல் லூரி சிரியர் பலரையும் மேவிக்
கைப்பொருள் இழந்தும் ஆவியும் உடலும் காய்ந்திட ஒளிமிகு பொன்போல்
ஒப்பிலாத் தொண்டாற் றுபித்துச் சைவ ஒளியிங்கு திகழவைத் தனரே.

நாவலர் ஒழுக லாறெங்கள் காரை நகரினில் ஒளிரவைத் திட்ட
காவலர் அருணு சலமகான் சேவை காலமெல் லாம்நின் றிலங்க
ஓவிய மணிமண்டபமமைத் திடுவோம் உயர்சைவ மன்றமாக் கிடுவோம்
ஆவலொ டாண்டு தொறும்விழா எடுத்தே அரியநன் றிக்கடன் புரிவோம்.

இவை அருணுசல உபாத்தியார் பற்றி வந்தவை.

ஆதாரம்: இவரிடம் யாம் கேட்டு எழுதியவை

---

தம்முடைய சாதியையும் தம்முடைய பாசையையும்
தம்முடைய நாட்டினையும் தாழ்த்துரைப்பர் — புன்மையென்னே
வேசியராய் முற்பிறப்பில் மானத்தை விற்றுண்ட
நீச சுபாவம் நினை

எவ்வுயிருந் தன்னுயிரே என்றும் பிறன்பொருளைக்
கவ்வையுறு மண்ணினுறுங் கட்டியென்றும்—செவ்விபெறும்
தன்மனைவி யல்லாளைத் தாயென்றும் காண்பவனை
வன்மையுறு பண்டிதனுய் வை.

— சாணக்கிய நிதிவெண்பா

# பண்டிதை சிவசோதி
## 1947 —

காரைநகர் மாப்பாணபுரியிலே வாழ்ந்த வித்துவான் திரு. க. முருகேசனாரின் மகளாகிய இவர் வலந்தலை அ.மி.பாடசாலையிலே தமது ஆரம்பக் கல்வியைப் பெற்றார். பின்பு காரை இந்துக்கல்லூரியிலே 6-ஆம் வகுப்புத் தொடக்கம் க. பொ. த. உயர் வகுப்பு வரையுள்ள கல்வியைப் பெற்றார்.

வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச் சங்கம் நடத்திய பிரவேச பாலபண்டித, பண்டித வகுப்புக்களிலே 1964-1969 வரை வரன்முறையாகக் கற்றுப் பண்டிதையானார். காரை இந்துக்கல்லூரியிலே 1970-1977 வரை தொண்டர் ஆசிரியராகக் கற்பித்தார்.

ஆசிரியர் பொன்னம்பலம் என்பவரைத் திருமணம் செய்து மக்களைப் பெற்று இல்லறம் நடத்துகின்றார்.

ஆதாரம்; இவரிடம் யாம் கேட்டு எழுதியவை.

---

தமிழுக்கு அமுதென்றுபேர் — இன்பத்
தமிழெங்கள் அருமந்த உயிருக்கு நேர்.

— பாரதி தாசன்

இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர்
விருந்தமுதம் என்றாலும் வேண்டேன்

— தமிழ் விடுதூது

## 3 சங்கானை

| | |
|---|---|
| பண்டிதர் நமசிவாயதேசிகர் | 1915 — |
| பண்டிதர் வேலுப்பிள்ளை | 1915 — 1987 |
| முதுகலைமாணி சிவானந்தம் | 1932 — |
| பண்டிதை விமலாதேவி | 1942 — |

# பண்டிதர் நமசிவாயதேசிகர்

## 1915 —

கழிபுரம் செட்டிகுறிச்சியிலே ஏறக்குறைய 150 வருடங்களுக்கு முன் வாழ்ந்த சைவச் சான்றோர் பலர் ஆசார சீலம் உடையவர்களாய் இருந்தனர். அவர் களிற் சிலர் சமயதீட்சையுடன் விசேட தீட்சையும் பெற்று மேம்பட்டனர். மேலும் சிலர் ஆசாரிய அபிடேகம் பெற்றுக் கண்டிகை, பூணூல் தரித்த கோலத்திலே வைதிகத் திருவினராய் வாழ்ந்தனர். அவர்கள் கோயிற்பூசகர் சேவையின் பொருட்டு இடம் பெயர்ந்து போய்த் திருநெல்வேலி, கட்டுவன், குரும்ப சிட்டி, அல்வாய் முதலான ஊர்களிற் குடியேறினர். கட்டுவனிலே அவ்வாறு குடியேறிய வைதிகக் குடும்பத் திலே வந்தவர் இராமசாமி. அவருடைய மனை வியார் பார்வதம்அம்மா. இவர்களின் இளைய மகனாக உதித்தவரே நமசிவாயம்.

நமசிவாயம் தமது ஆரம்பக் கல்வியைக் குரும்ப சிட்டி மகாதேவ வித்தியாசாலையிலும், பின் சுன்னாகம் பிராசீன பாடசாலையிலும், தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலும் பெற்றார். தமிழில் எட்டாம் (J. S. C.) வகுப்புச் சித்தியடைந்து சம்ஸ்கிருதத்திலும் ஓரளவு பயிற்சியுற்றிருந்தார். பின்னர் அளவெட்டி, சீனன் கலட்டி ஞானோதய வித்தியாசாலையிற் கல்விகற்று ''பிறிலிம்'' எனப்படும் S. S. C. பரீட்சையிலே சித்தி யடைந்தார். ஞானோதய வித்தியாசாலையிலே 10 மாதங்கள் ஆசிரிய சேவையுமாற்றினார்.

1933—1935 ஆண்டுக் காலப்பகுதியிலே திருநெல்வேலிச் சைவாசிரியர் பயிற்சிக்கலாசாலையிலே படித்த காலத்திலேபாலபண்டிதபரீட்சையிற்சித்தியடைந்தார்

1935 இலே வீமன்கமம் ஆரம்ப பாடசாலையிலே ஆசிரிய நியமனம் பெற்றார். அங்கு 1 - 7 - 1951 இலே இருந்து 31 - 12 -1971 வரை கனிட்ட அதிபராகப் பதவி வகித்து ஓய்வூதியம் பெறலானார்.

ஆசிரிய சேவை ஏற்ற 1935 ஆம் ஆண்டிலும் அதற்கு முன்பிருந்தும் வித்துவ சிரோமணி சி. கணேசையரையடுத்துக் குருகுல முறையிலே தமிழிலக்கிய இலக்கணங்களைக் கற்று, 1938 இலே மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டித பரீட்சையிற் சித்தி எய்தினர். கணேசையரின் விருப்பப்படி பண்டிதர் நமசிவாயம் பாலபண்டித பண்டித வகுப்புக்களுக்கும் கல்வி கற்பிக்கும் பொறுப்பை ஏற்றார். ஐயர் அவர்களின் தொல்காப்பிய உரைவிளக்கக் குறிப்புக்குப் பண்டிதர் நமசிவாயம் உதவியாளராய்ப் பணிபுரிந்தார்.

மல்லாகம் ஏழாலை மாவிட்டபுரம் போன்ற இடங்களிலே நடந்த பாலபண்டித பண்டித வகுப்புக்களிலும் அவர் படிப்பித்திருக்கின்றார்.

கழுத்துறை முருகன் கோயில் முதலாக 14 கோயில்களிலே அமர்ந்த மூர்த்திகளுக்கு ஊஞ்சல் பாடியுள்ளார். கீரிமலை நகுலேசுவரர் முதலாக 10 கடவுளருக்குப் பதிகமும் செல்வச் சந்நிதிக் கந்தர் மீது சதகமும், கீரிமலை நகுலேசுவரர் மீது திருவந்தாதியும், கட்டுவன் முத்துமாரியம்மன் மீது திருப்பள்ளியெழுச்சியும் பாடியுள்ளார்.

இவருடைய வாழ்த்துப் பாக்களாலே சிறப்பிக்கப் பெற்ற பெரியார் பலர். இவரெழுதிய கட்டுரைகள் பல செய்தித் தாள்களிலும் வானொலியிலும் வெளிவந்துள் ளன. பண்டிதருடைய மாணவர்கள் இவரின் ஆக்கங்கள் அனைத்தையும் தொகுத்து வெளியிட முயலுகின்றனர்.

தமது ஊரிலும் அயலூரிலும் உள்ள பல்வேறு சங்கங்களின் தலைவராக இருந்து சைவத்துக்கும் தமி ழுக்கும் சமூகத்துக்கும் செய்த சேவைகளைக் கௌர விக்கும் முறையில் இவருக்கு அரசாங்கம் சமாதான நீதவான் விருதும், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் இலக்கண வித்தகர் விருதும், நல்லை ஞானசம்பந்தர் ஆதீனம் செந்தமிழ்த்திலகம் விருதும் வழங்கிச் சிறப் பித்துள்ளன.

மயிலிட்டியிற் பிறந்து சங்கானையிலே திருமணம் செய்த பண்டிதர் இ. நமசிவாயதேசிகர் அவர்கள் சென்ற பல ஆண்டுக்காலமாகச் சங்கானையிலும் பண் டத்தரிப்பிலும் அமைதியாக வாழ்ந்து வருகின்றார்.

ஆதாரம்: இவரைப் பேட்டி கண்டு பண்டிதர் ம. ந. கடம்பேசுவரன் எழுதியுதவியது

---

தமிழனென்று சொல்லடா — தலைநிமிர்ந்து நில்லடா
அமுதமூறும் அன்புகொண்டு அரசுசெய்த நாட்டிலே
அடிமையென்று பிறர்நகைக்க முடிவணங்கி நிற்பதா
இமயந்தொட்டுக் குமரிமட்டும் இசைபரந்த மக்கள் நாம்
இனியுமந்தப் பெருமைகொள்ள ஏற்றயாவும் செய்குவோம்.

— நாமக்கல் கவிஞர்

# பண்டிதர் வேலுப்பிள்ளை

## 1915 — 1987

தெல்லிப்பழையைச் சேர்ந்த சின்னத்தம்பியின் மகனாக இவர் 1915 இலே பிறந்தார். தமது கல்வியை மகாஜனக் கல்லூரியிற் பெற்றார். தமிழாசிரிய தராதரப் பத்திரப் பரீட்சையிலே தேறி 1938 ல் ஆசிரிய நியமனம் பெற்றார்.

பாடசாலைகளிலே படிப்பிக்கும் காலத்திலேயே யா. ஆ. தி. பா. சங்கப் பாலபண்டித பரீட்சையிலே சித்தியெய்தினார். 1946 இலே பண்டித பரீட்சையிலே தேறினார்.

சங்கானையிலே ஆசிரியை ஆதிலட்சுமி என்பவரைத் திருமணஞ் செய்து அங்கேயே இல்லிடமமைத்து வாழ்ந்தார்.

வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச்சங்க உறுப்பினராக இவரின் சரித்திரம் பற்றிய குறிப்புக்களைச் சங்கப் பதிவேட்டிலே இடம்பெறச் செய்துள்ளார். இவர் செய்த ஆக்கமாக நூல்கள் எதுவும் அறியப்படவில்லை.

1970 இலே ஆசிரிய சேவையில் நின்றும் ஓய்வு பெற்றார். 1987 இலே இலங்கையிலே தங்கிய இராணுவத் தாக்குதலாலே மரணத்தைத் தழுவிக் கொண்டார்.

ஆதாரம்: 1. சங்கப் பதிவேடு
2. இவரிருந்த வீட்டின் அயலிலே இருப்பவர்களிடம் யாம் கேட்டு அறிந்தவை.

# முதுகலைமாணி சிவானந்தம்

**1932 —**



இவர் சங்கானை அரசடி வைரவர் கோயில் அர்ச்சகர் பரம்பரையினரான முத்துச் சாமிப்பிள்ளை சரசுவதி என்னும் பெற்றோரின் மைந்தன்.

ஆரம்பக் கல்வியைச் சித்தன்கேணிக் கணேசவித்தியாசாலை, சண்டிலிப்பாய் வாணிநிகேதன வித்தியா சாலைகளிற் பெற்றபின், சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி, வட்டு. யாழ்ப்பாணக்கல்லூரி களிலே உயர் கல்வியைத் தொடர்ந்தவர். சென்னைக் கிறித்துவக்கல்லூரியிற் படித்து முதுகலைமாணிப் ( M. A. ) பட்டம் பெற்றோர்.

பட்டதாரியான இவர் முதலிலே ஆசிரியராகச் சேவையாற்றி அதிபராகப் பதவி உயர்வு பெற்றார். பின்பு பேராதனைப் பல்கலைக்கழகத்திற் சேர்ந்து படித்துக் கல்வி டிப்புளோமா, ஆசிரிய ஆலோசகர் தராதரப்பத்திரங்கள் பெற்றுக் கல்வியதிகாரியானார். கல்வியதிகாரியாகக் கடமையாற்றும் காலத்திலேயே கல்வீ நிர்வாக விசேட தராதரப் பத்திரம் பெற்றார். ஏறக்குறைய 32 வருட சேவை நிறைவு பெற்று இப்பொழுது ஒய்வூதியம் பெற்று வாழுகின்றார்.

வட்டு யாழ்ப்பாணக் கல்லூரியிற் கற்ற காலத்திலே அந்தக் கல்லூரியின் இளஞாயிறு என்னும் சஞ்சிகையின் ஆசிரியராகத் திறம்படப் பணிசெய்து புகழ்பெற்றார்.

சென்னையிற் கற்றகாலத்திலே கிறிஸ்துவக் கல்லூரி, சென்னைத் தமிழ் வளர்ச்சி மன்றங்கள் நடத்திய கட்டுரை, சிறுகதைப் போட்டிகளிற் பங்குபற்றிப் பரிசில்கள் பல பெற்றுர்.

சுதந்திரன், உதயன், வீரகேசரி, தினகரன் பத்திரிகைகளுக்குத் தொடர்கட்டுரைகள் பல எழுதிவந்தார். ஈழநாடு இதழின் ஆசிரியராகச் சில ஆண்டுகளாகப் பணியாற்றி வருகின்றுர். பத்திரிகைத் துறையிலே பிரபலம் பெற்று விளங்குவதைப் போன்று சமயப் பணிகளிலும் ஈடுபாடு கொண்டுள்ளார். சங்கானை இந்து இளைஞர் மன்றம், பாரத்தனை ஐயனுர் கோயிற் பரிபாலனசபை என்பவற்றின் செயலாளராயிருந்து செய்த சேவைகளும் பல உள.

வட்டுகோட்டைத் தொகுதித் தமிழ்ச்சங்கத்தின் உப தலைவராயும் இருந்து சேவை செய்தவர். இவர் செய்த கலைப்பணிகளும் பல. யாழ். கவின்கலைக்கழகச் செயலாளராயிருந்து, மாணுக்கர்களுக்கான பல சிறு நாடகங்களையெழுதித் தயாரித்துப் பயிற்றியும், ஆங்கில நாடகங்கள் சிலவற்றைத் தமிழிலே எழுதியும் சேவைகள் ஆற்றியவர்.

இவர் சீனு, சிங்கப்பூர், தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கு மேற்கொண்ட பண்பாட்டுச் சுற்றுலாவின் போது தமிழரின் தேசிய உடை, திருக்குறள் ஆங்கில மொழிபெயர்ப்பு நூற்பிரதிகளை அறிமுகஞ் செய்து திருக்குறள் விரிவுரைகள் பல ஆற்றியுள்ளார்.

தொழிற்சங்க ரீதியிலும் இவர் வலிகாமம் மத்திய ஆசிரியர் சங்கம், வடமாகாண ஆசிரியர் சங்கக் கல்விக் குழு என்பவற்றின் செயலாளராக இருந்து இசை நடன நாடக பேச்சுப் போட்டிகள் பலவற்றை அவ்வப்போது நடத்தி வந்துள்ளார்.

ஆதாரம்: இவரை நேரிற் பேட்டி கண்டு யாம் எழுதியவை.

# பண்டிதை விமலாதேவி

## 1942 —

சங்கானை நாகலிங்க சுவாமிகள் வீதியில் வசிக்கும் திரு. செல்லத்துரையின் மகள் இவர்.

முதலிலே சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்திலும் பின்பு பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியிலும் கற்று க. பொ. த. பரீட்சையிலே தேறினர். பின்பு யாழ். வண்ணை வைத்தீசுவர வித்தியாலயத்திலே பண்டிதர் துரைசிங்கம் முதலானோர் நடத்திய காவிய வகுப்பிலே 4 ஆண்டுகள் படித்துப் பண்டிதராகச் சித்தியடைந்தார்.

முதலிலே ஆசிரிய நியமனம் கரம்பன் சண்முகநாத வித்தியாலயத்திலே 1969 ஆம் ஆண்டிற் பெற்ற இவர், கொழும்பு கணபதி வித்தியாலயத்திலும் வேறிடங்களிலும் கற்பித்து 1988 தொடக்கம் சுழிபுரம் ஐக்கிய சங்க சைவவித்தியாலயத்திற் கற்பித்தார். 1990 இலே ஓய்வூதியம் பெறுவாராயினர்.

இவருடைய கணவர் திரு. ஸ்ரீஸ்கந்தராசா என்பவராவார்.

ஆதாரம்; இவருடைய தகப்பனர் சகோதரி என்போரிடம் யாம் கேட்டு எழுதியது.

# 4 சித்தன்கேணி

| | |
|---|---|
| அம்பலவாண நாவலர் | 1855 — 1932 |
| ஆறுமுகப் பாவலர் | 1860 — 1919 |
| பண்டிதர் சுப்பிரமணியம் | 1911 — 1978 |
| பண்டிதர் முத்துலிங்கம் | 1941 — |

# அம்பலவாண நாவலர்

## 1855 – 1932

சித்தன்கேணியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவ ரின் தந்தையார் ஆறுமுகம்பிள்ளை. தாயார் சுந்தரவல் லியம்மை.

ஆரம்பக் கல்வியைச் சங்கானை வேலாயுதர் என்ற ஆசிரியரிடம் பெற்ற பின், உயர்தர தமிழிலக்கிய இலக் கண நூல்களை மட்டுவில் உரையாசிரியர் வேற்பிள்ளை யிடம் கற்றார். இதனை அவரே,

"சேயெனக்குச் செவிலியெனச் சங்கானை மட்டுவிலில் தீராதென்றும் பாயபுகழ் தமிழெளிதிற் புகட்டினார். வடலி யடைப் பமர்பண் பாளன் ஆயகுண வேலா யுதக்குரவன் அவன்பதத்தை அன்பாற் போற்றித் தாயனைய நல்லூர்நா வலர்பெருமான் அருள்வாழ்விற் சார்ந்திட் டேனால்" என்று பாடியது கொண்டு அறியலாம். சங்கானையைச் சேர்ந்த வடலியடைப்பு வேலாயுத உபாத்தியாயரும், மட்டுவில் உரையாசிரியர் வேற்பிள்ளையும், நல்லூர் நாவலர் பெருமானும் தமதாசிரியராகக் குறிப்பிடும் பெரி யார் நாவலரைத் தமது மேலான குருவாகப் போற்றி யுள்ளார்.

சம்ஸ்கிருதக் கல்வியை நீர்வேலிச் சிவப்பிரகாச பண்டிதரிடமும், ஆங்கிலக் கல்வியைச் சுழிபுரம் விக் ரோறியாக் கல்லூரியிலும் பெற்றதாலே மும்மொழியிலும் சிறந்த புலமை வாய்க்கப் பெற்றார். மதுரைத் திருஞான சம்பந்தர் மடத்து மகாசந்நிதானத்திடம் காவியாடை பெற்றுத் துறவியானார்.

இவர் தென்தமிழகத்துச் செட்டி நாடு சென்று சமயப் பிரசங்கங்கள் பல செய்தவர். அங்குள்ளோரால் மிக்க நன்மதிப்பும் சந்மானங்களும் சகல வசதிகளும் செய்து

தவப் பெற்றவர். திருநெல்வேலி ஸ்ரீநெல்லையப்பர் காந்தி விலாச மண்டபத்தில் பல வாரங்களாகத் தொடர் சொற் பொழிவுகள் ஆற்றினர். இவரது பிரசங்க வன்மையைக் கண்டு, திருபாவடுதுறையாதீனத்து 24 ஆவது மகா சந்நிதானமாகிய அம்பலவாண தேசிக சுவாமிகள், நாவ லர் பட்டமும் பட்டும் அளித்துக் கௌரவித்தது. இவரும் அம்பலவாண நாவலர் சுவாமிகளானர்.

பின்பு தமது பிறந்தகமாகிய சித்தன்கேணிக்கு மீண்டும் வந்து, தாம் முன்னரே தொடக்கி வைத்த தமிழ்ப்பாடசாலையை ஆங்கில பாடசாலையாகத் தர முயர்த்தி, தாமும் ஆசிரியராக அமர்ந்து சிலவருடங்கள் படிப்பித்தார். இந்தப் பாடசாலை இப்போது வட்டு இந் துக்கல்லூரியெனச் சிறப்புற்று விளங்குகின்றது.

சித்தன்கேணி மகாகணபதிப்பிள்ளையார் கோயிலின் வடபாகத்தில் விளங்கும் கைலாசநாதர் கோயிலும் நித் திய கல்யாணியம்மை ஆலயமும் அம்பலவாண நாவலர் சுவாமிகளின் உபயமேயாம். சித்தன்கேணிச் சிவசிதம்ப ரேஸ்வரர் கோயிலிலும் அவர்களின் திருப்புணி உபயம் உண்டு. ஈழநாட்டிலுள்ள இந்தத் தாபனங்களேயன்றித் தமிழகத்துத் திருநெல்வேலியில் நெல்லையப்பர் கோயிலின் கீழ ரத வீதியிலுள்ள திருஞானசம்பந்த சுவாமிகள் மடா லயம், சிதம்பரத்துத் திருஞானசம்பந்த சுவாமிகள் கோயில் திருப்பணிகளும் அம்பலவாணநாவலர் சுவாமி கள் உபயங்களேயாம்.

இவரின் சமகாலத்தவர்களாகக் கோப்பாய்ச் சபாபதி நாவலர், நீர்வேலிச் சிவப்பிரகாச பண்டிதர், வித்துவ சிரோமணி பொன்னம்பலபிள்ளை, மட்டுவில் உரையாசிரி யர வேற்பிள்ளை, சுன்னுகம் குமாரசாமிப்புலவர் என் போர் குறிப்பிடத்தக்கவர்கள்.

இவர் திருநாவலூர் மான்மியம், அருணசல மான் மியம், வேணுவன லிங்கோற்பவம், திருவாதிரைத் திரு நாள் மகிமைப்பிரவாகம் முதலான உரைநடை நூல்களை

இயற்றியுள்ளார். உமாபதி சிவாசாரியார் செய்தருளிய பௌஷ்கராகம விருத்தியுரையைச் சிறந்த முகவுரையெழுதிப் பதிப்பித்துள்ளார். தமது குருநாதராகிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் பேரில் நாவலர் சற்குரு மணிமாலை என்னும் கவிதை நூலையும் ஆக்கியுள்ளார். நாவலர் பெருமான் சிவபதம் அடைந்த ஞான்று, அவருடலைத் தகனம் செய்த இடத்திற்கு அவரின் பாதுகைகளைத் தமது கரங்களில் ஏந்தியவண்ணம் அங்கப் பிரதட்சணம் செய்து தமது குருபக்தியையும் நன்றியறிதலையும் புலப்படுத்தினர்.

இவர் இயற்றிய பெரியபுராண பாடியம், சித்தாந்தப் பிரபோதம், தஷாதர்சம், சைவசந்நியாசபத்ததி, ஆரிய திராவிடப் பிரகாசிகை ஆகிய நூல்கள் இன்னும் அச்சேறுமல் உள்ளன.

ஆதாரம்; 1. தமிழ்ப்புலவர் சரித்திரம் — அ. குமாரசுவாமிப்புலவர்
2. ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரித்திரம் — சி. கணேசையர்
3. ஈழநாட்டுத் தமிழ்க்கவிதைக்களஞ்சியம்— ஆ. சதாசிவம்
4. நாவலர் சற்குருமணிமாலை

---

காக்கைச் சிறகினிலே நந்தலாலா — நின்றன
கரியநிறந் தோன்றுதையே நந்தலாலா.
பார்க்கும் மரங்களெல்லாம் நந்தலாலா — நின்றன்
பச்சைநிறந் தோன்றுதையே நந்தலாலா
கேட்கு மொலியிலெல்லாம் நந்தலாலா — நின்றன்
கீத மிசைக்குதடா நந்தலா
தீக்குள் விரலைவைத்தால் நந்தலாலா — நின்னைத்
தீண்டுமின்பந் தோன்றுதடா நந்தலாலா.

— பாரதியார்

# ஆறுமுகப் பாவலர்
## 1860 — 1918

சித்தன்கேணியில் உதித்த வள்ளல் என்று போற்றப்படும் மட்டக்களப்பு கா. வயித்தியலிங்கம்பிள்ளையின் காலத்தவர் இவர். தமிழ் நூற்பயிற்சியும் கவிதைபாடும் ஆற்றலும் வாய்ந்தவர். இவரைப் பற்றிய விவரமான வரலாறு எவ்விதத்திலும் அறியமுடியாவிடினும், இவர் பாடியதாக உள்ள சித்தன்கேணி மகாகணபதிப்பிள்ளையார் ஊஞ்சலினைக் கொண்டு அறிந்தவாறு எழுதுகின்றோம்.

அந்த ஊஞ்சல் நூலை அச்சிட்டுப் பயன்படுத்துமாறு அவர் கா. வயித்தியலிங்கம்பிள்ளைக்கு எழுதிய சீட்டுக் கவிதை வருமாறு:-

சீர்கொண்ட யாழ்ப்பாண வட்டுநன் னகரதிபர்
செய்யமண் டலநாயகத்
திருமுதலி யார்மரபின் உதயஞ்செய் முருகேசர்
சிற்றுதரம் உற்றசிறுவன்
செறிதரும் இலக்கிய இலக்கணக் கடலுண்டு
செவ்விதேக் கெறியுமேகம்
செந்தமிழ்க் கலைஞர்புகழ் ஆறுமுகப் பாவலன்
தீட்டிவிடு கின்றஓலை
வார்கொண்ட இந்திரன் காசிநா தக்குரிசில்
வால்வளை பயந்ததரளம்
வண்கொடைக் கிரவிசேய் வாய்மைக் கரிச்சந்த்ர
மன்னனென உன்னுபெரியோய்
வருபுனித வர்த்தகம் பொறையறிவு கைவரும்
மனோகர விநோதநிருபா
வனைகவிக் கவிஞருளம் நெகிழவே பொன்மழை
வழங்குநன் மாரிமுகிலே

தார்கொண்ட பெரியவள வானந்த மும்மதத்
தனிநதி யுவட்டெத்டுக்கும்
தந்திமுக ஞலயத் திருப்பணி உஞற்றிய
தயாளகுண தன்மமகிப
தருகாசி யாதிமுதல் இலங்கையாழ்ப் பாணம்வரை
தாக்கிநனி தேக்குபுகழோய்
தங்குபொன் மேருநிலை சாயினும் தன்மநிலை
சாயாத தானநிலையோய்
பார்கொண்ட சுந்தர வயித்திலிங் கேந்தலே
பயனுறும் உதாரநிபுண
பாசவினை நீறுபட நூறுகரி மாமுகப்
பரமவிஞ் ஞானமோனப்
பாதமறை வேதமுதல் ஐங்கரக் கடவுள்மேற்
பகர்சுவைப் பொருள்தெவிட்டும்
பன்னுதமி ழூஞ்சலிசை பாடினன் சீர்செய்து
பார்த்துநனி கொண்டிடுகவே.

குறித்த ஊஞ்சலிலிருந்து ஒரு கவிதை

முத்திநெறி யறியாத முகுண்டர் பேணும்
மோகமுறும் இதரமதக் குழிவீ ழாது
சித்திதரும் சிவஞான சைவ மாகும்
சீரியநன் னெறியொழுகச் சிந்தை செய்வாய்
கத்தவளி யிருகவுளின் மதங்க விழ்க்கும்
கருதுமறைக் குடிலேவந்த கருணை வாழ்வே
நத்துமலர்ப் பெரியவளப் பதியில் வைகும்
நாதமகா கணபதியே ஆடீர் ஊஞ்சல்.

இவர் வட்டுக்கிழக்கில் உதித்தவர். தந்தையார் பெயர் முருகேசர். அவர் மண்டலநாயக முதலி வம்சத்தவர் என அறியலாம். தம்மை ஆறுமுகப் பாவலன் என்று இவர் சீட்டுக் கவிதையில் கூறுதலும் காண்க.

ஆதாரம்:- ஷெ பிள்ளையார் திருவூஞ்சல்

# பண்டிதர் சுப்பிரமணியம்

## 1912 — 1979

தென்மராட்சிக் கச்சாய்ப் பகுதியைச் சேர்ந்த சன் என்னும் ஊரிற் பிறந்த இவரின் தந்தையார் தம்பியையா. இவர் தாம் பிறந்த கிராமத்துப் பாடசாலையிற் கற்ற பின்பு தெல்லிப்பழை யூனியன் கல்லூரிச் சாதனு பாட சாலையிற் கற்றுப் "பிறிலிம்" வகுப்புச் சித்தியெய்தினர். பின்பு திருநெல்வேலி சைவாசிரியர் பயிற்சிக் கல்லூரி யில் 1934 — 1936 ஆம் ஆண்டுகளிற் படித்துப் பயிற்றப் பட்ட ஆசிரியரானர்.

இலங்கையின் பல பாகங்களிலுமுள்ள தமிழ்ப்பாட சாலைகளிற் கற்பித்தவர். கற்பித்துக்கொண்டே படித்துப் பண்டிதபரீட்சையிலும் சித்தியடைந்தவர். சித்தன்கேணி யில் திருமணம் செய்து இல்லிடமமைத்து நன்கு வாழ்ந் தவர். இவரிடம் சொல்வன்மை, எழுத்தாற்றல், கவித்து வம் என்பன நன்கு விளங்கின.

இவர் அம்பலவாண நாவலர் சுவாமிகளின் சரித்தி ரம் எழுதியதோடு, அவர் பாடிய சற்குருமணிமாலையும் 1968 இலே பதிப்பித்தவர். பாணந்துறைக் கந்தர் அந்தாதி (1956) சைவசமய புண்ணியகாலம் (1960) சித்தன்கேணி மகாகணபதிப்பிள்ளையார் கும்பாபிஷேகவிளக்கம் (1958) நாகதம்பிரான் மான்மியம் (1963) சீரணி நாகம்மாள் கோயில் (1963) சைவசமய சித்தாந்த வினவிடை (1971) என்னும் நூல்களை எழுதி அச்சேற்றி வெளியிட்டார்.

பின்வருவன இவரியற்றிய கந்தரந்தாதியில் வரும் பாடல்கள்:

ஐயா உனைக்காண ஆசைகொண்டு நாடோறும்
கைதொழுது மோனம் கடைப்பிடித்தேன் — தெய்வமே
தாயுநீ தந்தைநீ யாவுநீ தற்பரனே
பேயேனைப் பார்கண் பரிந்து.

பரிந்த இளமையொடு பார்செல்வம் ஆக்கை
தெரிந்து புல்நீரெனவே தேர்ந்து — நெரிந்தசிந்தை
கொண்டு கிடந்து குழறி நிலைகலங்கக்
கண்டும் அருளிலையே காண்.

ஆதாரம்: 1. நாவலர் சற்குருமணிமாலைப் பதிப்புரை
2. பாணந்துறைக் கந்தரந்தாதி

---

இன்னுமொரு முறை சொல்வேன் பேதை நெஞ்சே
எதற்குமினி உளைவதிலே பயனொன்றில்லை
முன்னர்நம திச்சையினாற் பிறந்தோமில்லை
முதலிறுதி இடை நமது வசத்திலில்லை
மன்னுமொரு தெய்வத்தின் சக்தியாலே
வையகத்திற் பொருளெல்லாம் சலித்தல் கண்டாய்
பின்னையொரு கவலையுமிங் கில்லை நாளும்
பிரியாதே விடுதலையைப் பிடித்துக் கொள்வாய்

— பாரதியார்

மோகத்தைக் கொன்று விடு — அல்லலென்றன்
மூச்சை நிறுத்திவிடு
தேகத்தைச் சாய்த்துவிடு — அல்லால் அதில்
சிந்தனை மாய்த்து விடு
யோகத் திருத்திவிடு — அல்லாலென்றன்
ஊனைச் சிதைத்து விடு
ஏகத் திருந்துலகம் — இங்குள்ளன
யாவையும் செய்பவனே.

— பரதியார்

# பண்டிதர் முத்துலிங்கம்

## 1941 —

தெல்லிப்பழையை யடுத்த கட்டுவன் ஊரிலே வசித்த வேலுப்பிள்ளை தெய்வானைப் பெற்றேருக்கு மைந்தராக 05 - 05 - 1941 இலே பிறந்தவர் முத்துலிங்கம்.

இவர் முதலிலே கட்டுவன் ஞானேதய வித்தியாசாலையிலும், பின்பு தெல்லிப்பழைச் சைவவித்தியாசாலையிலும் கற்றுச், சி. பா. த. பரீட்சையிலே சித்தியடைந்தார். மல்லாகத்திலே பண்டிதர் துரைசிங்கம், பண்டிதர் கந்தையா முதலானேர் நடத்திய காவிய வகுப்பிலே 4 ஆண்டுகள் படித்துப் பாலபண்டிதராயும் பின் பண்டிதராயும் சித்தியடைந்தார்.

1966 இலே பண்டிதர் தேர்விலும் 1967 இலே சைவப் புலவர் தேர்விலும் சித்தியடைந்த முத்துலிங்கம் அவர்கள் இரத்தினபுரி மாவட்டத்தைச் சேர்ந்த காவத்தைத் தோட்டப் பாடசாலையிலும், பின் அவ்விடத்து அரசினர் பாடசாலையிலும் 1969 — 1977 வரை கல்வி கற்பித்தார். பின்பும் அந்த மாவட்டத்து எரபத்தை தோட்டப் பாடசாலையிலும், இரத்தினபுரித் தமிழ்மகா வித்தியாலயத்திலும் சேவை செய்த பண்டிதர் முத்துலிங்கம், சென்ற சில வருடங்களாகச் சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றி வருகின்றூர்.

அராலியிலே திருமணம் புரிந்து, சித்தன்கேணியிலே இல்லிடமுங் கொண்டு வாழும் பண்டிதர் முத்துலிங்கம் தமது பண்டிதர் விருதுக்குச் சமர்ப்பிப்பதற்காக "பண்டைத் தமிழகமும் யாழ்ப்பாணமும்" என்ற ஆராய்ச்சிக் கட்டுரையெழுதிக் கொடுத்துள்ளார்.

ஆதாரம்: இவரைக் கண்டு கேட்டு யாம் எழுதியது.

# 5 சுழிபுரம்

| | |
|---|---|
| அருணாசலப் புலவர் | 1820 — 1890 |
| ஆறுமுகப் பாவலர் | 1823 — 1896 |
| பண்டிதர் இரத்தினம் | 1910 — |
| வித்துவான் கணபதிப்பிள்ளை | 1927 — |
| வித்துவான் நவரத்தினம் | 1923 — 1984 |
| புலவர் சுந்தரம்பிள்ளை | 1936 — |
| பண்டிதை பொன். பாக்கியம் | 1937 — |
| முதுகலைமாணி நாச்சியார் | 1941 — |

# அருணசலப் புலவர்

## 1820 — 1890

காரைநகரிலே களபூமி என்னும் குறிச்சியிலே இற்றைக்கு 188 வருடங்களுக்கு முன் வாழ்ந்த தில்லைநாதர் என்பவர் சுழிபுரத்துக்கு வந்து திருமணம் புரிந்து பரமநாதர் என்னும் மகனைப் பெற்றார். பரமநாதனின் குமாரனாக வந்தவரே அருணாசலம்.

அக்காலத்திலே சுழிபுரத்தில் கல்வியறிவொழுக்கங்களிற் சிறந்து விளங்கிய சபாபதிக்குருக்கள், குமாரசாமிக்குருக்கள் என்போரிடம் தமிழிலக்கண இலக்கியங்களைக் கற்றுப் புலமை வீறுடன் விளங்கிய அருணாசலத்தின் அறிவுத் திறமைகளை அறிந்த பெரியவர்கள், அவருக்குப் புலவர் என விருது சூட்டினர்.

அருணாசலப் புலவர் தமது சூழலிலே வாழ்ந்த சிறுவர் சிறுமியரைக் கற்பித்து விற்பத்திமான்களாக விளங்கச் செய்தார். பண்ணாகம் சுழிபுரம் என்ற இரண்டு கிராமங்களிலும் உள்ளவர்கள் இணைந்து படிக்கும் விதத்தில் அமெரிக்கன்மிஷன் பாடசாலையைக் கட்டுவித்து, அரசினர் நன்கொடை பெற்றுத் தாமும் பண்ணாகம் விநாசித்தம்பிச் சட்டம்பியாரும் சேர்ந்து கற்பித்தனர். அந்தப் பாடசாலை பின்பு சுழிபுரம் கிழக்கிலே இடம்பெயர்ந்து நடைபெறுகின்றது.

அருணாசலப் புலவர் வடகோவைச் சபாபதி நாவலராலே ''ஒவிலாப்புகழுடைப் பாவலன் அருணாசலம்'' எனப் பாராட்டப்பெற்றவர்.

"பாவலன் அருணா சலமெனப் பரவிய
வள்ளல் பருளை வாழ்கண பதிமேல்
தெள்ளிய ஊஞ்சல் சிறக்கப் பாடிமுன்
பிள்ளைத் தமிழொடு பீடு கெடுக்கும்
கள்ளுப் பாட்டும் பள்ளும் பாடி
அந்நகர் மேவும் அறுமுகன் மேலே
இன்னிய லூஞ்சல் ஏசல் பராக்கு
எச்சரிக் கையொடு லாலி மங்களம்
முச்சகம் புகழ முடித்துச் சூட்டி"

என்று இங்ஙனம் புலவரின் வரலாற்றிலே கூறப்பட்ட படி அவரியற்றிய நூல்களிலே ஏசல் தவிர்ந்தவை இன்று அறியக்கூடியனவாயில்லை.

அருணாசலப் புலவரின் தம்பியார் தில்லையம்பலம். தில்லையம்பலத்தின் மகன் சபாபதி. சபாபதியின் மூத்த மகன் வைத்தியலிங்கம் என்பவரே பருளையேசலை அச்சிட்டு நிலைபெறச் செய்தவராவர். புலவர் பாடிய கள்ளுப் பாட்டு ஒன்று பின்வருமாறு:-

"கள்ளரக் கபின்னவன் பிறண்டிசா ராயமொடு
கஞ்சா எனப்பகர்ந்த
கடிதான மதுவுண்டு குடிகார ராகிக்
களிக்கும்சி நேகிதர்களே
பள்ளுநள மோடெளிய பறையர்கள் குடிக்கும்
பரம்பரைய தானமதுவைப்
தள்ளுநுரை யூதியொரு வன்வார்க்க மற்றவன்
எறும்பொடீ தூனக்கடித்து
பலசாதி யாரெலாம் வரிசையாய்க் கூடியொரு
பச்சையோ லைப்பிழாவில்
தக்கசுவை யென்றவன் உட்கொள்ள மற்றவன்
தன்கைப்பி ழாவை வாங்கி

உள்ளங் களித்தெச்சில் என்றுபா ராமலுண்
டொருவரோ டொருவர்வைதே
உன்னையறி வேனென்று ரைத்துப் பிதற்றியே
உருளுவார் புரளுவாரே.

குறித்த அருணசலப் புலவர் திருமணம் புரிந்து இரு பெண்களையும் ஆண் ஒருவரையும் பெற்ருரென்றும், தமது கடைசிக் காலத்தில் வாழ்வாவது மாயம் எனத் தெளிவு பெற்றுக் காவியும் கண்டிகையும் அணிந்து காசியாத்திரை மேற்கொண்டு சென்ருரென்றும் சொல்லப்படுகின்றது.

ஆதாரம்:- பருளையேசலில் வரும் இவரின் வரலாறு.
இவரின் உறவினரிடம் யாம் கேட்டவை.

---

அன்னநடை பிடியின்நடை யழகுநடை
யல்லவென அகற்றி அந்நாட்
பன்னுமுது புலவரிடஞ் செய்யுள்நடை
பயின்றதமிழ்ப் பாவை யாட்கு
வன்னநடை வழங்குநடை வசனநடை
எனப்பயிற்றி வைத்த ஆசான்
மன்னுமருள் நாவலன்றன் அழியாநல்
ஒழுக்கநடை வாழி வாழி

— சோமசுந்தரப்புலவர்

ஓங்க விடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருள்கடியும் — ஆங்கவற்றுள்
மின்னேர் தனியழி வெங்கதிரொன் றேனையது
தன்னே ரிலாத தமிழ்

— சுவாமி விபுலாநந்தர்

# ஆறுமுகப் பாவலர்

## 1823 — 1896

சுழிபுரத்தில் வாழ்ந்த கதிரித்தம்பிச் சட்டம்பியாரின் மகனுகப் பிறந்தவர் ஆறுமுகம். இவர் நான்கு வயதுக் குழந்தையாக இருந்தபோதே தமது தந்தையாரை இழந்தார். தமது சுயமுயற்சியாலும் திருவருள் கூட்டியதாலும் இயற்றமிழ் நூல்களைத் தாமே கற்று வல்லவரானுர். இவரின் புலமைத்திறத்தைப் பாராட்டி அவ்வூர் மக்கள் பாவலர் எனப்பட்டஞ் சூட்டினர்.

ஆறுமுகப் பாவலர் தமது வீட்டுத் திண்ணையிலே இருந்து பலருக்கும் பாடம்சொல்லிக் கொடுத்தார். ஆறுமுகப் பாவலரின் மகன் கதிரித்தம்பி. கதிரித்தம்பியின் மக்கள் நொத்தாரிசு சுப்பிரமணியம், ஆறுமுகம், குலவீரசிங்கம், நாராயணபிள்ளை என்போர். பாவலர் காலமானதும் அவருடைய நினைவாகப் பாடசாலையொன்று அமைக்க வேண்டுமென்று அவரின் பேரர்களாகிய நொத்தாரிசு சுப்பிரமணியம், ஆறுமுகம் என்போர் சிரத்தையெடுத்தனர். சுழிபுரம் வடக்குக் கண்ணகையம்மன் கோயிற் கிழக்கு எல்லை நிலத்திலே வாழ்ந்த இராமலிங்கம் கார்த்திகேயர் பாடசாலை கட்டத் தாம் நிலமுதவ விரும்பினுர். அந்த நிலத்திலே பாவலரின் பேரர்கள் ஆறுமுக வித்தியாசாலையென்னும் பெயரிலே பாடசாலையைக் கட்டித் தலைமையாசிரியராகக் காரைநகரைச் சேர்ந்த கார்த்திகேசு என்பவரையும், உதவியாசிரியராகப் பாடசாலை கட்ட நிலங் கொடுத்த இ. கார்த்திகேயரையும் (தம்பையா என இவரை ஊர்மக்கள் அழைப்பர்) நியமித்து அவர்களுக்கு அந்த நாளிலே முறையே 5 ரூபாவும் 3 ரூபாவும் சம்பளமாகக் கொடுத்தனர் என்பர்.

ஆறுமுகப் பாவலர் நளச்சக்கரவர்த்தி நாடகம், இராமநாடகம், பருளை சிவசுப்பிரமணிய சுவாமி ஊஞ்சல், கீர்த்தனங்கள் இயற்றியுள்ளார். இவர் இயற்ற

மிழிலன்றி இசைத்தமிழ் நாடகத் தமிழிலும் வல்லவர். இராமநாடகத்தில் இவரும் ஒரு நடிகராகப் பங்கேற்று நடித்தாரென்று சொல்லப்படுகின்றது.

பாவலரின் ஐம்பதாம் வயசில் கண்வருத்தம் உண்டாகி வருத்திய வேளையில் அவர் பருளைச் சிவசுப்பிரமணியசுவாமி கீர்த்தனம்பாடி, அந்த ஆண்டுத் தேர்த் திருவிழா நாளில் அரங்கேற்றினுரென்றும், அவரைப் பீடித்த கண்வருத்தம் தீர்ந்ததென்றும் செவிவழிச் செய்தி வழங்கி வருகின்றது.

பாவலரின் ஆக்கங்களான நூல்கள், அவர் மகன் கதிரித்தம்பியால் முதற்பதிப்பும், கதிரித்தம்பியின் மக்களாகிய சுப்பிரமணியம், ஆறுமுகம் என்போரால் இரண்டாம் பதிப்பும், பாவலரின் பேரன் குலவீரசிங்கத்தின் மகள் பார்வதியம்மாளைத் திருமணம் செய்த புலவர் நா. சிவபாதசுந்தரனுரால் மூன்றும் பதிப்பும் (1964) பதிப்பிக்கப்பட்டன.

தங்கநவ ரத்னமுடி சிரசில் மின்னத்
    தயங்கியகுண் டலங்கள்செவி சார்ந்து துன்ன
துங்கமிகு செங்கதிரோன் அனந்த கோடி
    துலங்கியெழுந் தனமேனி சொலித்தி லங்கப்
பொங்கியொளி தங்கியபொற் பதக்க மென்னப்
    புண்டரிக நேர்கழலில் தண்டை யார்ப்பப்
பங்கிலிரு மகளிரொடும் ஆடீ ரூஞ்சல்
    பருளையுறை கந்தரே ஆடீ ரூஞ்சல்

இஃது பாவலரின் பருளை ஊஞ்சலில் உள்ளது.

ஆதாரம்:- **பாவலரின் நூல்களும் செவிவழிச் செய்திகளும்**

# பண்டிதர் இரத்தினம்

**1910 —**

வேலணையூரில் கார்த்திகேயர் பொன்னம்பலத்தின் மகனாகத் தோன்றிய இவரின் தாய்வழிப் பேரனார் பேரம்பலப் புலவர். பேரனாரிடமும் வேலணை சைவப் பிரகாச வித்தியாசாலையிலும் தமிழிலக்கிய இலக்கணக் கல்வியைப் பெற்று ஆசிரிய பயிற்சியும் பெற்ற இவர் மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை அதிபராக 1934 — 1938 வரை கடமையாற்றினார்.

சுழிபுரத்தில் திருமணம் புரிந்து வாழ்ந்த இவர் கொழும்பு ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் 12 ஆண்டுகள் தமிழ்ப்பேராசிரியராகவும், இலங்கை அரச கரும மொழித்திணைக்களத்தில் 6 ஆண்டுகள் தமிழாராய்ச்சித்துறைத் தலைவராகவும், பின்பு மலேசிய நாட்டுப் பல்கலைக்கழக இந்தியத்துறை விரிவுரையாளராகவும் பணிகள் ஆற்றியவர்.

சென்னைப் பல்கலைக்கழக எம். ஏ. பீ. ஓ. எல் பட்டம், லண்டன் பீ. ஏ. பட்டங்களுடன் உலகப்பல்கலைக் கழகக் கலாநிதிப்பட்டமும் பெற்றவர். தமிழ் நாட்டுப் புலவர் குழு ''தமிழ்ச் சான்றோன்'' என்ற விருது வழங்கிச் சிறப்பித்தது.

1965 ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கைத் தேசிய அரசுப் பேரவையுறுப்பினராகத் தொடர்ந்து 18 ஆண்டுகள் இருந்து தமிழ்மொழி, தமிழினம், தமிழீழம் உரிமை பெறப் போராடியவர்.

1952 ஆம் ஆண்டிலே உலகப் பொதுமறையாகிய திருக்குறளே தமிழ் மக்களின் மறை — வேதம் என்பதை நிலைநாட்டத் தமிழ்மறைக் கழகம் நிறுவி, அதன் ஆயுட்காலத் தலைவராகச் சேவையாற்றி வருகின்றார். உலகத் தமிழ் மன்றத்தைக் கோலாலம்பூரில் தாபித்துத் தலைவராயிருந்து பணிசெய்தவர்.

பலநாடுகளுக்கும் சென்று தமிழிலும் ஆங்கிலத்திலும் உரையாற்றிப் பல நாடுகளின் ஏடுகளிலும் சிறப்புமலர்களிலும் கவிதைகள் கட்டுரைகள் இடம் பெறச் செய்தவர். உரைநடை நூல்கள் பதினைந்தும், கவிதை நூல்கள் மூன்றும் எழுதியவர். ஆறு நூல்களைத் தொகுத்து உதவியவர். அவர்கள் இன்று தமிழ் நாட்டில் சென்னை நகரில் வாழ்ந்து வருகின்றார்.

ஆதாரம் : i. யாம் அவரிடம் படித்தும் கேட்டும் அறிந்தவை
ii. இமயத்து உச்சியில் — காந்தளகம் பதிப்பு.

---

## அருளியல்

நீரில் தண்மை போலவும், நெருப்பில் வெம்மை போலவும், மலரில் மணம் போலவும் ஆண்டவனிடத்தில் அருட்குணம் இயல்பாய் அமைந்திருக்கிறது. அவ்வருள் வாளா கிடக்குமோ? ஒவ்வொன்றும் தன் தன் வேலையை நிகழ்த்துவதுபோல், அருளும் தன்வேலையை நிகழ்த்தி வருகிறது. ஒருவருக்கு அருள் — தயை — இரக்கம் பெரிதும் எப்பொழுது சுரக்கிறது? பிறர்துன்பம் காணும் பொழுதன்றோ? உயிர்களின் துன்பத்தைக் காணக் காண இறையருள் சுரந்தவண்ணம் இருக்கிறது. உயிர்களின் துன்பத்துக்கும் ஒய்வில்லை ஆண்டவன் அருள் சுரப்புக்கும் ஒய்வில்லை. உயிர்களிடத்துத் துன்பமுள்ளமட்டும் ஆண்டவன் அருளும் சுரந்து கொண்டேயிருக்கும். இரண்டின் எல்லைகண்டு கூறல் எவரால் இயலும்? ஆகவே இரண்டும் அநாதியென அறிஞர்கூறுவர்.

— திரு. வி. க.

# வித்துவான் கணபதிப்பிள்ளை

**1927 —**

இவர் சுழிபுரத்தில் வாழ்ந்த கதிரித்தம்பி இராம லிங்கத்தின் மகன் கந்தசுவாமியின் குமாரர்.

ஆரம்பக் கல்வியைச் சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலையிற் பெற்றார், 1938 — 1941 க்கு இடைப் பட்ட காலத்தில் யாழ்ப்பாணம் சன்மார்க்க மகாவித்தி யாலயத்திலும், பின் திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலயத்திலும் கல்வியைத் தொடர்ந்தார்.

1945 — 1947 இல் திருநெல்வேலிச் சைவாசிரியர் பயிற்சிக் கலாசாலையில் ஆசிரியப் பயிற்சி பெற்றார். பேராதனைப் பல்கலைக் கழகத்தில் 1957 — 1959 ஆண்டு களிற் படித்து வித்துவான் விருதும் பெற்றார். 1960 — 1963 இல் தாமே சுயமுயற்சி கொண்டு படித்து (B. A.) கலைமாணித்தேர்வில் வெற்றி பெற்றார். மதுரை ஆதீ னம் சித்தாந்த கலாநிதிப்பட்டமும், நல்லையாதீனம் மகாவித்துவான், சித்தாந்த சரபம் என்னும் விருதும் 1972, 1973 இலே வழங்கின 1961 இலே சைவப் புலவர் பரீட்சையிற் சித்திபெற்ற இவர், நல்லையாதீனத்தில் சித்தாந்த வகுப்புக்கள், சமயகுரவர் சந்தானகுரவர் விழாக்கள் நடத்தப் பலவகையிலும் முன்னேடியாய்த் திகழ்பவர். குடும்ப வாழ்க்கையில் மனைவி மக்களோடு வாழ்ந்த இவர், ஆசிரிய சேவையிலிருந்து 19-12-1987 இல் ஓய்வு பெற்று 12-01-1990 முதல் துறவு மார்க்கத்தைக் கடைபிடித்தார். 19-12-1991 முதல் மெய்கண்டார் ஆதீன முதல்வராக நியமனம்

பெற்று 07-07-1993 முதல் சீலத்திரு சித்தாந்த சரபசிவம் என்னும் நிலையை அடைந்தார். நல்லை ஞான சம்பந்தர் ஆதீனமும் மெய்கண்ட தேவர் ஆதீனமும் 27-04-1994இல் சீருடை வழங்கின. 07-07-1994 முதல் இவர் சீலத்திரு சித்தாந்த சரபசிவ ஞானப் பிரகாசர் எனப்போற்றப்படுகின்றார்.

இவர்களின் அருளாட்சி முற்பகலில் கஸ்தூரியார் வீதி, வண்ணை யழ்ப்பாணத்திலும், பிற்பகலில் மெய் கண்டதேவர் ஆதீனம், 5 கலைப்புலவர்வீதி, திருவாசக மன்றம், சிறும்பியடி யாழ்ப்பாணத்திலும் இடம் பெறும்.

பருளை விநாயகர் ஊஞ்சல், கம்பனை அம்மன் ஊஞ்சல், கைதடி முத்துக் குமாரசுவாமி ஊஞ்சல், சுருவில் ஐயனர் ஊஞ்சல் எனப்பல திருத்தலஊஞ்சல் நூல்கள் பாடியுள்ளார். இவருடைய பருளை விநாயகர் ஊஞ்சலிலிருந்து ஒரு பாடல் தருகின்றோம்.

1. மந்திரஞ்சேர் மாகங்கை நீரா லாட்டி,
மணியொளிசேர் பளிதநறுஞ் சாந்த மாட்டி
சுந்தரஞ்சேர் பட்டுடுத்துப் பொட்டும் இட்டு,
தூயகலன் பலபூட்டித் தூபம் காட்டிக்
கந்தமலர் நறுந்தொடையல் மாலை சூட்டிக்,
காந்தியொளிர் கர்ப்பூர ஒளியுங் காட்டிப்
பந்தமெலாம் விட்டகல அருளைக் கூட்டும்,
பருளையுறை விநாயகரே ஆடீர் ஊஞ்சல்.

ஆதாரம்: இவரிடம் யாம் நேரிற் கேட்டு எழுதியவை.

# வித்துவான் நவரத்தினம்

## 1923 — 1984

இவர் சுழிபுரம் மூத்ததம்பிக்கும் சின்னத்தங்கம் அம்மையாருக்கும் மூன்ருவது குமாரராக உதித்தவர். ஆரம்பக் கல்வியைச் சுழிபுரம் ஆறுமுக வித்தியாலயம், பண்ணுகம் மெய்கண்டான் மகாவித்தியாலம் என்பவற்றிற் கற்று, ஆங்கிலக்கல்வியைப் பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி, சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி என்பவற்றிற் பெற்ருர்.

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியிலே 1943 — 1945 ஆம் ஆண்டுகளிலே பயிற்சி பெற்றபின் புசலாவை புனித ரிறினிற்றிக் கல்லூரியில் 1945 இலே ஆசிரிய நியமனம் பெற்ருர். கொழும்பு இந்துக்கல்லூரிக்கு 1954 இலே மாற்றம் பெற்றதனுல் 1958 இலே சென்னைப் பல்கலைக்கழக வித்துவான் பரீட்சையிற் சித்தியடைந்ததோடு 1961 இலே பல்கலைக்கழக தமிழ்டிப்புளோமா பரீட்சையிலும் சித்திபெற்ருர். 1970 இலே கொழும்புப் பல்கலைக்கழகக் கலைமாணிப் (B. A.) பட்டமும் பெற்ருர்.

1963 ஆம் ஆண்டுசுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரியிற்கற்பித்தவித்துவான் அவர்கள் பதவியுயர்வுபெற்று 1973 இலே சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலய அதிபர் சேவையைப் பெற்ருர். 1977 இலே பண்ணுகம் மெய்கண்டான் மகாவித்தியாலய அதிபராய்ப் பொறுப்பேற்றுப் பின்பு 1979 இலே மூளாய் சைவப்பிரகாச வித்தியாலய அதிபராகி, அங்கிருந்தே தமது 60 ஆம் ஆண்டு நிறைவில் 1983 இலே ஓய்வூதியம்பெறலாயினர்.

அவர்கள் 1984 இல் இயற்கை எய்தினர்.

ஆதாரம்: இவரின் மக்களிடம் கேட்டு யாம் எழுதியவை.

# புலவர் சுந்தரம்பிள்ளை

## 1936 —

சுழிபுரம் காளிகோவிலடியில் வாழ்ந்த சுப்பையா தம்பதிகளின் மகனுன இவர் சுழிபுரம் ஆறுமுக வித்தியாசாலை, விக்ரோறியாக் கல்லூரி என்பவற்றிற்படித்து சி. பா. த. பரீட்சையிற் சித்தியெய்தினர். பின்பு சிதம்பரம் அண்ணுமலைப் பல்கலைக்கழகத்திற் சேர்ந்து 5 ஆண்டுகள் படித்து, புலவர், B. O. L. விருதுகள் பெற்றுர்.

1964 ஆம் ஆண்டு தொடக்கம் யாழ். கொக்குவில் தொழில்நுட்பக்கல்லூரி விரிவுரையாளராகக் கடமை புரிந்து வருகின்ருர். இவரே அந்தக் கல்லூரியின் கீதத்தை ஆக்கியவர். அந்தக் கல்லூரிமாணவர் வெளியிடும் பத்திரிகையின் ஆலோசனைக் குழுவின் முதன்மையுறுப்பினராய் இருக்கின்ருர்.

வட்டுக்கோட்டைத் தமிழ்ச்சங்க நிர்வாகிகளில் ஒருவரான இவர், சங்கம் நடத்திய பாலபண்டித வகுப்புக்களுக்குச் சமயம், வரலாறு முதலாயதுறைகளில் கல்வி கற்பித்தவர். சமயசமூக சேவைகளும் செய்துவருபவர்.

ஆதாரம்: இவரிடம் கேட்டு யாம் எழுதியவை.

---

பேய்போல் திரிந்து பிணம்போற் கிடந்திட்ட பிச்சையெல்லாம்
நாய்போல் அருந்தி நரிபோ லுழன்றுநன் மங்கையரைத்
தாய்போற் கருதித் தமர்போல் அனைவர்க்கும் தாழ்ச்சிசொல்லிச்
சேய்போ லிருப்பர்கண் டீருண்மை ஞானம் தெளிந்தவரே.

— பட்டினத்தடிகள்

# பண்டிதை பொன். பாக்கியம்

## 1937 –

சுழிபுரம் கிழக்கிற் பிறந்த இவரின் தந்தையார் நாகமுத்து. தாயார் முத்துப்பிள்ளை. இவரது கணவர் திரு. பொன்னுத்துரை.

இவர் தமது கல்வியை முதலில் சுழிபுரம் கிழக்கு அமெரிக்கன் மிசன் பாடசாலையிலும், பின்பு பண்ணு கம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்திலும், அதன் பின் பண்டத்தரிப்பு மகளிர்கல்லூரியிலும் பெற்ருர். 1954—1957 இலே திருநெல்வேலி சைவாசிரியர்பயிற் சிக் கல்லூரியில் ஆசிரியர் பயிற்சி பெற்ருர். பயிற்சிக் காலத்தில் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, சிந் தனைச் செல்வர் பொ. கைலாசபதி என்போரின் பாராட்டுதலுக்குரிய மாணவராயிருந்தார்.

1958 இலே வவுனியா சைவப்பிரகாச வித்தியா சாலையில் ஆசிரிய நியமனம் முதலிற் பெற்றுப்பின்பு முரசுமோட்டை முருகானந்த வித்தியாலயம், திரு நெல்வேலி முத்துதம்பி வித்தியாசாலை, தொல்புரம் விக்கினேஸ்வர வித்தியாசாலை ஆகியவற்றிற் கடமை யாற்றி, இப்பொழுது சுழிபுரம் விக்ரோறியாக் கல் லூரித் தமிழ்த்துறைத் தலைவராகப் பணி செய்கின்ருர்.

முதலில் பண்ணுகம் பண்டிதர் ஆறுமுகம் அவர் களிடம் தமிழிலக்கண இலக்கியங்களை நன்குகற்று யா. ஆ. தி. பா. சங்கப் பிரவேச பண்டித பரீட்சையில் சித்தியடைந்து, பின் பயிற்சிக் கல்லூரியிலும் பண்டித மணியின் அன்புக்குப் பாத்திரமான மாணவியாகத்

திகழ்ந்து தமது தமிழறிவை வளர்த்துக் கொண்டார். 1965 இலேபண்டிதர் பரீட்சையிற் தேறியஇவர் சிறந்த பேச்சாளரும் எழுத்தாளரும் கவிஞருமாவர்.

யாழ்ப்பாணத்தில்மட்டுமன்றிச் சிங்கப்பூர் மலேசிய நாடுகளுக்கும் சென்று சொற்பொழிவுகள் பல ஆற்றியுள்ள இவர், பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி கோவில் திருவிழா நாள்களில் தொடர் சொற்பொழிவு நிகழ்த்தி ''சிவத்தமிழ்மணி'' என்னும் விருது அந்தக் கோயிற் பரிபாலன சபையாராற் சூட்டப் பெற்றவர்.

இவரெழுதிய நாவலர் சரித்திர ஆராய்ச்சி என்னும் நூல் அறிஞரிடையே பாராட்டுப் பெற்றது. இப்பொழுது யா. ஆ. தி பா. சங்கப்பிரவேச பண்டித பரீட்சைக்கு பாட நூலாய் உள்ளது. அந்நூல் வட்டுக் கோட்டைத் தொகுதித் தமிழ்ச்சங்க முதலாவது வெளியீடு. இவர் சங்கப் பொருளாளர். சங்கவகுப்புக் களிற் கற்பித்தவர்.

ஆதாரம்: இவரிடம் கேட்டு யாம் எழுதியவை:

---

முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇத்
குவளை உண்கண் குய்ப்புகை கமழத்
தான்துழந் தட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன் றொண்ணுதல் முகனே.

— குறுந்தொகை

# முதுகலைமாணி நாச்சியார்

## 1941 —

சுழிபுரம் கிழக்கில் பிறந்த இவரின் தந்தையார் திரு. மாரிமுத்து. தாயார் திருமதி இலட்சுமி. இவரது கணவர் திரு. செல்வநாயகம்.

இவர் சுழிபுரம் கிழக்கு அமெரிக்கன் மிசன் பாடசாலையிலும், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியிலும் கற்று க. பொ. த. உயர்பரீட்சையிற் சித்தியெய்திய பின், கொழும்புப் பல்கலைக் கழகத்திற் சேர்ந்து 1973 — 1974 இலும் பின் வித்தியாலங்காரப் பல்கலைக் கழகத்தில் 1974 — 1980 இலும் படித்து (B. A.) கலைமாணி, மெய்யியல்மாணிப் (B. Phil) பரீட்சைகளிற் சித்தியெய்தியவர்.

யாழ். பல்கலைக் கழகத்தில் 1980 இலே விரிவுரையாளராகச் சேர்ந்த இவர் "கந்தன் ஆலயங்களிற் பேணப்படும் ஆகமக் கிரியை மரபுகள்" என்ற ஆராய்ச்சிக் கட்டுரையைச் சமர்ப்பித்து, முதுகலைமாணி(M. A.) பட்டம் பெற்றுர்.

இப்பொழுது யாழ். பல்கலைக்கழகத்து இந்து நாகரிகத் துறையின் சிரேட்ட விரிவுரையாளராய் விளங்கும் இவர், இனிய பேச்சாளரும் சிறந்த எழுத்தாளரும் ஆவர்.

இறந்தவர்களுக்கான இறுதிக்கிரியைகள் பற்றி விரிவான ஆராய்ச்சி செய்துள்ள இவரின் ஆக்கம் விரைவில் அச்சேறி வெளிவர இருக்கின்றது.

வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச்சங்க நிர்வாகிகளுள் இவரும் ஒருவர். பலரும் பாராட்டும் நல்லவராய், இனியவராய்த் தெய்வபக்தி மிக்கவராய் வாழுகின்றுர்.

ஆதாரம்; இவரைப் பேட்டிகண்டு யாம் எழுதியவை.

## 6 செட்டிகுறிச்சி

| | |
|---|---|
| திருஞான சம்பந்த உபாத்தியாயர் | *1839 — 1906* |
| அப்பாப்பிள்ளை உபாத்தியாயர் | *1842 — 1908* |
| சிவப்பிரகாச பண்டிதர் | *1850 — 1918* |
| பண்டிதர் நடராசா | *1908 — 1965* |
| உரையாசிரியர் கார்த்திகேசு | *1908 — 1986* |
| புலவர் வேல்முருகன் | *1932 — 1991* |
| வித்துவான் விருத்தாசலம் | *1926 —* |

# திருஞானசம்பந்த உபாத்தியாயர்

## 1839 — 1906

ஏறக்குறைய 150 வருடங்களுக்கு முன் சுழிபுரம் செட்டிகுறிச்சியில் வாழ்ந்த செல்வநாயகச் செட்டியார் மரபில் உதித்தவர் இவர். ஆறுமுக நாவலரிடம் இலக்கிய இலக்கண நூல்கள் படித்தவர். கந்தபுராணம், பெரியபுராணம், பாரதம்போன்றபுராண இதிகாசங்களில் மிகுந்த பயிற்சியுடையவர். பலருக்குத் தமிழ் கற்பித்தவர். பிரசங்கம் செய்யும் வன்மையும், கவிதை பாடும் ஆற்றலும் உடையவர் என்பர்,

மாணிக்கப் பிள்ளையார் திருவருட்பா, கதிர்காம வேலவர் திருவருட்பா முதலான பிரபந்தங்களும் தனிநிலைக் கவிகள் சிலவும் ஆக்கியவர்.

கதிர்காம வேலவர் திருவருட்பாவில் வரும் கவிதையொன்று வருமாறு:

''பூவார் மலர்மிசைப் போதனும் மாயனும் போற்றியினும்
நாவால் துதித்தற் கரிதாம் கதிரை நகருறையும்
மாவாரும் வள்ளிதெய் வானை மணாளற்கு மன்னுமருட்
பாவார் துதித்துணை மாணிக்க ஐங்கரன் பாதங்களே''.

இவர் வாழ்வின் நடுப்பகுதியில் செட்டிகுறிச்சியை விட்டுத் திருநெல்வேலியிற் குடியேறி வாழ்ந்தவராதல் வேண்டும். இவரது மகன் சோமசுந்தரம்பிள்ளை என்பவர் சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் இற்றைக்கு 50 வருடங்களின் முன் படிப்பித்தவர் என்று அறிந்தோர் கூறுகின்றனர்.

ஆதாரம்: 1. ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரித்திரம்
2. பல்கலைப்புலவர் க. சி. குலரத்தினம் கூறியவை.

# அப்பாப்பிள்ளை உபாத்தியாயர்
## 1842 — 1908

இவர் செட்டி குறிச்சியில் வாழ்ந்த சரவணமுத்துச் சட்டம்பியாரின் மகன். வடகோவைச் சபாபதி நாவலரின் சகோதரி காமாட்சிப்பிள்ளையைத் திருமணம் புரிந்தவர். சபாபதி நாவலரும் மாற்றுச் சம்பந்த முறையில் இவரின் தங்கை வள்ளியம்மையை விவாகம் செய்தவர். அப்பாப்பிள்ளை உபாத்தியாயரின் தம்பி சிவப்பிரகாசம் தமிழ்ப்புலமையிற் சிறந்து பண்டிதராய் விளங்கியவர்.

அப்பாப்பிள்ளை உபாத்தியாயருக்குச் சண்முக நாதன், சிவகுருநாதன் என்னும் ஆண்மக்கள் இருவரும், அன்னபூரணம் என்னும் ஒரு மகளும் இருந்தனர். இவர்களில் சிவகுருநாதன் தமது தந்தையாரிடம் தமிழும், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் ஆங்கிலமும் படித்து மலாய்நாடு சென்று உத்தியோகம் வகித்தவர். மலாயா சைவசித்தாந்த சங்கத் தலைவராய், செயலராய் இருந்து சேவைகள் பல செய்தவர். தாய்மாமனுராகிய சபாபதி நாவலரின் நூல்கள் சிலவற்றை மறுபதிப்புச் செய்தவர். சபாபதி நாவலர் சரித்திரத்தை அச்சிட்டுப் பலரும் அறியப் பரப்பியவர்.

அப்பாப்பிள்ளை உபாத்தியாயர் செட்டி குறிச்சியில் நீண்ட காலம் வாழ்ந்து, பலருக்கும் தமிழ் கற்பித்தவர். அவருடைய இல்லம் அந்தக் காலத்தில் திண்ணைப் பள்ளிக் கூடமாக விளங்கியது. அவரிடம படித்த மாணவர்கள் பலர் பண்ணாகம், செட்டிகுறிச்சி, சுழிபுரம் என்னும் ஊர்களில் இருந்தனர். அவர்கள் அவரைச் சட்டம்பி அப்பாவர் என்று செல்லமாக அழைப்பர்.

ஆதாரம்: 1. இவரது இளையமகன் சிவகுருநாதனிடம் கேட்டவை
2. புலவர் வேல்முருகன் கூறியவை.

# சிவப்பிரகாச பண்டிதர்

## 1850 — 1918

செட்டி குறிச்சியில் வாழ்ந்த சரவணமுத்துச் சட்டம்பியாரின் இளையகுமாரன் இவர். தமது மைத்துனர் சபாபதி நாவலரிடம் தமிழை வரன்முறை யாகக் கற்றுப் பண்டிதர் ஆனவர். நாவலரோடு கூடி நெடுங்காலம் வாழ்ந்தவர். சபாபதி நாவலரின் ஆவி பிரியும் வேளையிலே சிதம்பரத்தில் அவரது அருகில் இருந்தவர்.

சபாபதி நாவலர் சிதம்பரத்திலுள்ள தமது தரும சாதன உடைமைகளைப் பரிபாலனஞ் செய்யும் உரிமை யைச் சிவப்பிரகாசத்தாருக்குக் கையளித்திருந்தார். சிவப்பிரகாச பண்டிதரின் மக்கள் நாகம்மாவும் சோமசுந்தரமும் ஆவர். அந்தப் பரிபாலன உரிமையை இப்போது மகன் சோமசுந்தரம் பெற்றுள்ளார். இவரு டைய உறவினர்கள் இப்போது செட்டிகுறிச்சியிலும் கோப்பாயிலும் வாழ்ந்து வருகின்றனர்.

ஆதாரம்: புலவர் வேல்முருகன் கூறக்கேட்டு எழுதியவை.

---

### பருகத் தகாதனவும் தக்கனவும்

கோப்பி, தேயிலை. கொக்கோ என்னும் பானங்கள் நாட் டில் காசம். நீரிழிவு, கசம் முதலான நோய்களை உண்டாக்கு கின்றன. இவற்றுக்குப் பதிலாக சுத்தநீர், மோர், பழரசம், இளநீர் முதலியவற்றை மக்கள் பருகலரம். இவை சீரணம், இரத்த ஓட்டம், ஈரல் ஊக்கம் இவற்றுக்குத் துணை புரியும்.

— திரு. வி. க.

# பண்டிதர் நடராசா

## 1908 — 1965

சுழிபுரம் செட்டிகுறிச்சியில் செல்வநாயகத்தின் மகனாகத் தோன்றிய இவர் மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டித பரீட்சையில் தேறியவர். ஆறுமுக வித்தியா சாலையிலும் பின்பு விக்ரோறியாக் கல்லூரியிலும் படித் தவர். கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிலும் படித்துப் பயிற்றப்பட்ட ஆசிரியராய்ப் பண்டிதராய் வாழ்ந்தவர். இலங்கையின் பல பாகங்களிலுமுள்ள பாடசாலைகளிற் படிப்பித்தவர்.

அப்பாப்பிள்ளை உபாத்தியாயரின் மகள் அன்ன பூரணம் பெற்ற மகளான மங்கையர்க்கரசியை மனை வியாகக் கைப்பிடித்தவர். இவர்களுக்குப் புனிதவதி, கருணையானந்தன் என்னும் மக்கள் இருவர்உள்ளனர்.

பண்டிதர் பறுளைமுருகன் அந்தாதி என்ற நூல் இயற்றியதாகக் கூறப்படுகிறது. நூல் கிடைக்கவில்லை.

ஆதாரம்: **புலவர் வேல்முருகன் கூறக் கேட்டு எழுதியவை.**

---

சிறுகுடி யீரே சிறுகுடி யீரே
வள்ளி கீழ்வீழா வரைமிசைத் தேன்தொடா
கொல்லை குரல்வாங்கி யீனா மலைவாழ்நர்
அல்ல புரிந்தொழுக லால்.

— **கலித்தொகை**

# உரையாசிரியர் கார்த்திகேசு

## 1908 – 1986

செட்டி குறிச்சியில் வாழ்ந்த கந்தையாவின் மைந்தராகிய இவர் இளமைக் காலத்தில் பலவித நோய்களாற் பீடிக்கப்பட்டு வருந்தினரென்றும், விரதம், வழிபாடு, யோக அப்பியாசங்கள் என்பவற்றை மேற்கொண்டு நோய் தீர்ந்து சுகம் பெற்றார் என்றும்யாம் அறிவோம்: பலரும் கூறுவர்.

சுழிபுரம் ஆறுமுக வித்தியாசாலையிற் கற்கக்கூடியவற்றைக் கற்றபின், தாமாகவே இலக்கணம், இலக்கியம், புராணம், இதிகாசங்களைப் படித்துப் புலமை பெற்றார். கோயில்கள் தோறும் சென்று கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற்புராணம், திருவாதவூரடிகள் புராணம், காசிகாண்டம் போன்ற புராண நூல்கள் பலவற்றுக்கும் அழகாக இனிமையாக உரை விரித்துக் கூறுவார். கேட்டவர்கள் பலரும் பாராட்டும் உரையாசிரியராகவும் யோகியாகவும் இவர்கள் விளங்கினார்கள்.

யோகி அவர்கள் புராணங்களுக்கு உரையெழுதிக் கையெழுத்துப் பிரதியாக வைத்திருந்தார். கந்தபுராணம் யுத்தகாண்டத்தில் சிங்கமுகாசுரன் வதைப்படலம் தொடக்கம் மீட்சிப்படலம் இறுதியாகவுள்ள பகுதிக்கு இவர் எழுதிய உரை 1971 ஆம் ஆண்டில் கொழும்புத்துறை ஆசிரியர்பயிற்சிக் கலாசாலை இந்து மாமன்றத்தினரால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

கந்தபுராணம் தேவகாண்டத்துக்கு அவரெழுதிய உரை, அவருடைய மாணவர் செ. சிவபாதம் என்பவரால் 1988 இல் அச்சேற்றி வெளியிடப்பட்டது.

யோகியின் கந்தரனுபூதியுரை 1980 ஆம் ஆண்டில் வழக்கம்பரைப் பசனைச் சபையினரால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

யோகி அவர்கள் நைட்டிகப் பிரமச்சாரியாய்ச் சுழிபுரம் சாந்தாகொல்லைச் சிவன் கோவிலில் மடமொன்று கட்டுவித்துத் தாமே தனித்துச் சமைத்து உண்டு யோக தியானங்கள் செய்து திருவருள் ஞானம் பெற்றவர்கள்.

ஆதாரம்: யாம் நேரிற் கண்டு கேட்டு விசாரித்து அறிந்து எழுதியவை.

---

சுடர்த்தொடீஇ கேளாய் தெருவில் நாம் ஆடும்
மணற்சிற்றில் காலிற் சிதையா அடைச்சிய
கோதை பரிந்து வரிப்பந்து கொண்டோடி
நோதக்க செய்யும் சிறுபட்டி மேலோர்நாள்
அன்னையும் யானும் இருந்தேமா இல்லிரே
உண்ணுநீர் வேட்டேன் என்வந்தாற் கன்னை
அடர்பொற் சிரகத்தால் வாக்கிச் சுடரிழாய்
உண்ணுநீ ரூட்டிவா என்ற ளெனயானும்
தன்னை யறியாது சென்றேன் மற்றென்னை
வளைமுன்கை பற்றி நலியத் தெருமந்திட்டு
அன்னாய் இவனொருவன் செய்ததுகா ணென்றேனா
அன்னை யலறிப் படர்தர அன்னையான்
உண்ணுநீர் விக்கினா னென்றேனா அன்னையும்
தன்னைப் புறம்பழித்து நீவமற் றென்னைக்
கடைக்கண்ணாற் கொல்வான்போல் நோக்கி நகைக்கூட்டம்
செய்தானக் கள்வன் மகன்.

— கலித்தொகை

# புலவர் வேல்முருகன்

## 1932 — 1991

செட்டி விதானையார் எனப்புகழ் பெற்ற இ. க. காசிநாதன் இவரது தந்தையார். தாயார் நாகேசுவரி. இருவருக்கும் இவர் அருமருந்தன்ன ஒரே பிள்ளை.

1932 கார்த்திகை மாதத்துத் திருக்கார்த்திகையில் உதித்த இவர், காலையடி அமெரிக்கன் மிசன் பாடசாலை, பண்டத்தரிப்பு ஆரம்பபாடசாலை, பண்ணுகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம் என்பவற்றிற் படித்து 1951இல் க. பொ. த சா. வகுப்புப் பரீட்சையில் சித்தியடைந்தார்.

1952 இல் சிதம்பரம் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்திற் சேர்ந்து ஐந்து ஆண்டுகள் படித்துப் புலவராகி B. O. L. விருதும் பெற்ருர்.

பண்ணுகம் மெய்கண்டானில் துணையதிபராய், பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராய் சேவைசெய்து 1990 இல் ஒய்வூதியம் பெற்ருர்.

கவிதைகள் பாடுவதில் வல்லவர். பணிப்புலம் முத்துமாரியம்மன் ஊஞ்சல் பாடியவர். வாழ்த்துப் பாக்கள், பிரிவுபசாரப்பாக்கள், இரங்கற் கவிதைகள் என அனேகம் பாடியுள்ளார். நாடகத்துறையிலும் வல்லவராயிருந்தார். கல்லூரிமாணவர் நடிக்கப் பல நாடகங்களை ஆக்கிப் பயிற்றி மேடையேற்றியதன்றித் தாமும் நடிகராக நடித்தும் புகழ்படைத்தவர்.

தமது குடும்பப் பரம்பரை முகாமையில் இருந்த காலையடி வேல்முருகன் ஆலயத்தின் நிர்வாகத்தை ஊர்ப்பொதுவான பரிபாலனசபையிடம் ஒப்படைத்து அதன் தலைவராயிருந்து 04-07-1991 இல் குடமுழுக்கு விழாவை நடத்தியவர்.

திடீரென உண்டான மாரடைப்பினால் 09-07-1991 இல் தமது பூதவுடம்பை விடுத்துப் புகழுடல் பெற்றார்.

வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச்சங்க நிர்வாகிகளுள் ஒருவராய், நல்ல கருத்துரைகள் வழங்குபவராய், முத்தமிழ்ப்புலவராய, தருமவானாயிருந்தார்.

ஆதாரம்: யாம் படிப்பித்தும் பல்வகைத் தொடர்புகளூற்றும் அறிந்தவை.

---


## காதல்

ஆண் பெண் இருவர் பாலும் காதல் நிலவுதல் வேண்டும். காதலாவது தலைவிதலைவர்களுக்குள் நிகழும் கடவுள் அன்பு தலைவி தலைவனைக் கடவுளாகக் கோடலும், தலைவன் தலைவியைக் கடவுளாகக் கோடலும் காதலாகும். கடவுள் எல்லாவற்றையும் கடந்து நிற்பது. தலைவனும் தலைவியும் தாம் விரும்பும் பொருள்களுள் தம்மோடு ஒப்பாகவாதல் உயர்வாகவாதல் தாமன்றிப் பிறிதொன்றைக் காணாத ஒரு பெரும் நிலை. இக்காதலால் விழுங்கப் பெற்ற தலைவிக்குத் தலைவனிலும் கடந்த பொருள் ஒன்று தோன்றாது. அவ்வாறே தலைவனுக்கும் தலைவியினுங் கடந்த பொருள் ஒன்று புலனாகாது.

திரு. வி. க.

# வித்துவான் விருத்தாசலம்

## 1926 —



இவர் செட்டிகுறிச்சியுடன் இணைந்த பணிப்புலத்தில் பிறந்தவர். தந்தையார் முருகேசு. தாயார் விசாலாட்சி.

சுழிபுரம் ஆறுமுக வித்தியாசாலையில் பாலர்வகுப்புத் தொடக்கம் கடைசி வகுப்பு வரையும், படித்துத் தமிழ் மொழிமூலமான சி. பா. த பரீட்சையில் சித்தியெய்தினர், வட்டு இந்துக் கல்லூரி, பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி என்பவற்றில் சேர்ந்து கற்று ஆங்கில மொழி மூலமான சி. பா. த. பரீட்சையில் சித்தியெய்தினர்.

தமது சுயமுயற்சி கொண்டு படித்து ஆசிரியதராதரப் பத்திரப்பரீட்சையில் சித்தியெய்தியபின், பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிற் சேர்ந்து படித்துப் பயிற்றப்பட்டஆசிரியரானர். பேராதனைப் பல்கலைக்கழகத்து வித்துவான், கலைமாணி ( B A.) கல்வி டிப்புளோமா பரீட்சைகளில் சித்தியடைந்தார்.

இவர் தமது ஆசிரிய சேவையைக் கொழும்பு பீற்றேஸ்கல்லூரியில் தொடங்கினுர். பாணந்துறை தொட்டவத்தை முஸ்லீம் மகாவித்தியாலயம், மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயம், பட்டிருப்பு மகா வித்தியாலயம் என்பனவற்றில் அதிபராக இருந்த காலத்தில் க. பொ. த. உயர்வகுப்புக்களைத் தொடக்கி நடத்தி. மாணவர் பலர் பல்கலைக்கழகத்திற் சேர்ந்து படித்து உயர்வு பெற ஊக்கமளித்தார்.

இறுதியாக 05-09-1975 தொடக்கம் தாம் முதலில் படித்த சுழிபுரம் ஆறுமுகவித்தியாலயத்தின் அதிபராக மாற்றம் பெற்று, அங்கு க. பொ. த. சா. வகுப்பைத் தொடக்கி நடக்கச் செய்தார். 1986 இல் தமது 60 ஆம் அகவை நிறைவில் ஓய்வூதியம் பெறலாஞர்.

இவரின் ஆக்கங்கள்: 1. கண்ணின் இருமணிகள் (நாடகம்) 2. மீண்டும் சென்ற செம்மல் (நாடகம்) 3. தூசித்த தனயனைப் பூசித்ததாய் (நாடகம்) இவை அவ்வப்போது மேடையேற்றப்பட்டன.

ஆதாரம்; யாம் இவரைக் கண்டு கேட்டு எழுதியது.

---

காமர் கடும்புனல் கலந்தெம்மோ டாடுவாள்
தாமரைக்கண் புதைத்தஞ்சித் தளர்ந்ததனோ டொழுகலால்
நீணுக நறுந்தண்டார் தயங்கப்பாய்ந் தருளினுல்
பூணுகம் உறத்தழீஇப் போதந்தான் அகனகலம்
வருமுலை புனர்ந்தன என்பதனுல் என்தோழி
அருமழை தரல்வேண்டில் தருகிற்கும் பெருமையளே.

— கலித்தொகை

# 7. தொல்புரம்

| | |
|---|---|
| கந்தையா உபாத்தியாயர் | *1860 — 1926* |
| பண்டிதர் சிதம்பரநாதன் | *1890 — 1932* |
| புலவர் சிவபாதசுந்தரனார் | *1920 — 1993* |
| புலவர் தேவதாசன் | *1933—* |

# கந்தையா உபாத்தியாயர்
## 1860 – 1926

தொல்புரத்தில் பிறந்து வாழ்ந்த கந்தையா உபாத்தியாயர் பரம்பரையாகப் புலமையிற் சிறந்தோரின் குடும்பத்தில் உதித்தவர். இவரின் பேரனார் வேலாயுதரும் புகழ்பெற்ற உபாத்தியாயராய் இருந்தவர். கந்தையா உபாத்தியாயரின் தந்தையார் கதிரேசுச் சட்டம்பியார்.

கந்தையா உபாத்தியாயர் தமது வீட்டுக்கு அயலாகச் சைவசித்தாந்தவித்தியாசாலை என்ற பெயரில் ஒரு பாடசாலை கட்டுவித்து, மாணவர்பலருக்குத் தமிழும் சைவமும் கற்பித்தவர், இவரது செந்தமிழ்ப் புலமையும் சைவசித்தாந்தப் புலமையும் பலராலும் பாராட்டப்பட்டவை.

இவரது மூத்த மகன் கே. சீ. நாதன் என்று புகழ் பெற்ற பண்டிதர் சிதம்பரநாதன், இளைய மகன் சண்முகநாதன். இவர் புராணபடன உரையாசிரியர்.

கந்தையா உபாத்தியாயர் வழக்கம்பரை முத்துமாரியம்மன் பேரில் பாடிய ஊஞ்சல், பராக்கு என்பன இன்றும் வழங்குகின்றன.

''சீர்மேவும் தொல்புரத்தில் திகழ்ந்து வைகும்
செய்யவளம் செறிவழக்கம் பரையில் வாழும்
ஏர்மேவும் மகாமாரி யம்மை மீதே
இசைபூத்த செந்தமிழால் ஊஞ்சல் ஓதத்
தார்மேவும் சடைமவுலி யரனார் தந்த
தனிமகவாம் பெருமுதன்மை சார நின்ற
கார்மேவும் கரிமுகவன் தனது பாதம்
கரம்பூத்த மலர்கொண்டேகருதி வாழ்வாம்.''

இது ஊஞ்சல் நூலில் வருவது.

ஆதாரம்: 1. ஷெ ஊஞ்சல் நூலிற் குறிப்பிடப்படும் சரித்திரம்
2. இவரது மாணவர் அ. கந்தையாவிடம் யாம் கேட்டு எழுதியவை.

# பண்டிதர் சிதம்பரநாதன்

## 1890 – 1932

மூன்று தலைமுறையாகப் புலமையிற் சிறந்த குடும்பத்தில் உதித்த இவரின் தந்தையார் சைவத் தமிழ்ப்பேரறிஞராகிய கந்தையாஉபாத்தியாயர். இவர் தமது இளமைக் காலத்துக் கல்வியைத் தந்தையாரிடம் பெற்றார். பின்பு வட்டு இந்துக்கல்லூரியில் சோம சுந்தரப் புலவரிடம் தமிழ் அழுத்தமாகப் பயின்றார். யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியிற் சேர்ந்து படித்து ஆங்கிலம் சீனியர் (கேம்பிறிட்ச்) பரீட்சையில் சித்தி யடைந்தார்.

கருவிலே திருவுடையராகிய இவர், தமிழ் மொழியைமேலும் பயின்று மதுரைத்தமிழ்ச்சங்கப் பண்டிதர் விருதும் பெற்றார். பின்பு கொழும்புச் சட்டக் கல்லூரியிற் படித்துச் சட்டத்தரணியுமானார்.

இனிய குரல்வளமும் சங்கீத ஞானமும் வாய்க்கப் பெற்றதனால் ஊர்கள்தோறும் சென்று சங்கீத கதாப் பிரசங்கங்கள் இனிமை சொட்டச் செய்த இவர் அனை வரது பாராட்டுக்கும் உரியவரானார். காந்தியக் கொள்கையில் மிகுந்த பற்றுடையவர் இவர். கதர் வேட்டி, கதர்ச்சட்டை, கதர்க் குல்லா அணிந்து குமிழ் மிதியடியில் உலாவுவார். நீதிமன்றத்துக்கும் வேட்டி, நீளக்கதர்ச்சட்டை, தலைப்பாகையணிந்து சென்றமுதற் சட்டத்தரணியாய் விளங்கினார்.

பண்டிதர் அவர்கள் சட்டக்கல்லூரியிற் படித்த காலத்தில் மலாய்நாட்டுக்குச் சென்று சமயச்சொற் பொழிவுகள், சங்கீதகதாப்பிரசங்கங்கள் செய்து மக்க

ளின் பாராட்டுக்களைப் பெற்றார். அங்குத் தங்கிய காலத்தில் சத்தியவான் சாவித்திரி நாடகத்தைத் தாமே ஆக்கிமேடையேற்றி நடித்துமுள்ளார்.

சட்டக்கல்லூரியிற் சேரும்முன்பு வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியிலும் வேறுபாடசாலைகளிலும் ஆசிரியராகக் கடமையாற்றினர். செந்தமிழையும் சைவத் திருநெறியையும் தாம்சென்றசென்ற இடங்களில் எல்லாம் பிரசாரம் செய்துவந்தார். அவர் சமய வெறியோ, புறமதத் துவேஷமோ கொள்ளாது, எல்லாச்சமயங்களும் போற்றும் முழுமுதற் கடவுள் ஒருவரே என்ற தாயுமானவர், இராமலிங்க அடிகள் போன்று சமரச ஞானம் பேசும் அருளாளராக விளங்கினார்.

சட்டத்தரணியாகக் கொழும்பில் கடமையாற்றுங் காலத்தில், கொழும்பு மு. திருவிளங்கத் தேசிகருடன் நெருங்கிய தொடர்பு கொண்டார். அவரைத் தமது ஆத்மார்த்த குருவாகப் போற்றினர். அவரிடம் சிவஞான போதம், சிவஞானசித்தியார் போன்ற சித்தாந்த நூல்களைக் கற்றார். கற்றுச் சைவமுறுக் கேறினர். தேசிகரின் ஆவிபிரிந்த 1922 மாசி 22ஆம் திகதிவரையும் நாதன் அவர்களைக் காணத் தவறியதில்லை. ஆவிபிரியும் வேளையில் உடனிருந்து திருமுறை ஓதிய மூவரில் பண்டிதர் நாதனும் ஒருவராவார்.

பண்டிதர் அவர்கள் பெரிய முருகபக்தர். 1921ஆம் ஆண்டு தொடக்கம் வருடந்தோறும் சித்திரைவருடப் பிறப்பிலும் ஆடிமாதத்திலும் கதிர்காமத்தில் நடைபெறும் திருவிழாக்களைந் தவறாது தரிசிக்கும் நியமம் மேற்கொண்டிருந்தார். 1928இல் தமது திருமணத்தையும் கதிர்காமத்திலேயே நடத்தச் செய்தார்.

கதிர்காம முருகன் பிள்ளைத் தமிழ் பாடி, ஒரு பகுதியை 1923ஆம் ஆண்டு ஆடித்திருவிழான் போது சுவாமி விபுலாநந்தர் தலைமையில் அரங்கேற்றினர். 1924ஆம் ஆண்டுத் திருவிழாக் காலத்தில் பிள்ளைத் தமிழ் முழுவதும் யோகர்சுவாமிகள் முன்னிலையில் பாடி அரங்கேற்றம் பெற்றது.

பண்டிதர் நாதன் அவர்கள் நடுத்தர உயரம் உடையவர். கதர்க்குல்லா, ஐதானதாடிமீசை, பாதக் குறடுகளுடன் அவரைப் பார்ப்பவர்களும், அவருடைய உரைகளைக் கேட்பவர்களும் அவரை ஓர் இளம் முனிவர், ஞானி என்றே போற்றுவார்.

தமது குருவாகிய திருவிளங்கத் தேசிகர் மேல் அவர் 08-09-1930இல் பாடிய செய்யுள்

அருள்விளங்கச் சிவநெறியின் அருணந்தி
மொழிநூலின் ஆழம் தேற்றி
உருவிளங்க உண்மைநிலை யுணராதேம்
உணர்ந்துய்ய ஒழுக்கிற் காட்டி
மருவிளங்கக் கதிர்காம வாழ்க்கைநிலை
கூட்டிவைத்த வாழ்வே சைவத்
திருவிளங்கக் குருவே! யுன் சீபாதமலர்
தலைமேற் சேர்த்து வேனே.

இவரியற்றிய நூல்கள் (1) கதிர்காம முருகன் பிள்ளைத்தமிழ் (2) கலையோடைக் கண்ணகை ஊஞ்சல் (3) கதிர்காமக் கீர்த்தனங்கள் (4) பருத்தித்துறைச் சித்திவிநாயகர் திருவூஞ்சல் (5) கதிர்காமக் கந்தர் திருப்பள்ளியெழுச்சி (6) வழக்கம்பரையம்மன் குடமுழுக்கு விழாப் பாடல்கள் என்பன.

ஆதாரம்: 1. அவருடைய மகள் அங்கயற்கண்ணி சிவப்பிரகாச பிள்ளையிடமிருந்து பெற்ற பண்டிதர் கைப்பட எழுதிய நூல்களின் பிரதிகள்
2. பண்டிதரின் நண்பர் திரு. அ. கந்தையாவிடம் கேட்டறிந்தவைகள்

# புலவர் சிவபாதசுந்தரனர்

## 1920 — 1993

தொல்புரத்தில் வாழ்ந்த நாகலிங்கம் உமைய வல்லிப் பெற்றுரின் ஒரேமகன் இவர். மலேசியநாட்டிற் பிறந்த இவர் அங்குப் பாலர் வகுப்புக்களிற் படித்த பின் இங்குவந்து, மூளாய் சைவப்பிரகாச வித்தியா சாலேயிற் சேர்ந்து சி. பா. த. வகுப்புவரை படித்துச் சித்தியடைந்தார். பின்பு திருநெல்வேலியில் பண்டித மணி கணபதிப்பிள்ளே நடத்திய காவிய வகுப்பில் படித்துப் பிரவேசபண்டிதரானுர். பின்பு 1942இல் சிதம்பரம் அண்ணுமலேப் பல்கலேக்கழகத்தில் 4 ஆண் டுகள் படித்துப் புலவரானுர்.

அங்குப் படிக்குங்காலத்தில் சுதந்திரவீறு உடைய வராய், அங்குப்படித்த ஈழநாட்டு மாணவர்களே ஒன்று சேர்த்து, ஈழநாட்டுத் தமிழ்மாணவர் மன்றத்தைத் தோற்றுவித்து, அங்குள்ள பட்டமளிப்பு விழாமண்ட பத்தில் ஆறுமுகநாவலர், விபுலாநந்தஅடிகள், சி. வை. தாமோதரம்பிள்ளே என்போரின் உருவப்படங்களேத் திறந்துவைத்துப் பெருவிழாக்கள் நடத்துவித்தார்.

1947 இல் திருமணம் புரிந்து கொண்டு, தமிழ் நாட்டுக்குத் திரும்பவும் சென்று, சென்னே சிந்தாதிரிப் பேட்டை உயர்கல்லூரியில் ஆசிரிய நியமனம் பெற்றுர். சிலவருடங்களின் பின் ஈழத்துக்குத் திரும்பி வந்து, தெல்லிப்பழை மகாசனக்கல்லூரி விரிவுரையாளராக நியமனம் பெற்றுர். அங்கிருந்தே 1980இல் ஓய்வூதியம் பெற்றுர்.

வட்டுக்கோட்டைத் தமிழ்ச்சங்கத்தை 1964இல் நண்பர்களுடன் கூடி உருவாக்கினார். சங்கத்தின் ஆதரவில் பிரவேச பாலபண்டித பண்டித வகுப்புக்களை நடத்த உதவினார். சங்கநூல்களிலும், காப்பியங்கள் தனிப்பாடல்களிலும் வரும் இனிய நிகழ்ச்சிகளை அழகான ஓவியங்களாக வரைவித்து, அவற்றுக்குக் கண்ணாடிக் கூடுகள் பொருத்தி, இருநூற்றுக்கு மேற்பட்ட அந்த ஓவியங்களைத் தமிழ்நிலைக் காட்சி என்ற பெயரில் பண்டத்தரிப்பு மகளிர்கல்லூரி, காரைநகர் இந்துக் கல்லூரி, சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி என்னும் இடங்களில் பலரும் பார்த்துப் பயன்பெறும் வண்ணம் செய்தவர்.

தமிழ்மறைக்கழகம் திருவள்ளுவர் விழாவை வட்டுக்கோட்டைத் தொகுதித்தமிழ்ச்சங்கம் மூலம் நடத்த முன்னின்று உழைத்தார். 1974இல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டில் புலவரின் ஆராய்ச்சிக் கட்டுரை படிக்கப் பெற்றுப் பாராட்டுக்குரியதாயிற்று. பெரும்புலவர் புகழ்ச்சேவையைத் தாங்கிவந்த வரிநெடும் புத்தகங்களாகிய Learned Asia, Famous India என்பவற்றில் சிவபாதசுந்தரனாரின் பெயரும் சேவையும் பொறிக்கப் பெற்றுள்ளன,

இவரால் பாரதிச்சுடர் (1941) மொழியுணர்ச்சி (1942) காந்தீயநோக்கு (1951) சத்திய சரிதை (1953) சர்வோதயம் (1953) கண்ணகிகற்பு (1956) மறக்குடி மாண்பு (1963) காந்திக்கிராமம் (1964) திருமுறைகளில் திருமணம் (1969) மகாவித்துவான் சி. கணேசையர் (1977) சைவப்பெரியார் சிவபாதசுந்தரம் (1978) பரவெளித்தத்துவம் (1981) பதி இலக்கணம் (1982) புறப்பொருள் வெண்பாமாலை ஆராய்ச்சியுரை

பாகம் I *(1972)* மேற்படிநூல் பாகம் II *(1992)* மேற்படி பாகம் III *(1993)* என்னும் நூல்கள் காலந்தோறும் எழுதி வெளியிடப்பட்டன.

இவரெழுதிய பரவெளிதத்துவமும், புறப்பொருள் வெண்பாமாலை ஆராய்ச்சியுரை 3 பாகங்களும் வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச்சங்க வெளியீடுகளாகும். இவற்றின் முதலாம் இரண்டாம் பாகங்கள் இலங்கைச் சாகித்திய மண்டலப் பரிசில்கள் பெற்றன.

இவரது பொருள்நூலறிவைப் பாராட்டிப் பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் ''பொருள்நூல் விற்பன்னர்'' என விருது சூட்டினர். நாவலர் விழாச் சபையார் தமிழ்மாமணிவிருதும், இலங்கைக் கலாச்சார அமைச்சு தமிழ்மணிவிருதும் சூட்டினர்.

கடந்த 22-08-1993இல் கொழும்பில் இலங்கை இராசாங்க இந்துகலாச்சார அமைச்சு நடத்திய சாகித்திய விழாவில் இவர் அதியுத்தம சனாதிபதியால பொற்கிழி வழங்கப் பெற்றுப் பொன்னாடையும் போர்த்துச் சிறப்புப் பெற்றார்.

இவருக்கு வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச் சங்கம் 17-05-1993இல் வைரவிழாவும், 17-10-93இல் பாராட்டுவிழாவும் நடத்திச் சிறப்பித்தது. இவர் 16-12-1993இல் இறைபதம் எய்தினர்.

**ஆதாரம்:** இவரிடம் கேட்டு யாம் எழுதியவையும், இவரது ஆக்கங்களில் இருந்து அறிந்தனவும்.

# தேவதாசன் B. O. L.

## 1933 –



சங்கானையில் கிராமச் சங்கம் நடந்தகாலத்தில் அங்கு எழுதுவினைஞராக நெடுங்காலம் வேலை செய்தவர் தொல்புரம் மா. கனகசுந்தரம் அவர்கள். அவருடைய துணைவியார் சிவஞானவதியார். இவர்களின் அன்பு மகனாக உதித்தவர் தேவதாசன்.

மூளாய் சைவப் பிரகாச வித்தியாசாலையிலும், பின்பு சுழிபுரம் விக்ரோறியா கல்லூரியிலும் கற்று க. பொ. த. பரீட்சையில் சித்தியடைந்த தேவதாசன் 1962இல் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற் சேர்ந்து 5 ஆண்டுகள் படித்துப் B. O. L. விருது பெற்றார்.

யாழ். இடைக்காடு மகாவித்தியாலயத்தில் ஆசிரிய நியமனம் பெற்றுப் பின் இளவாலை மெய்கண்டான் வித்தியாலயத்திலும், ஈற்றில் வட்டு திருஞானசம்பந்த வித்தியாசாலையிலும் கற்பித்து 1991இல் ஓய்வூதியம் பெற்றார்.

சொற்பொழிவுகள் செய்வதிலும், உபசாரப் பாக்கள் வாழ்த்துக் கவிதைகள் பாடிக் கொடுப்பதிலும், பிரவேசபண்டித பாலபண்டித வகுப்பு மாணவர்க்குக் கற்பித்து உதவி புரிவதிலும் காலத்தைப் போக்கும் இவரின் ஆக்கமான நூல்கள் இனிமேலாவது கிடைக்குமென்று எதிர்பார்க்கின்றோம்.

ஆதாரம் : இவரிடம் கேட்டு யாம் எழுதியவை.

# 8 பண்ணாகம்

| | |
|---|---|
| முத்துக் குமாருப்புலவர் | *1850 — 1908* |
| பண்டிதர் ஆறுமுகம் | *1917 —* |
| பண்டிதர் இராச குரு | *1941 —* |
| பண்டிதர் சேயோன் | *1948 — 1983* |

# முத்துக்குமாருப் புலவர்

## 1850 — 1908

இவர் பண்ணாகம் கிராமத்தில் சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர். இவர் பாடியதாக உள்ள சீட்டுக்கவியில் குறிப்பிடப்படும் வைத்தியர் கைலாயபிள்ளையின் (1850 – 1909) சமகாலத்தவர். புலவரும் வைத்தியரும் பலபல விடயங்கள் குறித்துக் கலந்துரையாடி மகிழும் வழக்கமுடையவராய் இருந்தனரென்று செவிவழிச் செய்தி மூலம் தெரிய வருகின்றது.

அயலூராகிய சுழிபுரத்தில் வாழ்ந்த முருகேசு என்பவர் வைத்தியரிடம் பத்து ரூபா கடனாக வாங்கியிருந்தார். அந்தக் காலத்தில் இன்று நடைமுறையில் இருப்பதைப் போல ஈடோ, அடகோ, வேறு ஒப்பனைகளோ பெற்றுக் கடன் கொடுப்பது மிகவும் குறைவு. வாக்கு நாணயமாகவே கொடுக்கல் வாங்கல்கள் நடைபெற்றன. பணத்தைக் கடனாகப் பெற்ற முருகேசர் பலமாதங்கள் கழிந்தும் திருப்பிக் கொடுக்கவில்லை. வைத்தியர் ஆளனுப்பி விசாரித்தும் முருகேசர் அலட்சியமாய் இருந்து விட்டார். அதனால் கோபங்கொண்ட வைத்தியர், தமது நண்பராகிய புலவரிடம் சீட்டுக் கவிதையொன்று கடுமையாய்ப்பாடி அனுப்பும்படி கூறினார். புலவர்,

ஓங்குசுழி புரநகர்ச் சேதுகா
வலகுலத் துற்றமுரு கேசரேகேள்
உன்கையில் நாணயம தாகவே
தந்தபவுண் ஒன்றுத் தராததேனோ
வாங்கிடும் போதினில் எடுத்திடற்
கென்னவோ வாங்கினாய் கெட்டிகெட்டி
வைத்தியன் வந்துனது வீட்டினிற்
பழிகொண்டு வாங்குவ துனக்கழகிதோ.

* நாங்களிது வரையிலும் காசுவிஷ
யங்களில் நாணயம் பிசகியறியோம்
நண்பாஇஃ தென்னநின் ஊர்ச்சுபா
வங்கொலோ நடப்புகள் மறந்துவிட்டாய்
தாங்கமுடி யாதினித் தருகினும்
தாஅலது தட்டினும் தட்டுவாயுன்
சம்மதப் படிசெய்க கைலாய
பண்டிதன் தந்தகை யோலையிதுவே.

(வைத்தியரைப் பண்டிதரென்றும் அக்காலத்தில் அழைப்பதுண்டு)

* இக்குறியிட்ட அடி பின்வருமாறும் சொல்லப் படுகின்றது.

''ஈங்கிருந் தொருதரம் அன்றுபல தரமெனது பிள்ளைகளை விட்டலுத்தேன்
இனியுமொரு சிறிதேனும் இளகா திருப்பிரேல் இனிநடப்பதனை
எண்ணும்''

இந்தக் கவிதையை வைத்தியர் ஆள்மூலம் முருகேசு கையில் சேர்ப்பித்ததும் அவர் அடுத்த தினமே விரைந்து பணத்தைக் கொடுத்தாரம்,

இப்புலவர் இயற்றிய நூல்களோ கவிதைகளோ வேறு எதுவும் அகப்படவில்லை.

ஆதாரம்: பண்ணுகம் மெய்கண்டான் மகாவித்தியாலய வெள்விழா மலர் 1951.

---

நிலத்தின் தன்மை பயிர்க்குள தாகுமாம்
நீசத் தொண்டும் மடமையுங் கொண்டதாய்
தலத்தில் மாண்புயர் மக்களைப் பெற்றிடல்
சாலவே யரிதா வதோர் செய்தியாம்
குலத்து மாதர்க்குக் கற்பியல் பாகுமாய்
கொடுமை செய்தும் அறிவை யழித்துமந்
நலத்தைக் காத்திட வேண்டுதல் தீமையாம்
நங்கை கூறும் நவீனங்கள் கேட்டிரோ.

— பாரதியார்

# பண்டிதர் ஆறுமுகம்

**1917 —**



பண்ணாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இவரின் தந்தையார் அப்பாப்பிள்ளை தாயார் செல்லம்மா சுழிபுரம் கிழக்கு அமெரிக்கன் மிசன் பாடசாலையில் ஆரம்பக்கல்வி கற்றவர். பண்ணாகத்தில் மெய்கண்டான் பாடசாலை கட்டப்பெற்று நாட்பாடம் தொடங்கிய நாளில் 04-09-1925 இல் மூன்றாம் வகுப்பிற்சேர்ந்து கடைசி வகுப்பாகிய சி. பா. த வகுப்பும் அங்கேயே கற்றவர்.

இடையில் சுழிபுரம் விக்ரோறியா கல்லூரியிற் சேர்ந்து படித்து ஏழாம்வகுப்புப் படிக்குங் காலத்தில் கடுமையான நோயாற் பீடிக்கப்பட்டமையினால் அங்குப் போகமுடியாது படிப்பை அவ்வளவில் நிறுத்திக் கொண்டார். மூளாய் சைவப்பிரகாச வித்தியாலய அதிபராக (1934 — 1938) இருந்த பண்டிதர் இரத்தினம் அவர்களின் வழிகாட்டலை ஏற்று, அவரிடம் பிரவேச பண்டிதபரீட்சைக்குரிய பாடங்களைப் படித்த பின், திருநெல்வேலியில் பண்டிதமணியாலும் அவருடைய மாணவர்களாலும் நடத்தப்பட்ட காவிய பாடசாலையிற் படித்துப் பாலபண்டித பரீட்சையில் சித்தியடைந்தார்.

1939இல் பரமேசுவர பண்டித ஆசிரியப்பயிற்சிக் கல்லூரியிற் சேர்ந்து பண்டிதராயும் பயிற்சிபெற்ற ஆசிரியராயும் சித்தியெய்தினர் (1942)

1944 இல் பண்ணுகம் மெய்கண்டானில் ஆசிரிய நியமனம் பெற்று 1974இல் அங்கிருந்தே ஓய்வூதியமும் பெறலானர். இடையில் 1966 — 1967இல் 14 மாதங்கள் உருத்திரபுரம் மகாவித்தியாலயத்திலும், பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரியிலும் இவர் சேவை செய்துள்ளார். ஆசிரியமணி க. கந்தையா அவர்களின் தலைமையில் நடைபெற்ற தமிழாசிரிய முன்னணி என்றசங்கத்தின் மாதவெளியீடான ''ஆசிரிய தீபம்'' இதழின் ஆசிரியராகவும் 1946 — 48 ஆண்டுகளில் சேவை செய்தார்.

1964இல் வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச் சங்கத்தைத் தமது நண்பர்களுடன் கூடித்தாபித்து, பிரவேச பாலபண்டித பண்டித வகுப்புகளை மெய் கண்டானில் விடுமுறை நாள்களில் நடத்தும் பொறுப் பாளராயும், ஆசிரியர்களில் ஒருவராயும் சேவை யாற்றினர். அவ்வித சேவையினுல் பிரவேச பரீட்சை யெடுத்து 38 பேர் சித்தியடையவும், பாலபண்டிதர் களாக 21 பேர் தேறவும், பண்டிதர்களாக 7 பேர் விளங்கவும் வாய்ப்பாயிற்று. இன்று இத்தொகுதியில் புகழுடன் விளங்கும் பண்டிதர் மு. சு. வேலாயுத பிள்ளை, பண்டிதை பொன். பாக்கியம், பண்டிதை சோ. யோகலட்சுமி என்போர் இவரிடம் படித்தவர் களே.

கவிதை பாடுவதில் இவருக்குள்ள திறமையைப் பாராட்டி அருட்புலவர் விருது வழங்கப்பட்டது. இவர் இதுவரையில் இருபது நூல்கள் இயற்றியுள்ளார்.

அவற்றுள் பத்து நூல்களைத் தொகுத்து "அருளமுத வள்ளம்" என்ற பெயரில் வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச்சங்கம் வெளியீடு செய்துள்ளது.

05-02-1989இல் இவருடைய பழைய மாணவர்களும் நண்பரும் சேர்ந்துமிகச் சிறப்பாக இவருக்கு வைர விழா நடத்தி சிவநெறிச் செல்வர் என்ற விருது வழங்கினர். இவரின் புலமைத் திறத்தை ஒரு பாடல் மூலம் புலப்படுத்துவோம்.

"சுன்னுகத் தான்சுதனே மல்லாகத்துச்
சுடர்த் திருமாதகலான்றன் மருகாமாரன்
பன்னுலை யானத் தான்பகரும் சொல்லாற்
பண்கணு மெல்லியலார் கணவாநாவற்
பொன்னுலையான அணிபொலியச் சீர்தோல்
புரமானபுகழ்ச் சித்தன்கேணி வைகும்
அன்னுயெம் ஐயாவேஅரசே அப்பா
அருட்கந்த சுவாமியே ஆடீர் ஊஞ்சல்"

இஃது சித்தன்கேணிப் பிள்ளையார் தலத்திலுள்ள கந்தசுவாமி ஊஞ்சற்பாட்டு. இதில் நாமாந்தரிதை என்னும் பிரகேளிகை இடம்பெற்றுள்ளது. பிரகேளிகை யாவது:- கருதிய பொருளை ஆழ்ந்து கிடக்குமாறு மறைத்துவைத்து, வெளிப்படையில் வேறொன்றாகத் தோன்றும்படி விநோதமுறச் செய்தல். நாமாந்தரிதை யாவது கருதியபொருளை வேறு நாமங்களிலே மறைத்து வைப்பது, சுன்னுகம் மல்லாகம் மாதகல் பன்னுலை பண்ணுகம் பொன்னுலை தொல்புரம் என்னும் ஊர்ப் பெயர்கள் ஏழும்கருதிய பொருளை மறைத்திருக்கும் நாமாந்தரங்கள்.

சுன்னுகத்தான் — சல் + நாகத்தான்
= வெள்ளியங்கிரியில் வீற்றிருக்கும் பரமசிவன்.

மல்லாகத்து — மல் + ஆகத்து
= வலிமை கொண்ட மார்பின்கண்.

திருமாதகலான் — திருமாது + அகலான்
= மகாலக்குமி நீங்காதிருக்கும் திருமால்.

பன்ஞலையான் — பன் + ஆலையான்
= சொல்லப்படும்கரும்பை வில்லாகவுடையமன்மதன்.

பண்ணுகமெல்லியலார் — பண் + ஆகம் + மெல்லியலார்
= இன்னிசையே திருமேனியாகவுடைய தெய்வநாயகி, வள்ளிநாயகி என்போர்.

நாவற்பொன்ஞலையான — நாவல் + பொன்ஞல் + ஐ + ஆன
= சாம்புநதம் என்னும் மாற்றுயர்ந்த பொன்ஞற் செய்யப்பட்ட.

தொல்புரம்
— பழமைவாய்ந்த நகரம்.

ஆதாரம்: இவரைப்பேட்டி கண்டு பண்டிதர் ம. ந. கடம்பேசுவரன் எழுதியதும் இவரின் ஆக்கங்களிலிருந்து அறிந்தனவும்.

---

## கொழுநன்

கொழுநன் என்பதற்குக் கொழுகொம்பு போன்றவன் என்பது பொருள். தான் சுற்றிக் கொள்ளத்தக்க கொம்பு இஃது என்று கொடி தெரிந்து கொள்ளுதல் போலத் தன் னியல்புக்குரிய கொழுநன் இன்ஞனென ஒருவனைத் தெரிந்து கொள்ளும் பொறுப்புப் பெண்ணுடையதாயிருத்தல் வேண்டும். பெண் பிறந்து, வளர்ந்து, கல்வி பயின்று, தேர்ச்சியடைவது எற்றுக்கு? ஒருவனுடன் வாழ்ந்து தாய்மைப் பேறு பெறுதற் கன்றே? அப்பேற்றிற்குரிய வாழ்க்கைத் துணையைத் தேடு வதில் அவள் கவலை செலுத்தியே தீர வேண்டும்.

திரு. வி. க.

# பண்டிதர் இராசகுரு

## 1940 —

பண்ணுகம் கிராமத்தில் வாழ்ந்த காந்தீய வாதி யாகிய ஞானி திரு. மா. பரமகுருவும் மனைவியர் இராசம்மாவும் பெற்ற மக்களில் மூத்தவர் இராசகுரு. இவர் பண்ணுகம் மெய்கண்டான் மகாவித்தியால யத்திலும், சுழிபுரம் விக்ரோறியா கல்லூரியிலும் கல்வி கற்றவர். சி. பா. த. பரீட்சையில் சித்தியடைந்த பின்பு திருநெல்வேலிக் காவியபாடசாலையிலும், பண்டிதர் துரைசிங்கம் முதலானோரிடத்திலும் கற்றுப் பண்டிதரானார். பின்பு தமிழ் நொத்தாரிசு பரீட்சை யில் சித்திபெற்றார். இப்போது பிரசித்த நொத்தாரிசு ஆகக் கடமைபுரிகின்றார்.

வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்சங்கம் நடத்திய பிரவேச பாலபண்டித பண்டித வகுப்புக் களின் ஆசிரியராகச் சேவையாற்றித் தமிழறிவை இந்தச் சூழலில் விருத்தி செய்தவர்.

ஆலயங்களில் கந்த புராணம், திருவாதவூரடிகள் புராணபடனவிரிவுரையாற்றிச் சிவப்பணியும் செய் பவர். சமயப்பிரசார இயக்கங்கள், அரசியல் அரங் குகள், தமிழ் வளர்க்கும் மன்றங்களில் கருத்தரங்கு, விவாதம், பட்டிமன்றம், கவியரங்குகளில் பங்குபற்றும் சொல்விற்பன்னராகப் புகழ் பெற்றவர். வாழ்த்துப் பாக்கள், உபசாரப் பாக்கள் பல பாடியவர். சென்ற 7-11-93 இல் இவருக்கு நடத்தப்பட்ட பொன்விழா வில் வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச் சங்கம் ''சொல்வேந்தன்'' என்ற விருது சூட்டிக் கௌர வித்தது.

ஆதாரம்: இவரிடம் கேட்டு யாம் எழுதியவை.

# பண்டிதர் சேயோன்
## 1948 — 1983

இலங்கையரசின் காவல்துறைத் தலைவராயிருந்த வைரமுத்து ஆறுமுகமும் மனைவி செல்வரத்தினம்மாவும் பெற்ற மக்கள் மூவரில் நடுநாயகமாக உதித்தவர் சேயோன்.

ஆரம்பக் கல்வியைப் பண்ணாகம் மெய்கண்டானிலும் பின் சுழிபுரம் விக்ரோறியாவிலும் பெற்ற இவர் சங்கத்தின் பண்டித வகுப்புக்களில் வரன்முறையாகத் தொடர்ந்து படித்து 1968 இல் பண்டிதரானார்.

பின்பு க. பொ. த. உயர்பரீட்சையில் ஆங்கிலம் ஒரு பாடமாக எடுத்துச் சித்தியடைந்ததால் ஆங்கில ஆசிரியராக அரச நியமனம் பெற்றார்.

ஆசிரியராகச் சேவைபுரியும் காலத்தில் சுதந்திரமான புரட்சிக் கருத்துக்களைப் பரப்பினார். பொதுவுடைமைத் தத்துவம் பற்றிய நூல்களை நிறையப் படித்தார். தமது 18 ஆம் வயசில் "விடுதலை வேட்கை" என்னும் நூலை ஆக்கி வெளியிட்டார்.

இவரின் நடவடிக்கைகளில் சந்தேகங் கொண்ட அரசபடையினர் இவரைக் கைது செய்து வெலிக்கடைச் சிறையில் வைத்தனர். அங்கிருக்கும் காலத்திலேயே 1983 ஆம் ஆண்டில் தாக்குண்டு உயிர் துறந்த 53 கைதிகளில் இவரும் ஒருவர்.

இவரிடமிருந்த நூற்றைம்பதுக்கு மேற்பட்ட நூல்கள் இவரது குடும்பத்தினரால் யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்துக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

ஆதாரம்: பண்டிதர் ப. இராசகுரு நேரிற் கேட்டு எழுதியுதவியது.

# 9. பொன்னாலை

| | |
|---|---|
| வரகவி கிருஷ்ணபிள்ளை | 1898 — 1956 |
| வித்துவான் நடராஜன் | 1907 — 1981 |
| வித்துவான் பொன். முத்துக்குமாரன் | 1920 — 1989 |
| எழுத்தாளர் வரதர் | 1924 — |
| பண்டிதர் பொன்னம்பலவாணர் | 1948 — |

# வரகவி கிருஷ்ணபிள்ளை

## 1898 — 1956

பொன்னாலைக் கிராமத்தின் அங்கமாய் அமைந்தது நெல்லியான்பதி. அப்பதியில் வாழ்ந்த பேரம்பலம் கணபதிப்பிள்ளை என்பவர் இசைஞானமும் இனியகுரல் வளமும் வாய்ந்து உடல் வலிமையிலும் உயர்ந்து எடுப்பாக விளங்கியதனால் ஊர்மக்கள் அவரை ஆண்டியார் என்று சிறப்பித்துக் கூறலாயினர். ஆண்டி கணபதியாருக்கும் கற்பகம் அம்மையாருக்கும் மைந்தராக 10 – 01 – 1898 இல் தோன்றியவரே கிருஷ்ண பிள்ளை.

தந்தையாரைப் போலவே மைந்தர்கிருஷ்ணபிள்ளை யும் இசைஞானமும், கலையார்வமும் கொண்டிருந்தார். பொன்னாலை அ. மி. பாடசாலையிலும் பின் சுழிபுரம் விக்ரோறியா கல்லூரியிலும் அவர் கல்வி கற்றார்.

ஆடல் பாடல்களில் இவருக்கு ஆர்வம் கூடியிருப் பதை அவதானித்த தந்தையார், மூளாய்ச் சுதேச வைத்தியர் அண்ணாவி சுப்பிரமணியத்திடம் தமது மகனை ஒப்படைத்து நாடகத்துறையில் மேம்படச் செய்தார். கிருஷ்ணபிள்ளைக்கு முதலில் நகர்காவலர் (Police) வேலைகிடைத்தது. அந்தவேலை இவருக்குப் பொருந்திவராத காரணத்தால் சிலமாதங்களின் பின் விட்டுவிட்டார். பின் மலாய் நாடுசென்று அங்கு புகைவண்டிநிலைய அதிபராய் ஏற்ற வேலையையும் விட்டுவிட்டார்.

அந்தக் காலத்தில் யாழ்ப்பாண நகரில் சீனிவாச கம் தகரக் கொட்டகை என்ற நாடக அரங்கில் இந்திய நடிகர்களான N. S. கிருஷ்ணன், K. B. சுந்த ராம்பாள், M. R. கோவிந்தன் போன்ற நடிகர் களுடன் கிருஷ்ணபிள்ளையும் சேர்ந்து நாடகமாடினார்.

நாடகத்தில் பபூன் வேடம் ஏற்று நடிப்பதென்பது எல்லோருக்கும் சரிவராது. விகடமாகவும் சமயோ சிதமாகவும் பேசவும், உடனுக்குடன் ஏற்றவண்ணம் பாடவும் கூடிய ஆற்றல் வாய்ந்த கிருஷ்ணபிள்ளைக்கு அந்தப் பபூன் வேடம் வாய்ப்பாய் அமைந்ததனால் அவர் நாடகத்துறையில் அண்ணாவியாகும் தரத்தினை யடைந்தார்.

நெல்லியடிபுகழ் ஆழ்வார்ப்பிள்ளை, பபூன் செல்லையா என்போரோடுங் கூடிப் பலபல கவிகள் பாடினார். முன்னாளில் வாழ்ந்த ஆசுகவி காளமேகம் போல இவரும் நினைத்தவுடனே பொதுமக்கள் மத்தி யிலும் நாடகமேடைகளிலும் ஆலயதரிசன காலங் களிலும் கவிதைகள் பாடியுள்ளார். சமயோசிதமான அடுக்குமொழிகள் அழகிய கருத்திற் கூறுவார். இவர் ஒரு முறை கூறிய முன்னாளை புன்னாலை பின்னாலை இந்நாளை பொன்னாலை என்னாலை முன்னாலை என்பது ஒருபானை சோற்றுக்கு ஓரவிழ்பதம்.

இவர் ஆக்கிய கவிதைகளில் நூலுருவம் பெற்று வெளிவந்தவை 1. பனைப்பாட்டு அல்லது தாலபுரத்தார் கீதம், 2. நவரசக்கீதங்கள், 3. புதினப்பாட்டு, 4. பருளை முருகன் கீர்த்தனங்கள், 5. கந்தன் பாட்டு, 6. தீண்டாமை ஆசுகள், 7. காந்திப்பாட்டு கற்பனைப் பாட்டு ஹரிசனப் பாட்டு, 8. இயேசு நாதர் கீதங்கள், 9. தமிழர்பாட்டு, இவரெழுதி நடித்த நாடகங்கள் கிருஷ்ணலீலா, பவளக்கொடி, எதுநல்லவழி, (சமூக நாடகம்) தனிப்பாடல்கள், சரமகவிகள், வாழ்த்துப் பாக்கள் எனப்பலபல பாடிய வரகவி அவர்கள் தமது 58 ஆம் வயதில் காலமானார்.

ஆதாரம்: 1. வரகவியின் மகள் ஆசிரியை சகலகலாவல்லி சந்திரராசா கூறியவை.

2. யாழ். பல்கலைக்கழகக் கலைப்பீடமாணவி பங்கயச்செல்வி நடராசாவின் ஆய்வுக் கட்டுரை.

# வித்துவான் நடராசன்

## 1907 – 1981

பொன்னுலையைப் பிறப்பிடமாகக் கொண்ட க. கிருஷ்ணரின் மகனுகிய இவர், பின்பு யாழ்ப்பாண நகரில் வசித்தவர்.

முதலில் பொன்னுலை அமெரிக்கன் மிசன் பாடசாலையிலும், பின்பு சுழிபுரம் விக்ரோறியா கல்லூரியிலும் கற்றவர். மகாவித்துவான் கணேசையரிடம் குருகுல முறையிற் கற்றுப் பண்டிதரானவர். மானிப்பாய் இந்துக்கல்லூரியில் ஆசிரிய நியமனம் பெற்றுக் கடமைபுரிந்த சிலவருடங்களின் பின், சிதம்பரம் அண்ணுமலைப் பல்கலைக்கழகத்திற் சேர்ந்து கற்று வித்துவான், B. O. L. விருதுகள் பெற்ருர்.

மிகச்சிறந்த பேச்சாளராக, எழுத்தாளராக, கவிஞராக, நாடகவல்லுநராக விளங்கியவர். மாநாடுகள் பெரிய விழாக்களில் முன்வைத்துப் போற்றப்படும் புகழுக்குரியவராக இலங்கியவர். சைவசித்தாந்தத் துறையிலும் மேலோங்கிப் பலருக்கும் படிப்பித்தவர்.

கொழும்புத்துறை யோகர் சுவாமிகளைத் தமது ஆத்மார்த்த குருவாகக் கொண்டவர். சுவாமிபிள்ளைத் தமிழ் பாடியவர். யோகர் சுவாமி புராணம் பாடினரென்றும் சிலர் கூறுவர். சிவதொண்டன் பத்திரிகாசிரியராகப் பல்லாண்டுகள் பணி செய்தவர். இவர் எழுதிய கவிதைகள், கட்டுரைகள், விமர்சனங்கள் மிகப்பல. செய்தசமயச் சொற்பொழிவுகள், இலக்கியச் சொற்பொழிவுகளும் பல.

ஆதாரம் : 1. சிவதொண்டன் இதழ்
2. சுவாமி பிள்ளைத் தமிழ்.

# வித்துவான்
# பொன். முத்துக்குமாரன்
## 1920 — 1989

இவர் பொன்னாலைப் பிள்ளையார் கோயில் அர்ச்சகராய் வாழ்ந்த பொன்னுத்துரை ஐயரும் மாரிமுத்து அம்மாவும் பெற்ற நன்மகனாவர்.

முதலில் பொன்னாலை அமெரிக்கன் மிசன்பாட சாலையிலும், பின்னர் மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை, காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலை, சுழிபுரம் ஐக்கிய சங்கசைவ வித்தியாசாலைகளிலும் கற்று சி. பா. த. பரீட்சையில் சித்தியெய்தினார்.

1939இல் சிதம்பரம் அண்ணாமலைக் பல்கலைக்கழகத்திற் சேர்ந்து, 4 ஆண்டுகள் படித்து வித்துவான் விருது பெற்றார்.

வித்துவான் அவர்கள் யாழ்ப்பாணம் மீண்டுவந்து சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி, நெல்லியடி ஞானசாரியார் கல்லூரி, காரைநகர் யாழ்ரன் கல்லூரிகளிற் படிப்பித்தார். 1949இல் திரும்பவும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற் சேர்ந்து 2 ஆண்டுகள் படித்து B. O. L. பட்டதாரியுமானார். பின்பு திரும்பவும் காரை. யாழ்ரன் கல்லூரியிற் கற்பித்து, 1958 ஆம் ஆண்டில் வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய சேவையிற் சேர்ந்தார். 1969ஆம் ஆண்டு வரையும் 20 வருடங்கள் வித்துவானுடைய எழுத்தும் பேச்சும் கற்றறிந்தோர் போற்றும் உச்சநிலையில் இருந்தன.

தமிழ்மரபு (1955) சிலம்பின் சிறப்பு (1964) மாணவர் கட்டுரைகள் (1957) செந்தமிழ்த்தேன், இன்பத் தமிழ், தமிழிலக்கியம் என்ற நூல்கள் அவருடைய ஆக்கங்களாகும். அவற்றுட் சிலம்பின் சிறப்பு சாகித்திய மண்டலப் பரிசில் பெற்றது.

1976இல் ஓய்வூதியம் பெற்ற வித்துவான் 1989இல் சிவபதம் எய்தினார்.

ஆதாரம் : 1. பொன். முத்துக்குமாரன் நினைவுமலர் 1989
2. அவருடன் கூடிப்படித்து யாம் கேட்டறிந்தவை

# எழுத்தாளர் வரதர்

## 1924 —



வரதர் என்னும் பெயரில் பிரபலயமடைந்துள்ள தி. ச. வரதராசன் பொன்னுலைக் கிராமத்திற் பிறந்து வளர்ந்தவர். இப்போது யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையைத் தனது வதிவிடமாகக்கொண்டுள்ளார்.

இவரது தந்தையார் தியாகர் சண்முகம். தாயார் சின்னத்தங்கம். பிறந்த நாள் 1924 – 07 – 01 இவர் தனது ஆரம்பக் கல்வியைப் பொன்னுலை அ. மி. பாடசாலையிற் கற்ருர். பின்பு மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை, காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலை, சுழிபுரம் விக்ரோறியா என்ற பாடசாலைகளிற் படித்தார்.

மிகச்சிறுவயதிலேயே, பள்ளி மாணவனுக இருக்கும் போதே கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள் எழுதத் தொடங்கிய இவர் ஈழகேசரியில் தனது எழுத்துப் பணியைத் தொடங்கிஞர்.

இவர் தனது பதினேழாம் வயசிலேயே "நாவலர் கோன்" என்ற தனது முதல் நூலை வெளியிட்டார். நாற்பதின் முற்பகுதியில் இந்நூல் வெளிவந்தது. நாவலர் பெருமானின் பெருமையைப் புதியதலைமுறையினரும் அறியக்கூடிய முறையில் எளிமையும், இனிமையும் நிறைந்த தமிழ்நடையில் இஃது எழுதப் பட்டிருந்தது.

ஈழகேசரியில் எழுதிவந்த எழுத்தாளர் பலரை ஒன்று சேர்த்து "தமிழிலக்கிய மறுமலர்ச்சிச் சங்கம்" என்பதனை இவர் உருவாக்கி, அதன் செயலாளராகப் பணிசெய்தார். அச்சங்கம் இயங்கிய காலத்தில் இவர் வெளியிட்ட முதலாவது பத்திரிகை "மறுமலர்ச்சி". இந்த மறுமலர்ச்சி மாத இதழ் ஈழத்துத் தமிழிலக்கிய வளர்ச்சியில் புதிய பாதை வகுத்தது. புதிய எழுத்தாளர் பலரை உருவாக்கியது. சுமார் 4 ஆண்டுகளுக்கு மேல் மாத இதழாக வெளிவந்தது.

இவரது சிறுகதைகள், அந்தக் காலத்தில் தமிழ் நாட்டிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த "கிராம ஊழியன்", "பாரததேவி", "சந்திரோதயம்" போன்ற பலபத்திரிகைகளில் வெளிவந்துள்ளன.

இலங்கையில் முதன் முதலாக கவிதையிலேயே முழுவதுமாக வெளிவந்த "தேன்மொழி" என்ற மாத இதழின் ஆசிரியரும் வெளியீட்டாளரும் இவரே.

"ஆனந்தன்" மாத இதழ், வாரஇதழ்களும், "புதினம்" மாதமிருமுறை செய்தி மஞ்சரி, "வெள்ளி' மாதமிருமுறை, ஜனரஞ்சக பத்திரிகை என்பன பல்வேறு காலங்களில் இவர் ஆசிரியராக, வெளியீட்டாளராக இருந்து வெளியிட்ட பத்திரிகைகளாகும். தற்போது "அறிவுக்களஞ்சியம்" என்ற மாத இதழின் ஆசிரியராகவும் வெளியீட்டாளராகவும் இருந்து வருகின்றார்.

"வரதர் புதுவருடமலர்" என்றபெயரில் 45 வருடங்களுக்கு முன்னர் இவர் வெளியிட்ட மலர், ஈழத்து அறிஞர் பலரின் ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் நல்ல பலசிறுகதைகளையும் கொண்டுள்ளது. இன்றுள்ள தமிழிலக்கிய ஆய்வாளருக்கு இஃது அரியதொரு பொக்கிஷம்.

தமிழில் முதன் முதலாக ''டைரெக்டரி'' என்று சொல்லப்படும் நூலை ''வரதரின் பலகுறிப்பு'' என்ற பெயரில் இவர் வெளியிட்டுள்ளார், அதன் பிரதம ஆசிரியராக இவரே பணியாற்றினுர். சுமார் 5 ஆண்டுகளுக்கு மேல் வருடந்தோறும் இந்தப் ''பல குறிப்பு'' வந்துள்ளது.

திருக்குறளுக்குத் தெளிவுரை எழுதிச் சுமார் பதினுயிரம் பிரதிகளுக்குமேல் அச்சிட்டு மலிவுப் பதிப்பாக 65 சதம் விலையில் அதனை விநியோகம் செய்தது ஒரு பெரிய சாதனையாகும்.

''வேள்விப்பலி'', ''நாவலர் கோன்'', ''நாவலர்'', ''வாழ்கநீ சங்கிலிமன்ன'', ''கயமை மயக்கம்'' திருக்குறள் தெளிவுரை என்பன இவரெழுதி வெளியிட்ட நூல்களுட் குறிப்பிடத்தக்கனவாகும்.

சிறந்த எழுத்தாளராகவும் பத்திரிகையாளராகவும் விளங்கும் இவர் ''வரதர் வெளியீடு'' என்ற பெயரில் தமிழறிஞர் பலரின் நூல்களைப் பதிப்பித்து வெளியிடும் முயற்சியிலும் பணியாற்றி வருகின்றுர்.

ஆதாரம்: திரு. க. குமாரசுவாமி B. Sc. எழுதியுதவியது.

---

## பெண் பருவம் ஏழு

1. பேதை (1வயது முதல் 7வயது வரை). 2. பெதும்பை (7-11) 3. மங்கை (11-13) 4. மடந்தை (13-19) 5. அரிவை (19-25) 6. தெரிவை (25-31) 7. பேரிளம் பெண் (31-40)

# பண்டிதர் பொன்னம்பலவாணர்

## 1945—

### பிறப்பும் கல்வியும்

பொன்னாலைப் பிள்ளையார்கோவில் அர்ச்சகரான சிவத்திரு. பொன். தியாகராசா தந்தையார். தாயார் காமாட்சியம்மை. ஆரம்பக்கல்வியைப் பொன்னாலை வரதராயப் பெருமாள் வித்தியாசாலையிற் பெற்று, ஆண்டு 7 சித்தியெய்தியபின் வண்ணைவைத்தீஸ்வரா வித்தியாலயத்திலும், பின் சுழிபுரம் விக்ரோறியா கல்லூரியிலும் கற்று க. பொ. த. பரீட்சையில் சித்தியெய்தினர் ஆனைப்பந்தி உயர்கலைக் கல்லூரியில் பண்டிதர் செ. துரைசிங்கம் முதலானோர் நடத்திய பிரவேச பண்டித பாலபண்டித வகுப்புக்களில் வரன் முறையாகக் கற்று 1969இல் பண்டிதரானர்.

செட்டிகுறிச்சி உரையாசிரியர் கார்த்திகேசுவிடம் புராணபடனப் பயிற்சி பெற்றார். தமிழ்நாட்டிலிருந்து அவ்வப்போது வந்து சித்தாந்த வகுப்புக்களை நடத்திய வச்சிரவேலு முதலியார், தொண்டைமண்டல ஆதீனம் தற்புருஷ தேசிகர் என்போரது வகுப்புக்களிலும், தருமையாதீனத்தில் 1985இல் ஆதிமுருகவேள் நடத்திய சிவஞானபோத வகுப்பிலும் பங்குபற்றியவர்.

### ஈடுபட்ட முயற்சிகள்.

நல்லூர் கணபதீசுவர குருகுலத்திற் கற்றுச் சமஸ்கிருத பிரவேசபண்டித பரீட்சையிற் சித்தியெய்திய பின், அந்தக் குருகுலத்திற் சில ஆண்டுகள் கற்பித்தார். ஈழநாடு பத்திரிகையில் 1982 ஆம் ஆண்டிலிருந்து சில வருடங்கள் உதவியாசிரியராயும், பின் முரசொலிப் பத்திரிகையில் ஒப்புநோக்குநராயும் கடமைசெய்தார்.

## இவரின் ஆக்கங்கள்.

1. கமலை ஞானப்பிரகாசர் இயற்றியருளிய புட்பவிதி என்னும் செய்யுள் நூலுக்குப் பொழிப்புரை எழுதினர்.

2. "சைவசமயத்தின் சிறப்புக்கள்" என்றசிறுநூல் எழுதி வெளியிட்டார்.

3. இவரெழுதிய சனீஸ்வரன் என்னும் நூல் பொன்னாலை வரதராசப்பெருமாள் தேவஸ்தான வெளியீடாக முதலில் வந்தது. முரசொலிசிவராசா அவர்கள் அதனை இரண்டாம் பதிப்பாகப் பிரசுரித்துள்ளார்.

4. பொன்னாலை அரங்கநாதர் குடமுழுக்கு விழா மலரைத் தொகுத்து வெளியிட உதவிபுரிந்தார்.

5. அருளாளன் என்ற புனைபெயரில் ஈழநாடு பத்திரிகையில் வெள்ளிச் சிந்தனை எழுதினர். அதனை ஈழநாடு நிறுவனம் பாராட்டி, திருக்கேதீச்சரத்துக்குச் சிறப்பு நிருபராக அனுப்பி, கட்டுரைகளைத் தொடர்ந்து வெளியிடச் செய்தது. மில்க்வைற் அதிபர் கலாநிதி க. கனகராசா அவர்கள் வெள்ளிச் சிந்தனையைப் பாராட்டிச் சன்மானங்கள் பல வழங்கிப் பெருமைப் படுத்தியுள்ளார்.

6. இப்பொழுது காசிகாண்டத்துக்குப் பொழிப்புரை எழுதிக் கொண்டிருக்கிறார்.

ஆதாரம்: இவரிடம் நேரிற் கேட்டு யாம் எழுதியவை.

# 10. மூளாய்
# பண்டிதர் பொன்னம்பலம்
## 1868 — 1944

இவரது தந்தையார் சுப்பிரமணியம்; தாயார் மீனாட்சிப்பிள்ளை, இவருடன் பிறந்தவர் திருமதி ஆச்சிக்குட்டி கிருஷ்ணர்.

இவருடைய பிறந்த இறந்த தேதிகளையோ, இவர் கல்விகற்ற பாடசாலைகளையோ திட்டமாக அறிய முடியவில்லை. இற்றைக்கு 50 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவரென்றும், இறக்கும் போது இவருக்கு வயசு 77க்குக் குறையாமல் இருக்கு மென்றும் நன்கு அறிந்த பெரியோர் கூறுகின்றனர்.

இவர் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் கற்பித்தவர். நைட்டிகப் பிரமச்சாரியாக வாழ்ந்தவர். இவரிடம் சித்துக்கள் விளங்கின. ஓர் ஆண்டில் மூளாய்ச் சித்திவிநாயகப் பெருமான் தேர் விழா நாளில் மழை சோணவாரியாகப் பொழிந்தது. சுவாமி தேரில் அமர்ந்திருந்த வேளையில் மழை இடைவிடாது பெய்ததால் தேரிழுக்க முடியவில்லை. அந்தவேளையில் அன்பர் சிலர் இவரது வீட்டுக்குப்போய் இவரை அழைத்துக் கொண்டு கோவிலுக்குச் சென்றனர். இவர் விநாயகரை வணங்கித் திருநீறு அணிந்தார். மழை திடீரென நின்று விட்டது. இவர் மணல் அல்லது கற்குறுணிகளைத் தமது கையிலெடுத்து கற்கண்டு சாப்பிடுங்கள் என்று பிள்ளைகளுக்கு நீட்டுவார். அது கற்கண்டாகவே இருக்கும். தென்னைமரத்தில் அணிலை ஏவி விட்டுத் தேங்காய் பிடுங்குவிப்பாராம்.

இவரது பிற்காலத்தில் ஓய்வூதியம் பெறுவதற்கு அவசியம் தேவையான பிறப்புச் சாட்சிப் பத்திரம் இவரிடம் இருக்கவில்லை. அதனால் கவலையுற்றுத் தான் பிறந்த வருடப் பஞ்சாங்கமாவது கிடைத்தாலோ என்ற நினைவோடு நித்திரை செய்தார். அடுத்த நாட் காலையில் வீட்டுமுற்றத்தில் இவர் பிறந்த வருடப் பஞ்சாங்கம் கிடக்கக் கண்டு மகிழ்ந்தார்.

இவரின் சமகாலத்தவர் சோமசுந்தரப்புலவர், சைவப்பெரியார் சிவபாதசுந்தரம் முதலானோர். இவருடைய ஆக்கங்கள் எதுவும் கிடைக்கவில்லை.

ஆதாரம்: இவருடைய தங்கை ஆச்சிக்குட்டி கிருஷ்ணரின் மக்களாய் இன்று வாழும் சுப்பிரமணியம் சிவபாதசுந்தரம் என்போரைக் கண்டு கேட்டு யாம் எழுதியது.

---

## இயற்கை நிலை

இயற்கை ஆண் பெண் வடிவாகப் பொலிவது. அப்பெண் ஆண் சேர்க்கையால் உலகம் வளர்ந்து வருகிறது. ஆண்மகனும் பெண் மகளும் இயற்கையின் கூறுகவேயிருப்பவர். இயற்கைக் கூறுக உள்ள அன்னார், அதற்கியைந்த வாழ்வு நடாத்துவதே அறிவுவுடமை. மற்றைய உயிர்கள் இயற்கையுலகோடியைந்து வாழ்வு நடாத்துவது போல மக்களும் அத்தகைய வாழ்வு நடாத்தக் கடமைப்பட வேண்டும். தாவரம், பறவை, விலங்கு முதலிய எல்லா உயிரும் ஆண் பெண் சேர்க்கை வாழ்வையே நடாத்துகின்றன. அவ்வாறே மக்கள் வாழ்வும் இயற்கையோடியைந்திருத்தல் வேண்டும்.

திரு. வி. க.

# 11. வட்டுக்கோட்டை

| | |
|---|---|
| வரகவிகணபதி ஐயர் | 1709 — 1784 |
| சண்முகச் சட்டம்பியார் | 1794 — 1849 |
| நாகேசு ஐயர் | 1809 — 1857 |
| சிவசுப்பிரமணிய சிவாச்சாரியார் | 1849 — 1929 |
| புலவர் சேதுபேரனுர் | 1881 — 1942 |
| முதுதமிழ்ப் புலவர் நல்லதம்பி | 1896 — 1951 |
| சித்தாந்த வித்தகர் நாகலிங்கம் | 1894 — 1988 |
| முதலியார் சின்னத்தம்பி | 1907 — 1987 |
| மக்கள் கவிமணி இராமலிங்கம் | 1908 — 1974 |
| பண்டிதர் கதிரவேலுப்பிள்ளை | 1911 — |
| பண்டிதர் ஏகாம்பரம் | 1917 — 1983 |
| பண்டிதர் செல்வத்துரை | 1918 — 1977 |
| வித்துவான் பாலசுப்பிரமணிய ஐயர் | 1918 — 1993 |
| புலவர்மணி பண்டிதர் மயில்வாகனம் | 1919 — |
| கலாமேதை கயிலாயநாதன் | 1922 — 1993 |
| சிறப்புக் கலைமாணி செல்வரத்தினம் | 1938 — |
| கலாநிதி ஜெபநேசன் | 1940 — |
| பண்டிதர் கடம்பேசுவரன் | 1947 — |

# வரகவி கணபதி ஐயர்

## 1709 — 1784

இவர் தமிழ்நாட்டிலுள்ள காஞ்சிபுரம் என்னும் நகரிலிருந்து வந்து, வட்டுக்கோட்டையிலே குடியேறி வாழ்ந்தார். இவர் தமிழ் நாட்டுச்குத் திரும்பிச் சென்று கொண்டிருந்த வேளையில், திருவையாற்றிலுள்ள வைரவர் கோவிலொன்றிலே பசிக்களையுடன் படுத்துறங்கினர். அன்று நள்ளிரவில் திடீரென விழித்த இவர், தமக்குக் கவிதைபாடும் ஆற்றல் மிகுதியாக ஏற்பட்டிருப்பதை உணர்ந்தார் அப்பொழுதே அந்த வைரவப் பெருமான்மீது பதிகம பாடினுரென்று சொல்லப்படுகின்றது.

அவ்வமயம் வரகவியான இவர் தமிழ்நாட்டுத் தலங்கள் பலவற்றையும் தரிசித்துக் கொண்டு மீண்டும் வட்டுக்கோட்டைக்கு வரலானுர்.

இங்குள்ள இவரது உறவினருள் ஒருவராகிய சண்முக ஐயர் என்பவரால் சுந்தரி நாடகம் என்ற நூல் எழுதப்பெற்றுமுற்றுப் பெருதநிலையில்விடப்பட்டிருந்ததை அறிந்தார். கணபதி ஐயர் அதனை முற்றுறப் பாடியதோடு அதன் பெயரையும் ''வாளபிமன் நாடகம்'' என்று மாற்றியமைத்தார்.

வண்ணை வைத்தியலிங்கக் குறவஞ்சி, மலையகந்தினி நாடகம், அலங்கார ரூபன் நாடகம், அதிரூபவதி நாடகம், மார்க்கண்டன் நாடகம் என்பனவும் இவரால் இயற்றப்பட்டவை. இவரது நாடக இலக்கியங்களில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னுள் துணை வேந்தர் வித்தியானந்தன் அவர்கள் அலங்கார ரூபன் நாடகத்தினை 1962இல் அச்சிட்டு வெளியிட்டுள்ளார். பேராசிரியர் கா. சிவத்தம்பி வாளபிமன் நாடகத்தினை 1961இல் பதிப்பித்து வெளியிட்டுள்ளார்.

கணபதி ஐயர் வட்டுக்கோட்டைப் பிட்டியம்பதிப் பத்திரகாளி பதிகம், பத்திரகாளிதிருவூஞ்சல், வீரபத்திரர் பதிகம் என்பவற்றையும், பாடியுள்ளார்.

ஆதாரம் : 1. ஈழத்துத் தமிழ்க்கவிதைக் களஞ்சியம்
2. ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரித்திரம்.

# சண்முகச் சட்டம்பியார்

## 1794 — 1849

வட்டுக்கோட்டைச் சுவாமிநாதப் புலவரின் குமாரர் இவர். அராலி வடக்குச் செட்டியாமடத்தில் வாழ்ந்தவர். தந்தையாரிடம் ஆரம்பக் கல்வியைப் பெற்றபின்பு, இருபாலைச் சேனாதிராச முதலியாரிடம் தமிழிலக்கண இலக்கியங்களைக் கற்றுப் பாண்டித்தியம் பெற்றார். ஆங்கில மொழிப் புலமையும் உடையவராயிருந்தார்.

இவர் கிறித்த சமயத்தில் சேர்ந்து, வட்டுக்கோட்டைச் செமினரியில் தமிழாசிரியராகச் சேவை செய்தார். கிறித்தவப்பாதிரிமார் பலருக்கும் பிறர்க்கும் கற்பித்துள்ளார். பாவலர் சரித்திரதீபம் இயற்றிய ஆணல்ட் சதாசிவம் பிள்ளைக்கும் (1820 — 1895) இவரே தமிழ்கற்பித்தவர். ஆறுமுக நாவலரின் தந்தையான ஆராய்ச்சி கந்தப்பிள்ளையும் (1766 — 1842) இவரிடம் படித்தனரென்பர்.

சண்முகச் சட்டம்பியார் காலத்தில் சில்லாலையிலிருந்த வைத்தியரான சந்தியாப்பிளளையின் வேண்டுகோளை ஏற்று இவர் கிறிஸ்து நாதரின் அன்னையாரான மேரியை வாழ்த்தி 3 பாடல்கள் பாடினார்.

நெல்லாலை போல்வளரும் நீர்ப்பண்ணை சூழ்ந்திலங்கும்
சில்லாலை யென்னும் திருவூரில் — எல்லாரும்
போற்றுசரு வேசுரன்தாய் பொற்பாத தாமரையைப்
போற்று மனனே புகழ்ந்து

என்பது அப்பாடல்களில் ஒன்று.

ஆதாரம்: 1. தமிழ்ப்புலவர் சரித்திரம்
2. ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரித்திரம்
3. யாழ்ப்பாண கல்லூரிச் சஞ்சிகை

# நாகேசு ஐயர்

## 1809 — 1857

இவர் வட்டுக்கோட்டைக் கண்ணலிங்கேசுரர் ஆலயஅர்ச்சகராயிருந்த இராமசாமி ஐயரின் புதல்வர். நாகேசு பாரதிஎன்றும் அழைக்கப் பெற்றவர். நாடகப் புலவர் என்ற புகழ்படைத்தவர்.

அருச்சுன நாடகம், சுபத்திரைநாடகம் என்பவற்றை ஆக்கி, மேடையேற்றி மக்களின் பாராட்டைப் பெற்றவர். வட்டுக்கோட்டை அடைக்கலந்தோட்டம் கந்தசுவாமியார்மேல் நாணிக்கண்புதைத்தல் என்னும் துறையில் 100 செய்யுள்களைக் கொண்ட அடைக்கலங் கோவையை ஆக்கியவர். அந்த நூலிலிருந்து காப்புச் செய்யுள் ஒன்று தருகின்றோம்.

பொன்பூத்த நாரணன் வேதன் முதலபுத் தேளிரெல்லாம்
தென்பூத்த வேத முறையா லருச்சனை செய்தமரும்
மின்பூத்த வேல னடைக்கலங் கோவை விளம்புதற்குக்
கொன்பூத்த குஞ்சரச் செஞ்சரண் நெஞ்சினிற் கொள்ளுவனே.

கண்ணும்பிகை துதிப்பாடலொன்று கீழ்வருவது:

பொன்னுருந் தெக்கணப் பாயுறை புங்கவ தந்திமுக
முன்னரும் வைரவ யாழைப் பழிமொழி மோகனமார்
நன்னுமக் கண்ணகை யம்பிகை யேநனி நாற்பொருளும்
இன்னே யருளுக அம்மா இரத்தின இந்திரையே.

இப்புலவர் அமுத நுணுக்கம் என்னும் பெயருடைய விட வைத்தியநூலும் எழுதியுள்ளார்.

ஆதாரம்: 1. ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம்
2. ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரித்திரம்
3. கண்ணும்பிகை தோத்திர மாலை.

# சிவசுப்பிரமணிய சிவாச்சாரியார்

## 1849 — 1929

இவருடைய தந்தையார் நாகேசுஐயர். தந்தையார் காலத்திலிருந்தே இவர் வட்டுகண்ணலிங்கேசுரர் ஆலய அர்ச்சகராக விளங்கியவர். வேதம் ஆகமங்களில் வல்லவரான இவர் இலக்கியம் வைத்தியம் சோதிடம் என்பவற்றிலும் வல்லவராய் விளங்கினர். அக்காலத்து மக்கள் இவரை நாவன்னுஐயர் எனச் செல்லமாக அழைப்பர்.

இவருடைய நூல்களிற் பல இலங்கையிலும் தமிழகத்திலும் அச்சேறின. இவரும் அச்சுக்கூடம் வைத்திருந்து பல நூல்களைப் பதிப்பித்தவர். இவரியற்றிய ஏகாதசிபுராணம், அச்சிட்டு வெளியேறியதாயினும் இன்று அகப்படக் கூடியதாயில்லை. இவராற் பாடப் பட்ட தென் கோயிற் புராணம், விநாயகசட்டி புராணம், நல்லூர்க் கைலாசநாதர் புராணம் என்பன அச்சிடப்படவில்லை. கந்தசட்டி புராணம் இவராற் பாடப்பட்டு வட்டுக்கோட்டை வே. சதாசிவம் பிள்ளையால் 1895ஆம் ஆண்டில் அச்சேறி வெளியாகியது.

நெல்லைநாதர் பாடிய சிவராத்திரி புராணத்தைப் பரிசோதித்துப் புதுக்கிச் சென்னையிற் பதிப்பித்த இவர் சமயநூல்கள் பலவற்றை வடமொழியிலிருந்து தமிழிற் பெயர்த்தவர்களுள் தனியிடம் பிடித்துள்ளார்.

இவர்தாம் வாழ்ந்த சூழலில் அமைந்துள்ள ஆலயங்கள் பலவற்றிற்கு ஊஞ்சற்பாக்கள் பாடியுள்ளார்.

கண்ணும்பிகை சமேத கண்ணலிங்கேசர் பேரில் இவர் கலிவெண்பா, எச்சரிக்கை, கப்பற்பாட்டு, லாலி, மங்களம் என்பனவும் பாடியுள்ளார்.

ஆதாரம்: 1. வட்டு கண்ணலிங்கேசர் தோத்திரமாலை
2. ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம்
3. யாழ்ப்பாணக் கல்லூரிச் சஞ்சிகை.

# புலவர் சேதுபேரனுர்

## 1881 — 1942

வட்டு சிவன்கோவிலடியில் தோன்றிய இவர் 1942ஆம் ஆண்டு வரையும் வாழ்ந்துள்ளார். அவருடைய வயது அப்போது 60க்கு மேற்பட்டிருக்கலாமென அறிந்தோர் கூறுதலின் அவர்பிறந்த ஆண்டை 1881 எனக் குறிப்பிட்டோம். இவர் இந்தச் சூழலிலுள்ள கோவில்கள் பலவற்றுக்குத் திருவூஞ்சல் பாடியுள்ளார். இறந்தவர்களுக்குப் பாடிய சரமகவிகளும் பலவாகும்.

இவர் நாட்டுக் கூத்துகளின் அண்ணுவியாக விளங்கியவர். தருமபுத்திர நாடகத்தில் இடம்நோக்கி இடைச்செருகலாகப் பாடிய பாடல்களும் உள்ளன. சங்கரத்தைப்பிட்டியம்பதிப் பத்திரகாளியைத் துதிக்கும் பாடலொன்று வருமாறு;

தொண்டகப் பறைகள்டுண் டுண்டுண்டு டுண்டெனத்
துடிதிமிலே மளம ளென்னத்
துரிதமொடு மிருதங்கம் முரசினெடு தம்பட்டம்
தொந்ததோ என்று குமுற
தண்டைசிலம் பத்தி ஞெலி தந்ததா தித்தியெனத்
தருமேள நாக சின்னம்
தகதகத் திமியெனத் தந்ததா தம்மெனச்
சகலதே வருமேத் தவே
விண்டலந் தனிலுள்ள சத்தகன் னியரெலாம்
வீணைதம் புருமீட் டவே
விஞ்சையர்க ளாடவும் கவிவாணர் பாடவும்
வெகுவிநோ தத்து வழியாய்
சண்டமா ருதமென்ன நண்டலும் பூசையும்
தகுதியாய் எங்கு மோங்கத்
தலமோங்கு சங்கரத் தைப்பிட்டி யம்பதி
தங்குபத் திர காளியே.

இவரின்பேரனுர் பெயர் சேது. அதனுல் இவரைச் சேதுபேரனுர் என்பர். பெற்றுர் இவருக்குப் வைத்த பெயர் முருகுப்பிள்ளே.

ஆதாரம்; வட்டுசிவன் இந்துசமய விருத்திச் சங்க மலர். 1964

# முதுதமிழ்ப் புலவர் நல்லதம்பி
## 1896 — 1951

வட்டுக்கோட்டையில் உதித்த இவரின் தந்தையார் முருகுப்பிள்ளை. தாயார் தங்கம்மா. ஆரம்பக்கல்வி கற்கும் காலத்தில் இவருக்கு நாட்டுக் கூத்து, விளையாட்டுக்களிலே கூடிய நாட்டம் இருந்தது. எனினும் பாடசாலைப் பரீட்சைகளிலும் சித்தி பெற்று 1914 - 1915 ஆண்டுகளில் தெல்லிப்பழைப் போதனாமுறைப் பயிற்சிக் கல்லூரியிற் பயிற்சி பெற்றார். பயிற்றப்பட்ட ஆசிரியரான இவர் இந்தச் சூழலிலுள்ள பாடசாலைகள் சிலவற்றில் 1916 - 1918 வரையுள்ள காலப்பகுதியில் ஆசிரியராகச் சேவை செய்தார். 1918 நடுப்பகுதியில் கொழும்பு சகீராக் கல்லூரியில் ஆசிரிய நியமனம் பெற்றார்.

அந்தக் காலகட்டத்தில் தென்கோவை வித்தகம் ச. கந்தையாபிள்ளை அவர்களிடம் படித்தும், சிவங். கருணாலய பாண்டியப் புலவர்மணி திருநாவுக்கரசு போன்ற பேரறிஞர்களுடன் தொடர்பு கொண்டும் பண்டிதத் தேர்வில் சித்தியடைந்தார்.

1925 ஆம் ஆண்டில் சகீராக் கல்லூரியின் தலைமைத் தமிழ்ப் பண்டிதராகும் நிலையை எய்தினார். யாழ்நூல் தந்த வித்தகர் விபுலாநந்த அடிகளாருடன் மிக நெருங்கிப் பழகும் வாய்ப்பினைப் பெற்றார். அடிகளார் இவருக்கு எழுதிய திருமுகம் ஒன்றில், ''மனதுக்கினிய பெருங்குணத்து நல்லதம்பிப்பாவலன்'' என்று அழியாத செந்தமிழில் நற்சான்று பகர்ந்து விட்டேன். உங்கள் உணர்வும் உயிர்ப்பும் தமிழாக அமைவதாக. புலவர்கள்

தன்மானம் உடையவர்கள். கம்பரின் வழியில் வந்தவர்கள். கம்பர் தன்னைக் கனம்பண்ணாத சோழ மன்னனைப் பார்த்து,

> ''மன்னவனும் நீயோ வளநாடும் உன்னதோ
> உன்னையறிந் தோதமிழை ஓதினேன்''

என்று வீரமொழி கூறியது போன்று நாங்களும் மானமும் வீரமும் குன்றாதவர்களாகவே விளங்க வேண்டும். தமிழ்ப்பணி புரிவதே எங்கள் இனிய பணியாக இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டுளார்.

1932 - 1940 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் வானொலி விரிவுரை, பாலர்கள் இளைஞர்களுக்கான பல்சுவைக் கவிதைகள் வெளியீடு செய்தல், தென்னிந்திய ஆதீனத் தொடர்புகள் போன்றவற்றில் ஈடுபட்டார்.

இவரது நாவன்மை, பாவன்மை, புலமைத்திறங்களை நன்கறிந்து வியந்த தென்னிந்திய திருநெல்வேலித் தமிழ்ச் சங்கத்தார் 1940 ஆம் ஆண்டில் இவருக்கு முதுதமிழ்ப் புலவர் என்னும் விருது சூட்டிக் கௌரவித்தனர்.

நாமனைவரும் ஒரே இனத்தவரே. நம்மில் ஒவ்வொரு குழுவினர் ஒவ்வொரு தொழில் புரிபவர்களாய இருக்கலாம். எல்லாக் குழுவினரும் ஒரே மனித சாதியினரே. இவர்களுக்குள் வேற்றுமை பாராட்டுவது தர்மமோ நீதியோ ஆகாது. அன்பு, அறம், பண்பு, ஆசாரம், நல்லொழுக்கம் உடையவர்கள் எந்தக் குழுவினராயினும் அவர்கள் உயர்ந்தவர்கள். அவையில்லாதோரே தாழ்ந்தவர்கள் என்ற கொள்கையைக் கடைப்பிடித்த முதுதமிழ்ப் புலவர் அவர்கள் இலங்கை நாட்டில் தமிழர், சிங்களவர், சோனகர் யாவரும் ஒன்றுபட்டு வாழும் ஐக்கிய இலங்கையில் நம்பிக்கை கொண்டிருந்தார். 43 ஆண்டுகளுக்கு முன் அவர்

காலத்தில் அவ்வாறுய விருப்பம் இனிமை தரலாம். இன்றிருந்தால் புலவரின் மனநிலை அவ்வாறிருக்குமென இயம்புதல் அரிது.

1946 இல் இவர் இலங்கைப் பல்கலைக்கழக விரிவுரையாளராகவும் நியமனம் பெற்றுர். 1950 இல் ''மணித்தாய் நாடும் மரதன் ஓட்டமும்'' என்ற தலைப்புக் குறித்த நாடளாவிய கவிதைப் போட்டியில் முதலிடம் பெற்றுர்.

இவரால் ஆக்கப்பட்ட நூல்களில் முருகன் கண்ணி நுண்சிறுத்தாம்பு, இயற்கை விளக்கவாசகம் 1 - 5 வகுப்புவரை, நவமணிவாசகம் 1 - 7 வகுப்புவரை, பாலபோதினி 6 - 8 வகுப்புவரை, மொழிப்பயிற்சி வரிசை, இளைஞர்க்கான பாடல்கள் அச்சேறி வெளி வந்துள்ளன. முருகன், வெண்பாவிடுதூது, சகீராக் கல்லூரிக்கீதங்கள் என்பனவும் அச்சுவாகனம்ஏறியவை. இவரெழுதிய கட்டுரைகள் ''ஞாயிறு'' செந்தமிழ்ச் செல்வி என்ற சஞ்சிகைகளில் வெளிவந்தன.

சீரேறு மலர்க்காவும் செழும்பயிரின் விளைநிலனும்
காரேறு வரைக்குலமும் கவின்பொலிபே ராறுகளும்
வெள்ளியவான் மருப்புடைய விறலமையுங் களிற்றினத்தோடு
உள்ளுநரை நடுக்குறுத்தும் ஒளிச்செங்கட் புலிக்காடும்
மெல்லியலார் மூரலென விளங்குநகை வெண்முத்தும்
நல்லெழில் வெண்சங்கு நனிவிரவு மாழியுங்கொண்டு
அறிவுமலிந் துலகுவலன் அமர்ந்தவருந் திருவான
செறிவுமலி யிந்துவெனும் திறற்பரவை யிடைக்கிடந்து
திகழுமொரு நித்திலமே திருந்திலங்கை யெனத்துணிந்து
புகழுமொரு மலரணங்கே பொலிவுபெறு திருத்தாயே.

இஃது அவர்பாடிய இலங்கைத் தாய் வாழ்த்தின் ஒரு பகுதி.

அவரின் நூற்றுண்டு விழா கொண்டாடப்படவிருக் கும் 1996 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் அவருடைய ஆக்கங்கள் எல்லாம் அச்சிடப்பட்டு முழுமையாக வருமென்று எதிர்பார்க்கின்றேம்.

ஆதாரம்: 1. வட்டுஇளைஞர் மன்ற ஆண்டுவிழாமலர்
2. ஈழநாடு பத்திரிகையில் அறிஞர் பலர் தொகுத் துரைத்தவை.

# சித்தாந்த வித்தகர் நாகலிங்கம்

## 1894 — 1988

இவரின் பிறப்பிடம் தொல்புரம். தந்தையார் வேலுப்பிள்ளை. தாயார் மீனாட்சிப்பிள்ளை. திருமணம் செய்து வட்டுக்கோட்டையில் வாழ்ந்தவர்.

தமது கல்வியைச் சுழிபுரம் விக்ரோறியா கல்லூரியில் பெற்றார். சட்டக்கல்வி கற்க வேண்டுமென்ற ஆர்வத்தினால், அதற்கு அவசியமான லத்தீன் மொழியைக் கற்பதற்கு வட்டு யாழ்பாணக் கல்லூரியிற் சேர்ந்தார். அங்குப்படித்துச் ''சீனியர் கேம்பிறிட்ஜ்'' பரீட்சையில் சித்தியடைந்தார். பின்னர் சில மாதங்கள் வட்டு இந்துக்கல்லூரி ஆசிரியராகக்கடமை புரிந்தார். சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியிலும் சிறிது காலம் சேவையாற்றினார். மூளாய்ப் பண்டிதர் பொன்னம்பலம், கொழும்பு திருவிளங்கத் தேசிகர் என்போரிடம் சைவசித்தாந்த சாத்திரங்களைத் தெளிவாகக் கற்றார்.

இவர் கொழும்பு சட்டக்கல்லூரியிற் படிக்குங் காலத்துத் தனித்தமிழ் இயக்கத் தந்தையான மறைமலையடிகளின் தொடர்பு ஏற்பட்டது. மறைமலையடிகளைத் தமது குருவாகக் கொண்டார்.

யாழ்ப்பாணம் ஆரிய திராவிடபாஷாபிவிருத்திச் சங்கத்தின் உபதலைவராயிருந்து தமிழிற் புலமைபெறப் பலரையும் தூண்டினார். சைவபரிபாலன சபைத்தலைவராகவும், சைவவித்தியா விருத்திச்சங்க நிர்வாகிகளுள் ஒருவராகவும், வண்ணார் பண்ணைக் கலாநிலைய ஆய்வுக்குழு உறுப்பினராகவும் நீண்டகாலம் பணி புரிந்தார்.

இவருடைய பணி இந்தியாவிலும் இடம் பெற்றது. 1937ஆம் ஆண்டு பல்லாவரம் பொதுநிலைக் கழக ஆண்டு விழாவில் '' தமிழர் நாகரிகம் '' என்னும் பொருள் பற்றி ஆய்வுரை நிகழ்த்தினார். 1941 ஆம் ஆண்டு தென்னிந்திய சைவசித்தாந்த சமாசத்தில் '' திருமுறைகள் '' பற்றி ஆய்வுரை நிகழ்த்தினார். 1953 ஆம் ஆண்டு மேற்படி சமாசத்தின் ஆண்டு விழாத்தலைவராக இருந்து சிறப்பித்தார்.

சிறந்த சொல்வன்மையும் எழுத்தாற்றலும் திருமுறைகளைப் பண்ணுடன் ஓதும் சிறப்பாற்றலும் பெற்றவர் இவர். இவர் எழுதிய பல ஆய்வுக்கட்டுரைகளும் ஆக்கங்களும் செந்தமிழ்ச் செல்வி, சித்தாந்தம், இந்து சாதனம் போன்ற பத்திரிகைகளில் இடம் பெற்றன.

இவரது சிறப்புத் தகைமைகளையறிந்து இலங்கை அரசு இவருக்குச் சமாதான நீதிவான் விருது வழங்கிக் கௌரவித்தது.

இவர் '' முப்பொருளின் மெய்ம்மைதெரி சிவஞான போதமெனும் வளிமூழ்கிச், செப்பரிய மணிக்குவைகள் சுரையெடுத்து விளையுளாக்கும் செல்வம் மிக்கான் '' என்று புலவர்மணி சோ. இளமுருகனாரால் போற்றப் பட்டவர்.

ஆதாரம்: 1. திரு. S. லம்போதரன் எழுதியுதவியவையும்
2. பெரியோர் பலருடன் அளவளாவி யாம் கேட்டு எழுதியவையும்.

# முதலியார் சின்னத்தம்பி

## 1907 – 1987

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த செல்லப்பா தங்க முத்து என்னும் தந்தை தாயருக்கு மைந்தராக உதித்த இவர் தமது கல்வியை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிற் பெற்றார். ஆங்கிலத்தில் Inter Science என்னும் இடைநிலை விஞ்ஞான வகுப்புப் பரீட்சையில் சித்தியெய்தி இலங்கை சிவில் சேவையிற் சேர்ந்தார். நீதிமன்ற மொழிபெயர்ப்பாளராக, முதலியாராக நெடுங்காலம் பணியாற்றினர்.

இவர் காந்தியடிகளின் தத்துவங்களில் மிக்க பற்றுக் கொண்டவர். யாழ்ப்பாணம் வாலிபர் மகா நாட்டுப் பெருமக்களான ஹன்டிபேரின்பநாயகம், நேசையா, கலைப்புலவர் நவரத்தினம் என்போருடனும் நெருங்கிய கொள்கைத் தொடர்பு கொண்டவர். எந்த அரசியல் கட்சியுடனும் ஒன்றுபடாது, அவர்களின் சோசலிஷ சமதர்மக் கொள்கைகளை ஏற்றார்.

தனித்தமிழியக்கத் தந்தையான மறைமலையடி களுடனும், தமிழ்த்தென்றல் திரு. வி. கலியாண சுந்தர முதலியாருடனும் தொடர்பு பூண்டவர். இனிய கணீரென்ற குரலிலே செந்தமிழ்த்தேனில் காந்திய தத்துவங்களைக் குழைத்து, அவர் மாநாடுகளில் விரிவுரையாற்றுவதைக் கேட்பது பரவசமூட்டு வதாகும். மிகச்சிறந்த சொல்லின் செல்வர்களுள் தலையாயவராக அரை நூற்றாண்டு காலத்துக்கு மேற் போற்றப்பட்டவர்.

அகில இலங்கைக் காந்திசேவா சங்கத்தலைவராகப் பலவருடங்கள் இருந்து அரிய சேவைகள் ஆற்றியவர்.

குன்றக்குடியடிகளாரை இலங்கைக்கு அழைத்துத் தமது வீட்டிலே சில தினங்கள் தங்கச் செய்து, ஊர்கள் தோறும் அழைத்துச் சென்று அருள் நெறி மன்றக் கிளைகள் அமைத்து மகாநாடுகள் பல நடத்தச் செய்தவர்.

1987 ஆம் ஆண்டிலே அவர்களின் மறைவு அமைவதாயிற்று.

ஆதாரம் : 1. அவரின் மக்களிடம் கேட்டன.
2. யாம் நேரில் தொடர்பு கொண்டு அறிந்தன.

---

## நகையால் இரக்கமழிதல்

நகைப்பித்தால் சில இடங்களில் பெண்மக்கள் வாழ்வே குலைகிறது. ஒருத்தி மீது எத்தனை ஆயிரம் ஆயிரம் ஏறி ஏறி நிற்கின்றன. எத்தனை ஏழை மக்கள் உழைப்பு, பட்டினி, துயரம், கண்ணீர் ஒருத்தியின் கழுத்திலும் காதிலும் தலையிலும் ஏறி நிற்கின்றன. ஒருத்தி மீதுள்ள ஒரு நகை எவ்வளவோ ஏழை மக்களுக்கு உணவளிக்கும், உடையளிக்கும், தொழிலளிக்கும். ஏழை மக்களின் கலிதீர்க்கவல்ல பொருள் நகைச் சுமையாய்க் கிடப்பதால் என்ன பயன். நகைப்பித்து பெண்ணின் இயற்கையான இரக்க குணத்தைச் சிதைக்கிறது.

திரு. வி. க.

# மக்கள் கவிமணி இராமலிங்கம்

## 1908 — 1974

இவர் வட்டுக் கோட்டையில் வாழ்ந்த ந. முருகேசு தம்பதிகளின் மைந்தனுக 1908 இல் பிறந்தார். வட்டு யாழ்ப்பாணக் கல்லூரியிலே கற்று கேம்பிறிட்ஜ் சீனியர் பரீட்சையில் சித்தியடைந்தார். 1928 ஆம் ஆண்டில் இலங்கைப்புகையிரத சேவையிற் சேர்ந்தார். இலங்கையில் உள் நாட்டு இறைவரித்திணைக்களம் 1932 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டவேளையில், இவர் அச்சேவையில் இருந்து, பதவி உயர்ந்துயர்ந்து இறைவரி மதிப்பாளராஞர். 1963 ஆம் ஆண்டில் சேவையிலிருந்து ஓய்வு பெற்ருர்.

கிராம மக்களிடையே புழக்கத்தில் இருந்தனவும், இங்கொன்று அங்கொன்ருகக் கிடந்தனவுமான நாட்டார் பாடல்களைக் கிராமம் கிராமமாகத் திரிந்து, பொருளுமிழந்து, பெருஞ்சிரமங்களும் பட்டுத் தேடி யெடுத்து, அப்பாடலகளுக்குத் தமது கற்பனை மூலம் அழகான உருவங் கொடுத்துப் பதிப்பித்துப் பொது மக்களேயன்றிப் புலவர்களும் விரும்பிப்படிக்கச் செய்தார்.

நாடகாசிரியராக, நடிகராக, எழுத்தாளராக, கட்டுரையாளராக, வரலாற்று ஆராய்ச்சியாளராக, வாஞெலிப் பேச்சாளராகப் பலதிறப்பட்ட வகையில் நாட்டார்பாடல் மூலம் தமிழுக்குச் சேவை செய்தார். நவமணி ( 1941 ) என்னும் சமூகநாடகம், அசோக மாலா ( 1943 ) என்னும் சரித்திர நாடகம், இலங்கை நாட்டுப்பாடல்கள் ( 1961 ), கிராமக்கவிக்குயில்களின் ஒப்பாரிகள் ( 1960 ) வடவிலங்கை போற்றும் நாட்டார்பாடல்கள் ( 1961 ) களவுக் காதலர்

கையாண்ட விடுகதைகள் ( 1962 ) பொது அறிவு விடுகதைகள், தாலாட்டு ஒப்பாரி கும்மி தெம்மாங்கு பழமொழிகள் முதுமொழிகள் ஆகியவற்றை வகுத்தும் தொகுத்தும், அவற்றுட் பொதிந்த கருத்துக்களைச் சொல்நயம் பொருள்நயம் தோன்றக் கட்டுரைகளால் விளக்கியும் வெளியிட்டு அரிய பணியாற்றியுள்ளார்.

இவர் செய்து வந்த இவ்வரும் பணிகளைப் பாராட்டிக் கிழக்குமாகாண மக்கள் 1964 இல் மூதூரில் நடந்த தமிழ்விழாவில் பொற்பதக்கம் அணிந்து, ''மக்கள் கவிமணி'' என்ற விருதும் வழங்கிச் சிறப்புச் செய்தனர்.

இவருடைய புகழ் கடல் கடந்து அமெரிக்கா, ஐரோப்பாக் கண்டங்களிலும் பரவியது. செக்கோசில வக்கிய நாட்டு பிறேக் நகரைச் சேர்ந்த பேராசிரியர் கமெல் சுவெல்பில் என்பவர் திரு இராமலிங்கம் அவர்களைப் பற்றிக் குறிப்பிடுமிடத்து, ''இதுவரை துரதிர்ஷ்டவசமாகப் புறக்கணிக்கப்பட்டு வந்த ஒரு துறையிற் சிறந்த தொண்டாற்ற முன்வந்த பேரறிஞர்'' என்று எழுதியுள்ளார். தஞ்சாவூரைச் சேர்ந்த பீ. ஜீ. சுப்பிரமணிய ஐயர் என்பவர், ''நீங்கள் வெறும் எலும்புக் கூட்டுக்கு சதையும் இரத்தமும் சேர்த்து, அழகிய உருவாக்கி, அப்பாடல்கள் தோன்றுதற்குக் காரணமாயிருந்த சூழல்களை மந்திரவாதியைப்போல் அமைத்துக் காட்டுவதில் கைதேர்ந்தவராகக் காணப்படுகின்றீர்கள்'' என்று மக்கள் கவிமணிக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதும் காண்க.

மிகச்சிறந்த, செயற்கரிய செயல்கள் பலபுரிந்த மக்கள் கவிமணி இராமலிங்கம் அவர்கள் இருதய நோயினல் 1974 ஆம் ஆண்டில் தமது தூல உடம்பை விட்டு மறைவாராயினர். அவருடைய புகழுடம்பாகிய நூல்கள் என்றும் அழியாது நின்று நிலவும்.

ஆதாரம்; மக்கள் கவிமணியின் நினைவுமலரிலிருந்து.

# பண்டிதர் கதிரவேலுப்பிள்ளை

## 1911 —

வட்டுக்கோட்டைச் சிவன்கோவிலின் அயலில் வாழ்ந்து வரும் இவரின் தந்தையார் முருகுப்பிள்ளை. இளமைப் பருவத்துக் கல்வியைத் தொல்புரம் கந்தையா உபாத்தியாயரிடம் பெற்ருர். பின் தெல்லிப்பழை ஐக்கிய போதனு கழகத்திற் சேர்ந்து படித்து ஆசிரியர் பயிற்சியும் பெற்ருர். வித்துவான் கணேசையரிடம் குருகுல முறையிற் கற்றுப் பண்டிதர் தேர்வில் 1937 இல் சித்தியடைந்தார்.

இவர் 19 ஆம் வயசில் ஆசிரிய நியமனம் பெற்றுப் பாடசாலைகள் பலவற்றிற் படிப்பித்தாராயினும், இவருடைய 39 வருட ஆசிரியசேவையில் 29 வருடங்களை மானிப்பாய் மெமோறியல் கல்லூரி பெற்றது.

தமிழ்மொழி மரபு வழுவாது இலக்கண வரம்பு கடவாது வழங்க வேண்டும் என்பதில் இவர் இறுக்கமான போக்கு உடையவர். சமயசமூக சேவைகளிலும் ஆர்வமுடைய இவர், வட்டு சிவன் இந்துசமய விருத்திச் சங்க வகுப்புக்களில் தமிழும் சமயமும் நெடுங் காலம் கற்பித்தவர்

இவர் புகழ்விரும்பா இயல்புடையவர். ஆதலால் புகழ் நோக்கில் எதனையும் செய்தாரல்லர். எனினும் ஈழகேசரி (1933–34) இதழ்களில் சில கட்டுரைகள் எழுதியிருந்தமை தவிர வேறு இவரது ஆக்கமேதனையும் ஆதாரத்துடன் காணமுடியவில்லை. கற்பித்தலில் தனக்கென ஒரு வழிமுறையை உடையவரான இவரிடம் இத்திறனே ஏனையவற்றைக் காட்டிலும் மேலோங்கி இருந்தமையை அறிவோம்.

ஆதாரம் : முத்தமிழாசான் திரு. கி. துரைசுவாமி எழுதியுதவியது.

# பண்டிதர் ஏகாம்பரம்

## 1917 — 1983

இவர் வட்டுக்கோட்டையில் வாழ்ந்த நாகநாதரின் குமாரர். வட்டு யாழ்ப்பாணக் கல்லூரியிற் கற்று சீனியர் பரீட்சையில் தேறியவர். தமிழ்ப்பண்டித ராகவும், சைவப் புலவராகவும், சட்டத்தரணியாகவும் தராதரங்கள் பெற்றவர்.

இவர் கிராமசபை நீதிவானுகவும் சேவையாற்றி யவர். கந்தர்கலி வெண்பாவுக்கு இவர் உரையெழுதி யுள்ளார். அடைக்கலந்தோட்டம் கந்தசுவாமி கோவிற் பரிபாலன சபையின் தலைவராகவும் முகாமையாள ராகவும் ஆயுட்காலம் வரை சேவை புரிந்தவர்.

ஆதாரம் ; இவருடைய நெருங்கிய உறவினர் வைத்திய கலாநிதி திரு. க. நடராசா கூறியவை.

---

## அகத்தூய்மை

அகத்தில் நல்ல எண்ணங்களே தோன்றுமாறு மக்கள் பழகுதல் சிறப்பு. தீய எண்ணங்கள் அகத்திலுறுமேல் அவை உடல் வளத்தைக் கெடுத்து, வாழ்வையே சிதைக்கும். உடலோம்பலுக்கு முதல்முதல் வேண்டத்தக்கது அகத்தூய்மை. அதற்கு உரியது வாய்மை.

திரு. வி. க.

# பண்டிதர் செல்வத்துரை

## 1981 — 1977

இவர் வட்டுக்கோட்டை மேற்கில் பிறந்து, சங்கரத்தையில் திருமணம் செய்து வாழ்ந்தவர்.

மதுரைத் தமிழ்ச்சங்கப் பண்டித பரீட்சையில் சித்தியடைந்தவர். வட்டு யாழ்ப்பாணக் கல்லூரியிற் படித்து சீனியர் பரீட்சையில் தேறியவர். இலத்தீன் மொழியும் நன்கு பயின்றவர்.


1946 — 1976 வரை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஆசிரியராகக் கடமை யாற்றியவர். செயின்டன் (Sheinden) என்னும் ஆங்கில நாடக ஆசிரியர் எழுதிய பிசாக்கோ (Pizzago) என்னும் நாடகத்தைத் தமிழில் பிரதாபன் என்னும் பெயரில் எழுதி, வட்டு யாழ்ப் பாணக் கல்லூரியில் முன்னுள் C. S. S. மணிஐயர் உதவியுடன் அரங்கேற்றியவர்.

இவரிடம் படித்துப்பிரசித்தம் பெற்றவர்களில் பேராசிரியர் கைலாசபதி, தனஞ்சயராசசிங்கம், கனகசபாபதி, கவிஞர் முருகையன், சைவமணி சிவமகாலிங்கம் என்போர் குறிப்பிடத்தக்கவர்கள்.

சைவசித்தாந்த நூல்கள் ஆங்கில இலக்கியங்களை மனனமாக இரசித்துப் படிப்பிப்பது இவரிடம் காணப் பட்ட விசேடதிறமையாகும்.

ஆதாரம்: **பண்டிதர் ம. ந. கடம்பேசுவரன் அறிந்தோர் சிலரை யடுத்து ஆராய்ந்து எழுதியவை.**

# வித்துவான்
# பாலசுப்பிரமணிய ஐயர்
## 1918 — 1993



இவருடைய தந்தையார் வட்டு அடைக்கலந் தோட்டக்குறிச்சியில் வாழ்ந்த இரத்தினசாமி ஐயர். தாயார் செல்லம்மாள்.

இவர் முதலில் வட்டு. திருஞானசம்பந்த வித்தியா சாலையிலும் பின்பு வட்டு யாழ்ப்பாணக் கல்லூரியிலும் கற்று சி. பா. த. பரீட்சையில் தேறினர். 1941ஆம் ஆண்டு சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற் சேர்ந்து 4 ஆண்டுகள் படித்து 1945இல் வித்துவான் பட்டம் பெற்ருர். பின்னர்க் கொழும்புப் பல்கலைக்கழகக் கல்லூரியிற் கற்று கலைமாணிச் சிறப்பு (B. A. Hons) விருது பெற்ருர்.


முதலில் யாழ். இந்துக் கல்லூரியில் 5 ஆண்டுகள் ஆசிரிய சேவை செய்து, பின்பு வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரியில் ஒய்வு பெறும் வரை சேவையாற்றியவர். 1978ஆம் ஆண்டில் ஓய்வூதியம் பெற்ருர்.

வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச் சங்கத்தின் தொடக்க காலத் தலைவராயிருந்து பிரவேச பண்டித பால பண்டித வகுப்புக்களில் சமஸ்கிருதம், இலக்கணம் என்ற பாடங்கள் கற்பித்தவர்.

ஆதாரம்: இவருடைய நினைவு மலரில் உள்ளபடி

# புலவர்மணி, பண்டிதர் மயில்வாகனனார்

**1919 —**



வட்டுக்கோட்டை சிவன் கோவிலடியைச் சேர்ந்த கதிரேசு தம்பதிகளின் இளையமகனாக இவர் பிறந்தார். ஆரம்பக் கல்வியை வட்டுதிருநாவுக்கரசு வித்தியாலயத்திற் பெற்றார். 1934 ஆம் ஆண்டில் மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயத்திற் சேர்ந்து சி. பா. த. பரீட்சையிலும், யா. ஆ. தி. பா. சங்கப் பிரவேச பண்டித பரீட்சையிலும் 1937இல் சித்தியடைந்தார். 1938 இல் பாலபண்டித பரீட்சையில் தேறினார்.

1939இல் திருநெல்வேலி பரமேசுவர பண்டித ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிற் சேர்ந்து 3 ஆண்டுகள் படித்துப் பயிற்றப்பட்ட ஆசிரியராயும், யா. ஆ. தி. பா. சங்கம், மதுரைத் தமிழ்ச்சங்கம் இரண்டும் நடத்திய பண்டித பரீட்சைகளிற் சித்தி யெய்திய பண்டிதராயும் வெளியேறினார்.

1942இல் மாத்தளை சகீராக் கல்லூரியிலும், 1943இல் மாத்தளை விஜயா கல்லூரியிலும் ஆசிரிய நியமனம் பெற்றார், 1950இல் கொழும்பு விவேகானந்த வித்தியாலய ஆசிரியரானார். 1954இல் நீர் கொழும்பில் புதிதாக அமைக்கப்பட்ட விஜயரத்தினம் மகாவித்தியாலயத்தின் அதிபராகப் பொறுப்பேற்றார். 1964இல் சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்திலும், 1968இல் தொல்புரம் விக்கினேஸ்வர வித்தியாசாலையிலும் ஈற்றில் 1969இல் வட்டு திருநாவுக்கரசு வித்தியாலயத்திலும் அதிபராகச் சேவை செய்து அங்கிருந்தே 1978இல் ஓய்வூதியம் பெற்றார்.

1964இல் வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச் சங்கத்தை நண்பர்களுடன் சேர்ந்து தாபித்து. அதன் தலைவராய்ச், செயலராய் அமர்ந்தும், சங்கம் நடத்திய பிரவேச பாலபண்டித பண்டித வகுப்புக்களிற் கற்பித்தும் பண்டிதர் பலரை உருவாக்கினார்.

கவிதை பாடுவதில் வல்லவரான இவர் நீர்கொழும்புச் சித்திவிநாயகர் இரட்டை மணிமாலை, சிங்கமாகாளியம்மன் பதிகம். வட்டு விசுவேசர் மும்மணிமாலை, பிராட்டி வளவு வைரவப் பெருமான் ஊஞ்சல், ஞான வைரவர் அந்தாதி எனப் பத்துக்கு மேற்பட்ட கவிதை நூல்களை ஆக்கியுள்ளார். சங்கநூற் செஞ்சொல் ஓவியங்கள், காயத்திரி மந்திரம் போன்ற வசன நூல்களையும் ஆக்கியுள்ளார். காரைநகர்க் கார்த்திகேயப் புலவரியற்றிய தன்னையமக அந்தாதி, திக்கைத் திரிபந்தாதி என்ற நூல்களுக்கும் தெளிவான பொழிப்புரை எழுதியுள்ளார் அண்மையில் வட்டு விசுவேசர் புராணம் என்ற தலபுராண நூலை 1300 செய்யுள்கள் கொண்ட காப்பியமாக இயற்றியுள்ளார்.

02 - 04 - 1994இல் வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச்சங்கம் இவருடைய தமிழ், சமய, சமூக சேவைகளைப் பாராட்டிப் பவளவிழா விமரிசையாக நடத்திச் சிறப்பித்தது. அப்போது இவர் ''புலவர்மணி'' என்ற விருது சூட்டி, பொன்னாடையும் போர்த்தப் பெற்றார்.

ஆதாரம்: இவரிடம் 60 ஆண்டுகளாகப் பல்வித தொடர்புகள் பூண்டும் கேட்டும் யாம் எழுதியவை.

# கலா மேதை கயிலாயநாதன்
## 1922 — 1993

இவரின் தந்தையார் கணபதிப்பிள்ளை. வட்டுக் கோட்டையில் 1922 இல் பிறந்தார். தமது கல்வியை வட்டு யாழ்ப்பாணக் கல்லூரியில் தொடங்கிச் சீனியர் பரீட்சையில் சித்திபெற்றபின் சென்னைப் பல்கலைக் கழகத்திற் படித்துக் கலைமாணி(B. A.) விருது பெற்ருர்.

வட்டு இந்துக் கல்லூரி ஆசிரியராக, அதிபராகப் பல ஆண்டுகள் சேவை செய்தவர். சேவைக் காலத்தில் கல்வி டிப்புளோமா விருதும் பெற்றவர். இவருடைய துணைவியார் பண்டிதை இராஜேஸ்வரி அம்மையார். உயர்ந்த ஆங்கில மொழித்திறமையும், பேச்சு வன்மையும் கலையார்வமும் கைவரப் பெற்ற கயிலாயநாதன் அவர்கள் தமிழிலும் நிரம்பிய புலமை பெற்றவர். 1953 ஆம் ஆண்டில் அவர் எழுதி வெளியிட்ட ''தமிழ்மொழி விளக்கம்'' அரசின் அங்கீகாரம் பெற்று, உயர்வகுப்பு மாணவர்க்கு உற்றதுணையான நூலாக விளங்கியது.

இலங்கைக் கல்விச்சேவையின் முன்ஞள் அதிபராக, பலாலி ஆசிரிய பயிற்சிக் கல்லூரி ஆங்கில விரிவுரையாளராகச் சேவை செய்து ஓய்வூதியம் பெற்று வாழ்ந்த இவர் 1962 இல் வட்டுக்கோட்டைக் கலாநிலையத்தைத் தாபித்து, அதன் வெள்ளி விழாவை 1988 இல் கொண்டாடியவர். இசை, நடனம், நாட்டியம், மிருதங்கம் ஆகிய கலைகளை வளர்க்கும் கலைஞர் கலாமேதை.

இவர் திருப்பாவைத் திறவு (1970) சதியாவிதியா? சமூகநாடகம் (1986) திருவெம்பாவைத் திறவு (1986) அருணகிரி வருணனையில் அநுபூதி (1987) திருப்பொற் சுண்ணவிளக்கம் (1987) சகலகலாவல்லி மாலை மகத்துவம் (1987) விநாயகர் அகவல் விரிவாக்கம் (1989) என்னும் நூல்களையும் ஆக்கியுள்ளார்.

ஆதாரம்: இவரைக் கண்டு கேட்டு எழுதியவை.

# சிறப்புக் கலைமாணி
# செல்வரத்தினம்

## 1938 —

இவர் வட்டுக்கிழக்கு சித்தன்கேணி மயில்வாகனம் தெய்வானைப்பிள்ளை என்போரின் மகனுவர்.

ஆரம்பக் கல்வியை வட்டுதிருநாவுக்கரசு வித்தியா சாலையிற் கற்றபின்பு, ஐந்தாம் வகுப்புத் தொடக்கம் பட்டப்படிப்புவரை வட்டு யாழ்ப்பாணக் கல்லூரியிற் படித்தவர்.

தமிழ், சம்ஸ்கிருதம், பாளி என்ற மொழிகளில் சிறப்புக்கலைமாணி(B. A. Hons.) பட்டம் பெற்றவர். யாழ்ப்பாண பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறையிலும் டிப்புளோமா பட்டம் பெற்றவர்.

முதலில் கொழும்பு அரசினர் ஆயுர்வேத வைத்தியக்கல்லூரி விரிவுரையாளராக 1965 — 1969 வரையும் சேவை செய்தபின், காரை. இந்துக்கல்லூரி ஆசிரியராக இன்று வரை சேவை செய்து வருகின்றார்.

இவரின் ஆக்கங்கள் 1. உயிர்க்கூடு (சமூகநவீனம் 1964) 2. நளோபாக்கியானமும் இதோபதேசமும் 3. சம்ஸ்கிருத மொழிபெயர்ப்பு பயிற்சிகள். 4. வடமொழி இலக்கணச் சுருக்கம் 5. இந்து நாகரிகத்தில் கலைகள் 6. இந்து நாகரிகத்தில் அரசியல், பொருளியல் சமூகவியல்.

இவையேயன்றி ஆங்கில மொழிப் பயிற்சி நூல்களும் ஐந்து ஆக்கியுள்ளார்.

ஆதாரம்: பண்டிதர் ம. ந. கடம்பேசுவரன் இவரைப் பேட்டிகண்டு எழுதியவை.

# கலாநிதி ஜெபநேசன்

## 1940 —



1940 மார்ச் 28இல் பிறந்த இவர் ஆரம்பக்கல்வியைச் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியிலும், மேற்படிப்பை வட்டுயாழ்ப்பாணக்கல்லூரியிலும் பெற்றார். பேராதனைப் பல்கலைக்கழகத்திற் சேர்ந்து கலைமாணிப்பட்டம் பெற்றபின்பு, தமிழாய்வு செய்து தமிழியலில் முதுமாணிப்பட்டமும் பெற்றார்.

பின்பு கண்டி புனித அந்தோனியார் கல்லூரி ஆசிரியராகச் சில ஆண்டுகள் சேவைசெய்தபின் மதுரைப் பல்கலைக்கழகத்தில் இரண்டு ஆண்டுகள் மெய்யியல், சமயம் படித்து முதுமாணிப்பட்டம் பெற்றார். சேரம்பூர் பல்கலைக்கழக இறையியல் மாணி (B. D.), இலங்கைப்பல்கலைக்கழகக் கல்வியியல் பட்டப் பின்படிப்பு, டிப்புளோமா ஆகியவிருதுகளையும் பெற்றார். யாழ். பல்கலைக்கழகத்தில் அமெரிக்க மிஷனரிமாரின் கல்விப்பணியை ஆய்வு செய்து 1987இல் கலாநிதிப்பட்டம் பெற்றார்.

யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளராகச் சிறிது காலம் சேவைசெய்த பின்பு 1988ஆம் ஆண்டுதொடக்கம் 1993ஆம் ஆண்டின் நடுப்பகுதிவரை வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி அதிபராக விளங்கினார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்திற் கற்ற காலத்தில் ''இளங்கதிர்'' என்ற இதழின் ஆசிரியராய் இருந்தார். உதயதாரகை, யாழ்ப்பாணக் கல்லூரிச் சஞ்சிகை, விடிவெள்ளி (Morning Star) என்ற பத்திரிகைகளின் ஆசிரியராயும் திகழ்ந்துள்ளார்.

இவரின் ஆக்கங்கள் : அமெரிக்கமிஷனும் இலங்கையில் தமிழ் வளர்ச்சியும், யாழ்ப்பாணத்துக் கிறிஸ்தவக் கவிஞர்களும் கீர்த்தனைகளும், வண. டானியல் பூவர்கதை, பேராயர் சபாபதி குலேந்திரன் வாழ்க்கை வரலாறு, வட்டுக்கோட்டைச் செமினரியும் 19ஆம் நூற்றுண்டில் தமிழர் சிந்தனைப் போக்கில் ஏற்பட்ட மாற்றங்களும் என்பன. இலங்கையிலும் இந்தியாவிலுமுள்ள பல பத்திரிகைகளில் ஆராய்ச்சிக்கட்டுரைகள் பல எழுதிவருகின்ருர்.


1991 தொடக்கம் யாழ் பல்கலைக்கழகப் பேரவையுறுப்பினராகப் பணிபுரியும் இவர் 1993-06-12 இல் தென்னிந்திய திருச்சபையின் மூன்ருவது யாழ். ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்டுப் பொறுப்பேற்றுள்ளார்.

ஆதாரம் : 1994-05-06 இல் யாழ். தனிநாயகம் தமிழ்மன்றம் வெளியிட்ட செய்தியும்.

கலாநிதி ஜெபநேசனிடம் பண்டிதர் ம. ந. கடம்பேசுவரன் நேரிற் கேட்டறிந்தனவும்.

# பண்டிதர் கடம்பேசுவரன்

## 1947 –



வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவரின் தந்தையார் மயில் வாகனம் நவரத்தினம் ஆசிரியர். தாயார் பாக்கியம்.

வட்டு திருநாவுக்கரசு வித்தியாலயம், வட்டு இந்துக்கல்லூரி என்னும் பாடசாலைகளிற் கற்று சி. பா. த. விஞ்ஞானப் பரீட்சையிற் சித்தியடைந்தார். பின்பு யா. ஆ. தி. பா. சங்கத்தின் பாலபண்டித பண்டித வகுப்புக்களுக்கான கல்வியை மட்டுவில் பண்டிதர் ச. பொன்னுத்துரை அவர்களிடம் குருகுல முறையிற் கற்றூர். பண்டித பட்டத்தின் பின்னர் இலக்கண வித்தகர் நமசிவாய தேசிகர், ஏழாலை பண்டிதர் மு. கந்தையா, பண்டிதர் அ. ஆறுமுகம், ப[illegible] உமாமகேஸ்வரன், கலாநிதி க. ந. வேலன் [illegible]ற சான்றேர் சேர்க்கை சந்தேக நிவர்த்திக்கும் கல்வி வளர்ச்சிக்கும் பல்வேறு விதமான ஆளுமைக்கும் உதவுவதாயிற்று.

இலங்கைத் தொழில் நிறுவனத்தின் (I. L. O.) உதவியின் கீழ் நடத்தப் பெற்ற பயிற்சி நெறியில் பங்குபற்றி, தொழில் நுட்பக் கல்லூரியால் நடத்தப் பெற்ற பரீட்சையிற் சித்தியடைந்தார். அதனல் இவர் எக்கலை கைத்தொழிற்பேட்டையில் வேலை செய்ய வாய்ப்புக் கிடைத்தது. சிறிது காலத்தின் பின் வட்டுக் கோட்டைக்கு வந்து, சீநோர் வலைத்தொழிற்சாலையில்

தொழில்நுட்ப மேற்பார்வையாளராக 8 ஆண்டுகள் வேலை செய்தார். சொந்தத்தில் தாம் தொழில் நடத்துவதானல் பலருக்கு வேலை வழங்கவும், கூடுதலான வருமானம் பெறவும் வாய்ப்பிருக்கு மென்றெண்ணித் தமது வீட்டோடு "மாயன் தொழிற்சாலையை" நிறுவி, மின்னிணைப்பு மின்ஒட்டு திருத்துதல் வேலைகளை நடத்தி வந்தார். இந்தப்பத்து ஆண்டுகாலப் பகுதியின் இடையில் நூலகத்துறைக் கல்வியைப் பயின்று, நூலக விஞ்ஞான இடைத்தரவியற் பரீட்சையில் (Inter Library Science) சித்தியடைந்து வட்டுக்கோட்டை, சங்கானை, சுழிபுரம் பகுதிகளிலுள்ள நூலகங்களில் வேலை செய்தாராயினும், தமது பண்டிதக் கல்வியைப் பயன்படுத்தவோ வளர்க்கவோ அவை துணை செய்யாவெனக் கண்டு 1991 தொடக்கம் யாழ். புனித பத்திரிசியார் கல்லூரித் தமிழாசிரியர் சேவையினை ஏற்று பணி செய்து வருகின்றார்.

இவர் 1970—1990 இடைப்பட்ட காலத்தில் பத்திரிகையாளராயும் கடமையாற்றியுள்ளார். இக்காலகட்டத்தில் ஈழநாடு, உதயன், முரசொலி இதழ்களில் இவரின் கட்டுரைகளும், கவிதைகளும், தினகரன், வீரகேசரி இதழ்களில் விமரிசனங்களும் வெளிவந்தன. அவற்றுள் 13 உப பகுதிகளைக் கொண்ட கட்டுரைகளைத் தெரிந்தெடுத்து "மூலவேர்" என்னும் பெயரில் நூலாக 1993-12-27இல் வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச் சங்கம் வெளியிட்டுள்ளது. தற்பொழுது பண்டித மாணவர்களுக்குப் பாடங் கற்பித்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆதாரம்: இவரிடம் யாம் கேட்டு எழுதியவை

---

இவர் கற்பிக்கும் பாலபண்டித ஆரம்ப வகுப்பு மாணவி

வட்டூர்ப் பகுதியினில் வந்துதித்த வல்லவன்
மட்டிலா யாப்பறிவை மாணவர்க்கும் கட்டுரைக்கும்
செந்தமிழ்ச் செல்வன் கடம்பேசன் நோயின்றிச்
சந்ததம் வாழ்க தழைத்து.

— செ. இராஜேஸ்வரி

## 12. வடலியடைப்பு

| | |
|---|---|
| அருணாசல சாத்திரிகள் | *1857 — 1934* |
| பண்டிதர் சண்முகநாதன் | *1917 — 1980* |
| வித்துவான் சின்னத்தம்பி | *1921 —* |
| பண்டிதை தவமணி | *1941 —* |

# அருணாசல சாத்திரிகள்

## 1857 — 1934

அப்பாசாமிச் சாத்திரிகளின் குமாரராகிய இவர் தமது ஆரம்பக் கல்வியைச் சங்கானை வேலாயுத உபாத்தியாயரிடம் பெற்றார். நீர்வேலிச் சங்கரபண்டிதரிடம் வடமொழியை நன்கு கற்றார். ஆறுமுகநாவலரிடம் சைவசித்தாந்த சாத்திரங்களையும், வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளையிடம் இலக்கண இலக்கிய புராண நூல்களையும் கற்றார். நாவலருடைய வண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலையில் சில வருடங்கள் ஆசிரியராயும் இருந்தார்.

பின்னர்த் தமிழ் நாட்டுக்குச் சென்று தருக்கம், வியாகரணம், சோதிடம் முதலியன பயின்றார். அங்கு தங்கிய காலத்தில் சுவாமிநாத பண்டிதரின் சிவஞான மாபாடியப் பதிப்புக்குப் பலவகையிலும் உதவிகள் செய்தார். நாகபட்டினத்தில் வதிந்த காலத்தில், "ஞான பாஸ்கரன்" என்னும் மாத சஞ்சிகையை நடத்தினார்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை 1898 இல் உருவாகுவதற்குத் தமிழ்ப் பேரறிஞர் த. கைலாசபிள்ளையுடன் சேர்ந்து பாடுபட்டார்.

தாம்பிறந்த வடலியடைப்புக் கிராமத்தில் 1900 ஆம் ஆண்டில் சைவப்பிரகாச வித்தியாசாலையைத் தாபித்ததோடு அமையாது, அதன் அயலிலே மடாலயமாக இருந்த விநாயகர் ஆலயத்தை, ஊர் மக்களின் உதவி கொண்டு ஆகம முறைப்படி கருப்பக்கிருகம், மகாமண்டபம், தரிசனமண்டபம், வசந்த

மண்டபம் என்பவற்றுடன் கூடிய பெரியகோயிலாகக் கட்டுவித்து குடமுழுக்கு விழாவும் நடத்தினர், அந்தக் கோவிலின் பிரதம சிவாச்சாரியராய் விளங்கினர்.

வடமொழியிலுள்ள நூல்கள் பலவற்றை விரித்து எழுதியும், தமிழில் மொழி பெயர்த்தும் கலைத் தொண்டு புரிந்துள்ளர். ஆபஸ்தம்ப அபரப்பிரயோகம் என்ற நூல் அச்சேறி வெளிவந்தது. திரிபதார்த்த விளக்கம், வியோமவியாபி மந்திர விருத்தியுரை, அக்கினிகாரிய விருத்தியுரை, சித்தாந்த சாராவளி, பூர்வக்கிரியை என்பவற்றை வெளியிட விரும்பி முயன்றாராயினும் அந்தவிருப்பம் நிறைவேறவில்லை.

மாணவர் பலர் இவரிடம் சோதிடம், சைவசித்தாந்தம், சிற்பம் முதலியன கற்று, அந்தக் காலத்தில் புகழுடன் விளங்கினர்.

இவர் 13-04-1934 இல் பவ வருடப் பிறப்பிலன்று தமது 77ஆம் வயசில் சிவபதம் அடைந்தார். இவரை அண்ணுச்சாமி ஐயர் என்றும் அழைப்பர்.

ஆதாரம்: 1. ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரித்திரம்
2. 07-06-1954 இல் வெளிவந்த ஈழகேசரி இதழில் திரு. நா. பாலசந்திர விநாயகர் எழுதிய கட்டுரை.

---

"அறம் ஒன்றே வாழ்வின் நிலைப்பொருள்
அதனை அநுசரித்து ஒழுகும் நடைமுறைப்
பண்பே சமயம்; விளைவே
தெய்வப் பேறு."

— வட்டூர்க் கடம்பன்

# பண்டிதர் அ. சண்முகநாதன்

## 1917 — 1980

கந்தமடம் அம்பலவாணரின் குமாரரான இவர் வடலியடைப்பில் திருமணஞ் செய்து வாழ்ந்தார்.

தமிழாசிரிய தராதரப் பத்திரத்துடன் தமிழ்ப் பண்டிதர் பத்திரமும் பெற்றவர். சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி, பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி என்பவற்றில் ஆசிரியராக இருந்தவர்.

மகளிர் கல்லூரியில் இவர்கற்பித்த காலத்தில் சிலப்பதிகாரக் காப்பியத்தை ''சிலம்பொலி'' என்ற நாடகமாக எழுதி மேடையேற்றியவர். இந்த நாடகம் அகில இலங்கையிலும் புகழ்பெற்று விளங்கியது. இந்த நாடக வருவாய் கொண்டு, மகளிர் கல்லூரிப் பிரதான மண்டபமொன்று 1950இல் அமைக்கப்பட்டது.

இவர் மகளிர் கல்லூரியின் வளர்ச்சிக்கு மேலும் பாடுபட்டவர். உயர் வகுப்புக்களுக்குத் தமிழிலக்கியம், கணிதம், சமயம் படிப்பித்தவர். 1958 – 1960 இடைப்பட்ட காலத்தில் கல்லூரியில் பிரவேசபண்டித பாலபண்டித வகுப்புக்களை இலவசமாக நடத்தியுள்ளார்.

ஆதாரம் : 1. சங்கத்தின் பதிவேட்டில் உள்ளபடி.
2. புலவர் வேல் முருகனிடம் கேட்டவை.

# வித்துவான் சின்னத்தம்பி

## 1921 —



1921ஆம் ஆண்டிற் பிறந்த இவரின் தந்தையார் புளியங்கூடல் மகாமாரியம்மன் ஆலய அறங்காவலர் சுப்பிரமணியம். தாயார் வடலியடைப்புச் சிவகாமிப்பிள்ளை.

சின்னத்தம்பி முதலில் பண்ணுகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்திற் கற்று, சி. பா. த. பரீட்சையில் சித்தியடைந்தார். பின்பு கரம்பன் சண்முகநாத வித்தியாலயத்திலும் படித்தார். கொழும்புப் பல்கலைக் கழகத்தில் 3 ஆண்டுகள் படித்து வித்துவான் (டிப்புளோமா) பரீட்சையில் சித்தியடைந்தார். செட்டிகுறிச்சி யோகி கார்த்திகேசுவிடம் பண்ணிசை, புராணபடனம் என்பனவும் படித்தார்.

வித்துவான் சின்னத்தம்பி மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம், மானிப்பாய் மெமோறியல் கல்லூரி, வவுனியா மகாவித்தியாலயம், ஓமந்தை மகாவித்தியாலயம், யாழ். கனகரத்தினம் மகாவித்தி[illegible]ம் என்பவற்றில் 35 ஆண்டுகள் ஆசிரியராயிருந்[illegible]

இவர் புளியங்கூடல் செருத்தனைப்பதி மகாமா[illegible] திருப்பள்ளியெழுச்சியும், வைபவ மாலை என்பனவும், பணிப்புலம் முத்துமாரியம்மை திருப்பள்ளியெழுச்சியும் பதிகமும் பாடியவர். வண்ணை வேங்கடேசுவரன் தோத்திரப்பா மாலை, சீரணியந்தாதி, நீராவியடி விநாயகர் ஊஞ்சல் என்பனவும் பாடியுள்ளார்.

சொந்த பந்தம் நீயாகிச் சொத்தும் சுகமும் நீயாகி
எந்தத் திக்கிற் போனாலும் என்ன நிலையில் ஆனாலும்
வந்து சேர்ந்து வழிகாட்டி வாழ்வை யருளும் மகாமாரி
சிந்தை யினிலே யிருந்தடியேன் பந்தந் தீர்த்துக் காப்பீரே.

இஃது மகாமாரி வைபவ மாலையில் வருவது.

ஆதாரம் : இவரை நேரிற்கண்டு கேட்டு எழுதியது.

---

## புல்லர்கள் என்னும் பெயர்வரக் காரணம்

புல்லைப் போன்றவர்கள் புல்லர்கள். புல்லுக்கும் மரத்திற்கும் முக்கியமான வேறுபாடு ஒன்று உண்டு. புல்லுக்குப் புறத்தில் வைரம். மரம் அகவைரம் உடையது. இதனாலேயே, உயர வளர்ந்தாலும் மூங்கிலும் புல்லினமாகக் கொள்ளப்படுகிறது. இதனை,

"புறக்கா ழனவே புல்லென மொழிப"
"அகக்கா ழனவே மரமென மொழிப"

என, வேறுபடுத்திக் காட்டுவார் தொல்காப்பியர். மரத்துக்குப் பெருமை அதன் உள்ளீடாகிய வைரம். மனிதனுக்குப் பெருமை தருவது உள்ளீடாகிய அறிவு. இதனாலேயே உள்ளீடாகிய அறிவற்றவர்களைப் புல்லர்கள் எனக் குறித்தார்கள்.

[illegible]ல்லானாலும் புருஷன் என்பதற்கும் பொருள் இதுதான். உள்[illegible]ிய அறிவற்றவனாயிருந்தாலும் என் வினைக்கேற்ப வந்தவன். என, அவனையும் புருஷனாகத் தொழ வேண்டும் என்பது பொருளாகும்.

— கலாநிதி க. ந. வேலன்

# பண்டிதை தவமணி

**1941 —**

வடலியடைப்புக் கிராமத்திற் பிறந்து வாழும் இவரின் தந்தையார் சின்னத்துரை. இவர் தமது கல்வியை வடலியடைப்புச் சைவப்பிரகாச வித்தியாலயத்திலும், பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியிலும் பெற்ருர். பின்பு வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் பண்டிதர் துரைசிங்கம் முதலாஞேர் நடத்திய காவிய வகுப்பிற்படித்து 4 வருடங்களில் பண்டிதர் பரீட்சையில் சித்தியடைந்தார்.

நல்லை ஞானசம்பந்தர் ஆதினம் நடத்திய சைவ சித்தாந்த வகுப்புக்களிற் படித்து 1971இல் சைவசித்தாந்த வித்தகர் விருதும், 1972இல் சைவசித்தாந்த நல்லறிஞர் விருதும் பெற்ருர். சிங்கள மொழியில் S. S. C. தராதரப்பத்திரமும் 1972இல் பெற்ருர்.

1977இல் புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் ஆசிரிய நியமனம் பெற்ற இவர் இப்பொழுது பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியிற் கற்பித்து வருகின்

ஆதாரம் : இவரிடம் கேட்டு யாம் எழுதியவ .

# வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச் சங்கம்
# 1994

## காப்பாளர்

பண்டிதர், கலாநிதி கா. பொ. இரத்தினம்
இலக்கணவித்தகர், இ. நமசிவாயதேசிகர்
பேராயர் எஸ். ஜெபநேசன்

## நிர்வாகிகள்

**தலைவர் :**

அருட்புலவர், பண்டிதர் அ. ஆறுமுகம்

**துணைத் தலைவர் :**

புலவர்மணி, பண்டிதர் க. மயில்வாகனம்

**பொதுச் செயலர் :**

பண்டிதர் மு. சு. வேலாயுதபிள்ளை

**துணைச் செயலர் :**

சொல்வேந்தன், பண்டிதர் ப. இராசகுரு

**பொருளாளர் :**

சிவத்தமிழ்மணி, பண்டிதை பொன். பாக்கியம்

**... நிர்வாகிகள் :**

...டிதர் ம. ந. கடம்பேசுவரன்
பண்டிதர் வே. முத்துலிங்கம்
புலவர் க. தேவதாசன், B. O. L.
புல்வர் சு. சுந்தரம்பிள்ளை, B. O. L.
பண்டிதர் க. வைத்தீசுவரக் குருக்கள்
திருமதி நாச்சியார் செல்வநாயகம், M. A.
பண்டிதை யோகலட்சுமி சோமசுந்தரம், B. A.

# இந்நூல் வெளியீட்டுக்கு நிதியுதவி செய்தோர்

| | ரூபா |
|---|---|
| இச்சங்க நிர்வாகிகள் | 13251-00 |

**1. அராலி :**

| | |
|---|---|
| பேராசிரியர் சி. க. சிற்றம்பலம் | 1000-00 |
| பண்டிதை தையல்நாயகி சிவஞானரத்தினம் | 500-00 |

**2. காரைநகர் :**

| | |
|---|---|
| திரு. M. V. சுப்பிரமணியம் | 500-00 |
| பண்டிதை சரஸ்வதி யோகலிங்கம் | [illegible]00-00 |
| திரு. எஸ். விநாயகமூர்த்தி | [illegible]00-00 |
| புலவர் தேவகி சுந்தரராசா | 500-00 |
| திரு. த. சிவகுமாரன் | 250-00 |
| திரு. மு. சிவானந்தன் (கொழும்பு) | 1000-00 |
| திரு. சி. சிவானந்தரத்தினம் (கைதடி) | 1000-00 |

**3. சங்கானை :**

| | |
|---|---|
| திரு. மு. சிவானந்தம், M. A. | 1000-00 |

**4. சித்தன்கேணி :**

திருமதி சிவபாக்கியம் சுப்பிரமணியம்

**5. சுழிபுரம் :**

திருமதி சரசுவதி (பேப்பர்) சுப்பிரமணிய[illegible]
திருமதி பா. வன்னியசிங்கம் (திருநெல்வே[illegible]

**6. செட்டிகுறிச்சி + பணிப்புலம் :**

வித்துவான் மு. விருத்தாசலம்
திரு. க. தம்பையா

7. தொல்புரம் :

திருமதி பார்வதியம்மா சிவபாதசுந்தரம் 1000-00

8. பண்ணாகம் :

திருமதி செல்வரத்தினம்மா ஆறுமுகம் 1500-00

திரு. அ. நா. பொன்னையா (கனடா) 1750-00

9. பொன்னாலை :

திரு. கா. சந்திரராசா 1001-00

திரு. சு. கணபதிப்பிள்ளை 1000-00

திரு. தி. ச. வரதராசன் 500-00

10. [illegible] :

11. [illegible]டுக்கோட்டை :

[illegible]. மு. ந. மணிதிருநாவுக்கரசு 500-00

டாக்ரர் மு. ந. சிவச்செல்வன் (நைசீரியா) 2000-00

திரு. மு. ந. விவேகானந்தன் (இந்தோனேசியா) 4500-00

பண்டிதை இராசேஸ்வரி கயிலாயநாதன் 500-00

திரு. ம. செல்வரத்தினம், B. A (Hons) 500-00

[illegible]ய[illegible]ப்பு :

[illegible]தை தவமணி சின்னத்துரை 1000-00

[illegible]பா. பாலச்சந்திரன் 1000-00

[illegible]தி வத்சலாதேவி செ. 1000-00

[illegible]ான் சு. சின்னத்தம்பி (கோப்பாய்) 1000-00

தி. ச. வரதராசன் (வரதர்)
ஞாபகார்த்த அன்பளிப்பு
இல. 64/3, [illegible]
[illegible]

# வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச் சங்க வெளியீடுகள்

1. நாவலர் சரித்திர ஆராய்ச்சி 1970
— பண்டிதை பொன். பாக்கியம்

2. புறப்பொருள் வெண்பாமாலை ஆராய்ச்சி I 1973
— புலவர் நா. சிவபாதசுந்தரம்

3. பரவெளித் தத்துவம் 1981
— புலவர் நா. சிவபாதசுந்தரம்

4. புறப்பொருள் வெண்பாமாலை ஆராய்ச்சி II 1992
புலவர் நா. சிவபாதசுந்தரம்

5. புறப்பொருள் வெண்பாமாலை ஆராய்ச்சி III 1993
— புலவர் நா. சிவபாதசுந்தரம்

6. மூலவேர் 1993
— பண்டிதர் ம. ந. கடம்பேசுவரன்

[illegible]கம் 1994
— புலவர்மணி, பண்டிதர் க. மயில்வாகனம்

8. அருளமுத வள்ளம் 1994
— பண்டிதர் அ. ஆறுமுகம்

9. தமிழறிஞர் சரித்திரம் 1994
— சங்கம்